Registered as a News Paper


பக்கம் - 20

# ஈழநாதம்

விலை: 15.00

Weekly

நாதம்-15 வெள்ளி-11 07-13 மே 2004



ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 07 . 05 . 2004
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

# அரசின் கைகளில்...!

சமாதான முன்னெடுப்புக்கான அடுத்தகட்ட நடவடிக்கையை அரசே முன்னெடுக்கவேண்டும் என நோர்வேயின் சமாதான தூதுக்குழுவினர் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரூடாக சனாதிபதி சந்திரிகாவுக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

கிளிநொச்சிக்கு விஜயம்செய்த எரிக்சொல்ஹெய்ம் தலைமையிலான நோர்வேக் குழுவினர் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களுடனான சந்திப்பின் பின்பே கதிர்காமரூடாக இதனைத் தெரிவித்துள்ளனர்.

நோர்வேக் குழுவினர் இவ்வாறு தெரிவித்தமைக்கு புலிகள் சமாதான முயற்சிதொடர்பாக கொண்டிருக்கும் தெளிவான நிலைப்பாடேகாரணம்.

அரசியற்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்த நோர்வேக் குழுவினருக்குச் சமாதான முயற்சிகள் தொடரப்படுவதற்குப் புதிய எந்த நிபந்தனைகளையோ, கருத்துக்களையோ புலிகள் இயக்கம் முன்வைக்காது இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தையின் அடிப்படையிலேயே தொடரவேண்டுமென்பதையே வலியுறுத்தியுள்ளனர்.

இது சமாதான முயற்சிதொடர்பாக புலிகள் இயக்கம் கொண்டிருக்கும் நிலைப்பாட்டையும் மாற்றங்கள் எவையும் இல்லை என்பதையுமே காட்டிநிற்கிறது.

அந்தவகையில், புலிகளின் விருப்பத்தையும், யதார்த்தத்தையும் புரிந்துகொண்டே நோர்வேத்தரப்பினர் சமாதான நடவடிக்கை தொடர்பாக அடுத்தகட்ட நடவடிக்கை அரசின் கைகளில் இருப்பதை சுட்டிக்காட்டியுள்ளனர்.

முன்னைய ஒழுங்கின்படியும், இடைக்காலத்தன்னாட்சி, அதிகார சபைக்கான பேச்சின் அடிப்படையிலும், தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான புலிகளுடன் பேசுவதற்கு அரசு தயாராக இருக்குமானால் புலிகளின் தரப்பில் எத்தகைய இடர்களும் தோன்றப்போவதில்லை என்பதை நோர்வேசமாதானக் குழுவினர் புரிந்துகொண்டிருப்பதுடன் அரசு இதனைப்புரிந்துகொண்டு அடுத்த முயற்சிக்கு முன்வரவேண்டும் என்பதையே நோர்வே குழுவினர் வெளிப்படுத்தியுள்ளனர்.

அரசு இவற்றை ஏற்றுபேசுவதற்கான தெளிவான நிலைப்பாட்டை எடுக்கவேண்டும்.

அந்தவகையில் இப்போது சமாதான முயற்சிக்கான அடுத்தகட்ட நகர்வை அரசு விரைந்து எடுக்குமானால் சமாதான முயற்சியும் வேகமாக நகரக்கூடியசாத்தியக்கூறுகள் உண்டு.

புலிகள் தரப்பில் சமாதான முயற்சிதொடரப்படுவதற்கான தெளிவான சமிக்ஞைகளையும் விருப்பங்களையும் தெரிவித்தாகிவிட்டது.

புலிகளின் விருப்பம் என்பது கடந்த தேர்தலில் தொண்ணூறு சத வீதத்திற்கும் அதிகமான தமிழ் மக்களின் விருப்பமாக வழங்கப்பட்ட ஆணையின் அடிப்படையிலானதேயாகும்.

இதனையடுத்து அரசின் அடுத்தகட்ட நகர்வு எவ்வாறு அமையப்போகிறது என்பதைப்பொறுத்திருந்தே பார்க்கவேண்டும். ஏனென்றால், சமாதான முயற்சி முன்னெடுக்கப்படவேண்டிய அவசரமும், அவசியமும் அரசுக்கே அதிகம் உள்ளது.

## தூரனின் பார்வை

# நாட்டின் நலனா? கட்சிகளின் நலனா? இதுவே இனிவரும் போட்டி

சமாதானம் என்ற வார்த்தை மீண்டும் அதிகளவில் பயன்படுத்தப்படும் சொல்லாகிவிட்டது.

புதிய ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணிஅரசு மிகவும் பலவீனமான தொங்கு நாடாளுமன்றம் ஒன்றினை அமைத்து ஆட்சிப்பொறுப்பை ஏற்றுள்ள நிலையில் அரசில் இயங்கும் திரனை இயல்பு நிலைக்குக்கொண்டுவந்து நிர்வாகத்தை இறுக்கமாக்கி ஓரளவுக்கேனும் ஸ்திரமான நிலைக்குக்கொண்டுவர சனாதிபதி கடுமையாக உழைக்கும் அளவுக்கு ஆட்சி அமைத்துள்ள கூட்டணியின் பங்காளிக்கட்சித்தலைவர்கள் செயற்படுவதாக இல்லை.

இதற்குப் பலகாரணங்களை கூறமுடியும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் இடம்பெற்றுள்ள பிரதான கட்சிகளுக்கிடையேயான புரிந்துணர்வு என்பது பரஸ்பரரீதியில் விசுவாசமானதாகவும், நேர்மையானதாகவும் இன்னும் தெளிவாகச் சொல்வதானால் தேசிய நன்மைகருதிய நோக்கிலாவது ஒத்துழைப்புத்தன்மைகொண்டதாகவும் இல்லை.

நிறைவேற்றுஅதிகாரவலுக்கொண்ட சனாதிபதி தனது தலைமையின் கீழ் உருவாக்கம் கண்டுள்ள அரசின் எதிர்காலம் குறித்தசெயற்பாடுகள் பற்றிமட்டுமல்ல, சமகாலம் தொடர்பான விடயங்கள் குறித்தும் தோழமைக்கட்சிகளுடன் வெளிப்படையாகப் பேசி, கலந்துரையாடி, முடிவெடுப்பதற்கு விரும்பாத தன்னிச்சையாக முடிவெடுக்கும் பிடிவாதக் குணம்கொண்ட விட்டுக்கொடுப்புகளுக்கு இணங்கிப்போகும் தன்மையற்ற ஒருவராகவே தொடர்ந்தும் இருந்து வருகிறார்.

அவரின் இந்த ஒருதலைப்பட்ச தீர்மானத்துடன் கூடிய நடவடிக்கைகளின் முன்னெடுப்புகளோடு மனப்பூர்வமாக இணைந்து செயற்படுதல் என்பது கூட்டணியின் ஏனைய கட்சிகளுக்கேட்புடைய ஒன்றாக இல்லததால் அவைகளுக்கும் சனாதிபதிக்கும் இடையேயான இணக்கத்தன்மைகள் குறைந்து பிணக்குகள் ஏற்படும் நிலையும் உருவாகியுள்ளது. குறிப்பாக தேர்தலின் பின்னர் அசுரம்பலம் கண்டுள்ள ஜே.வி.பியினர் தற்போதை அரசில் தமது பலத்தை நிரூபிப்பதன்மூலம் தேசிய ரீதியில் மக்கள் மத்தியில் தாமே எதிர்கால அரசியல்கதாநாயகர்கள் என்ற தோற்றத்தை உருவாக்கவும், அரசியல் ரீதியில் தம்மைவலுவாக ஸ்திரப்படுத்திக்கொள்ளவும் தொலைநோக்குத்திட்டத்துடன் பன்முகப்பட்ட செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளனர் என்பது தெளிவான விடயமாகும்.



எந்தக்காரணம்கொண்டும் சனாதிபதி இப்போதைக்கு.... அதுவும் இன்றுள்ள அரசியல்சூழலில் தங்களுடன் முரண்பட விரும்பமாட்டார் என்பதை ஜே.வி.பி.யினர் நன்கு உணர்ந்தேயுள்ளதால் சனாதிபதியை அவரின் தற்போதைய பலவீனமான நிலையைப் பயன்படுத்தி வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் ஒருவிதமான அச்சுறுத்தலை விடுத்தவண்ணமே அவருக்கு ஆட்சியைத்தொடர உதவுவதுடன் தமது அரசியல் இலக்குகளை அடையும் நோக்கில் வியூகங்களை வகுக்கவும் செய்வர்.

இது சனாதிபதிக்கும் தெரியும். ஆனாலும் அவரால் முடிந்தவரைக்கும் ஜே.வி.பி.யினர் தன்னை மீறாமல் பார்த்துக் கொண்டு தந்திரோபாயமாகக் காய்களை நகர்த்தவே விரும்புகிறார் என்பதும் உண்மையேயாகும்.

ஜே.வி.பி.யினர் தன்னோடு பல விடயங்களில் முரண்பட்டாலும் கூட தன்னுடனான கூட்டை தற்போதைக்கு உடனடியாக முறித்துக்கொண்டு தனியாகச் செயற்படும் அளவுக்குப் போகமாட்டார்கள் என்பதும் தன்னுடன் இருக்கும்வரையில்தான் இப்போதைய அவர்களது அசுரபலம் நிலைத்திருக்கும் சாத்தியம் உண்டு எனவும் சந்திரிகாவும் நன்கு தெரிந்தவராகவே உள்ளார்.

ஆக இருதரப்பினருமே ஐ.தே. முன்னணியை தோற்கடிக்க சேர்ந்த கூட்டிலிருந்து விலகமுடியாத அதேசமயம் ஒட்டவும் முடியாத ஓடும் புளியம்பழமுமான உறவுநிலையிலேயே ஆட்சியை இழுத்துச்செல்லவேண்டியவர்களாகி யுள்ளனர்.

இதேவேளை அரசை ஆட்டிப்படைப்பவர்-அல்லது தீர்மானிப்பவர் என்ற வலுவான தகுதிக்கு உரிமை கோரும் ஜே.வி.பி.யினருக்கு சவாலாக 'அதுநாமேதான் நீங்களல்ல' என்று ஹெலஉறுமயவினரின் ஒன்பது உறுப்பினர்கள் இம்முறைதேர்தலில் வென்று தம்மை இனங்காட்டியுள்ளனர்.

ஜே.வி.பி.யினரோ, அரசோ எதிர்பார்க்காத ஒன்று.

சிங்களபௌத்தபேரினவாதம் மட்டும் பேசிக்கொண்டு, சமாதானத்துக்கு எதிராக வெளிப்படையாகவே பிரசாரம் செய்துகொண்டு, மஞ்சள் அங்கியும் விசிறியும் சகிதமாக வாக்குத்தானம் கேட்டு தேர்தல்களம் இறங்கிய ஹெலஉறுமயக்கட்சியின் ஒன்பது பிக்குமாரை, சிங்கள மக்கள் நவக்கிரகங்களாக நாடாளுமன்றத்திற்கு அனுப்பியுள்ளதானது ஒரு வரலாற்றுத் துயரம்தொடரவழிசமைத்திருக்கிறது.

அவர்கள் ஒன்பது பேரும் தங்களது முரண் நிலைகளை மட்டுமல்ல ஆட்டிப்படைக்கும் வாக்கு வலிமையையும் கூட சபாநாயகர்தேர்தலில் நிரூபித்து, இலங்கையில் அமைதி மற்றும் சமாதானம் குறித்த எதிர்கால செயற்பாடுகள் சாத்தியமாகுமா? என்ற சந்தேகத்தை உறுதிப்படுத்தினர்.

நிச்சயமாக ஹெலஉறுமயப் பிக்குகளின் ஆதரவு அரசுக்குத்தேவை. அவர்களோடு மோதுதலோ, முரண்படுதலோ எதிர்கால அரசியலுக்கு சாதகமான ஒன்றாக இருக்கப்போவதில்லை என்பதை சந்திரிகா உணர்ந்ததாலேயே அந்த நவக்கிரகங்களுடன் எத்தகைய மோதல் நிலையையும் உருவாக்க வேண்டாம் என அவர் ஜே.வி.பி.யினருக்கு அறிவுறுத்தல் செய்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால் ஜே.வி.பி.யினரும் ஹெலஉறுமயக்காரரும் மட்டுமல்ல டக்ளஸ்தேவானந்தா என்ற தனி உறுப்பினரும்கூட விடுதலைப்புலிகளுடன் - நோர்வே அரசின் அனுசரணையுடன் - சமாதான பேச்சுவார்த்தைகளை அரசு மேற்கொள்ள முயற்சிப்பதை முழுமையாகவே எதிர்ப்பவர்கள் என்பதால் சந்திரிகாவும் கதிர்காமரும் இணைந்து மேற்கொள்ளத் தொடங்கியுள்ள

(19ம் பக்கம் தொடர்ச்சி...)

# சந்திரிகா சமாதானம் செய்யப்போகிறார்?

நிலாந்தன்

திடீரென்று கதிர்காமர் குத்துக்கரணம் அடித்திருக்கிறார். சில வாரங்களுக்குமுன்பு அவர் திரும்பத் திரும்பச் சொல்லிவந்த எல்லாவற்றையுமே மறுதலிப்பதுபோல அவர் புலிகளை தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஒப்புக்கொள்ளும் தொனியில் கதைக்கத் தொடங்கிவிட்டார்.

இப்படி ஒரு குத்துக்கரணம் அடிக்க முன்பு இந்தியாவுக்கு இது பற்றி அறிவிப்பதே அவருடைய இந்திய விஜயத்தின் நோக்கம்.

இது ஏற்கெனவே எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். ஆனால் எதிர்பார்த்ததைவிடவும் சிறிது முந்தி நிகழ்ந்திருக்கிறது. அதற்கான அவசியமும் இருக்கிறது. வரும் பதினெட்டாம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது அவருடைய கூட்டு முன்னணி மற்றொரு தத்தைத் தாண்டவேண்டியிருக்கும்.

சபாநாயகர் தெரிவைப்போல அதிலும் தோற்காதிருப்பதென்றால் அவர்கள் தமிழரசுக் கட்சியைநோக்கிப் போவதை விட வேறுவழியில்லை.

ஹெலஉறுமய பிக்குகளை நம்பமுடியாது. அவர்களுடைய தர்மராட்சியத்துக்கும் சந்திரிகாவின் பொய்ச்சத்தியங்களுக்குமிடையில் உடனடியாக ஒரு ஒத்திசைவைக்காண்பது கடினம்போலுள்ளது.

எனவே சிறுபான்மையினக் கட்சிகளை வசப்படுத்துவதே உள்ள ஒரேவழி. தமிழரசுக்கட்சியை தன்னைநோக்கி அசைக்க முடியுமென்றால் முஸ்லிம் காங்கிரசும் தானாக அசைந்துவிடும் என்று சந்திரிகா நம்புகிறார்.

ஏனெனில், பேச்சுவார்த்தை அரங்கில் முஸ்லிம்களின் ஏகப் பிரதிநிதி தாமே என்று முஸ்லிம் காங்கிரஸ் கூறிவருகிறது.ஆனால் பேரியல் அஸ்ரப் இப்பொழுது சந்திரிகாவுடன் நிற்கிறார். எனவே பேச்சுவார்த்தை அரங்கில் பேரியல் அஸ்ரப்புக்கு முதன்மைதரப்படும் ஒரு நிலை தோன்றமுன்பே ஹக்கிம் சந்திரிகாவின் பக்கம் சாய்ந்துவிடக் கூடும் என்று ஒரு எதிர்பார்ப்பு கொழும்பு மீடியா வட்டாரங்களில் பரவலாக காணப்படுகிறது.

ஆறுமுகம் தொண்டமானையும் நம்பமுடியாது. அவர் நெடுகலும் ரணிலுடன்தான் நிற்பார் என்றில்லை. தமிழரசுக்கட்சியும் முஸ்லிம் காங்கிரசும் சமாதானத்தின் பெயரால் சந்திரிகாவை ஆதரிக்கும் ஓர் நிலை வந்தால் தொண்டமானும் தளம்பத் தொடங்கிவிடுவார்.

எனவே தமிழரசுக்கட்சியை முதலில் அசைக்கவேண்டும். அது அசைந்தால் பிறகு மற்றதெல்லாம் சரியாகிவிடும். இதற்கு சமாதானம்தான் உள்ள ஒரே உத்தி. எனவே சந்திரிகா சமாதானம் செய்யப்புறப்பட்டுவிட்டார்.

இதனால் அவருக்கு இரட்டை லாபம் உண்டு. முதலாவது, தனது கூட்டு முன்னணியை நாடாளுமன்றத்தில் பலப்படுத்தலாம். மற்றது, சமாதானத்தின் பெயரால் நிதி உதவிகளைப் பெற்று தனது தேர்தல்வாக்குறுதிகளை நிறைவேற்றலாம்.

உண்மையில் ரோக்கியோ நிதி உதவி எனப்படுவது இலங்கை அரசாங்கத்துக்குத்தான். அது ரணில் விக்கிரமசிங்கவுக்கோ அல்லது யு.என்.பி.க்கோ அல்ல. யார் சமாதானம் செய்கிறார்களோ அவர்களுக்கே நிதியுதவி.

இதையெல்லாம் நன்கு கணக்கிலெடுத்தே சந்திரிகா சமாதானம் செய்யமுன் வந்துள்ளார்.கதிர்காமர் அடித்த குத்துக்கரணம் என்பது சந்திரிகா அடித்த குத்துக்கரணம்தான். சந்திரிகாவேறு கதிர்காமர்வேறு அல்ல. இப்படிக் குத்துக்கரணம் அடிப்பது அவருக்குக் கைவந்தகலை. இப்பத்தியில் கடந்த கிழமை இதுபற்றிக் கூறப்பட்டிருக்கிறது. ரணில் விக்கிரமசிங்க மந்தமாக இருக்கும் வரையிலும் சந்திரிகாவின் குத்துக்கரணங்களே இனி இலங்கைத் தீவின் அரசியலை நகர்த்தப்போகின்றன.

கடந்த சுமார் ஓராண்டுகாலமாக அசையாது நிற்கும் சமாதான முயற்சிகளைப் பொறுத்தவரை, சந்திரிகாவின் குத்துக்கரணம் ஒரு நல்ல சகுனமே. ஆனாலும் அது கலங்கலான தெளிவற்ற ஒரு சமிக்ஞையே.

ஒரு புறம் அவர்கள் டக்ளஸ் தேவானந்தாவை அமைச்சராக்கிவைத் திருக்கிறார்கள். இன்னொருபுறம் புலிகளை தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் என்ற தொனிப்படக் கதைக்கிறார்கள். இதற்கு என்ன அர்த்தம்? டக்ளஸ் தேவானந்தாவை தமிழர்களின் பிரதிநிதியாக அவர்கள் கருதவில்லை என்று எடுத்துக்கொள்ளலாமா?

ஆனால் கதிர்காமரிடம் எல்லாவற்றுக்கும் பதில் இருக்கிறது. சந்திரிகாவின் குத்துக் கரணங்களுக்கு தத்துவ விளக்கம் கொடுக்கும் ஆற்றல் கைவரப்பெற்றவர் அவர். அவர் சொல்கிறார்... புலிகளுடன்தான் பேச்சுக்கள். ஆனால் பேச்சுவார்த்தை அரங்குக்கு வெளியே ஏனைய தமிழ்கட்சிகளுடனும் கலந்தாலோசிக்கப்படும் என்று.

இது தவிர, தமது சமாதான முயற்சிகள் தொடர்பாக ஜே.வி.பி.யிடம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்றதொனிப்பட அநுரா பண்டாரநாயக்கா கூறியிருக்கிறார். ஆனால் ஜே.வி.பி.யோ வேறுவிதமாகக் கதைக்கிறது.

இப்படி அவர்களுடைய சமிக்ஞை தெளிவற்றதாக கலங்கலாக இருப்பதால் தான் நோர்வே கேட்கிறது எல்லாவற்றையும் எழுத்தில் தரும்படி. எங்காவது யாரிடமாவது எதையாவது எழுத்தில் தரும்படி கேட்கப்படுகிறது என்றால் அங்கே ஏதோ நம்பிக்கையீனம் இருக்கிறது என்றே அர்த்தம். அதாவது, நோர்வே சந்திரிகாவின் வார்த்தைகளை அப்படியே நம்பி ஏற்றுக் கொள்ளத்தயாரில்லை என்று அர்த்தம்.

இது தான் தமிழர்களின் நிலையும். சந்திரிகாவை எடுத்த எடுப்பில் உடனடியாக நம்பிவிடமுடியாது. அவர் சமாதானத்துக்காக சமாதானம் செய்யவரவில்லை. தனது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை நாடாளுமன்றத்தில்பலப்படுத்தவும் சமாதானத்தின் பெயரால் நிதியுதவிகளைப் பெறவுமே அவர் சமாதானம் செய்யப்போகிறார். அதாவது, அவரைப்பொறுத்தவரை சமாதானம் ஒரு தந்திரமே.

ஒரு விதத்தில் இது தமிழர்களுக்கு பாதகமான அம்சம்போலத் தோன்றும் அதாவது, சந்திரிகா சமாதானத்துக்காக சமாதானம் செய்யமுன்வரவில்லை என்பது. ஆனால் இன்னொருவிதத்தில் இதுவே தமிழர்களுக்கு மிகவாய்ப்பான ஓர் அம்சமாகவும் காணப்படுகிறது.

அதாவது, நாடாளுமன்றத்தின் ஸ்திரமின்மையே இப்பொழுது தமிழர்களுக்குள்ள பலம். இது மெய்யான சமாதானத்துக்கு மிகப் பாதகமான ஓரம்சம்தான். ஆனால் இலங்கைத் தீவில் எந்தவொரு சிங்களத் தலைவருமே மெய்யாகச் சமாதானம் செய்வதில்லை. ரணிலும் சரி சந்திரிகாவும் சரி இதற்கு முன்பிருந்த பிறேமதாச ஜெயவர்த்தன என்று யாராயிருந்தாலும்சரி எவருமே விசுவாசமாகச் சமாதானம் செய்ததில்லை. தமது கட்சியைப் பாதுகாப்பதற்காக அல்லது தமது தனிப்பட்ட எழுச்சிகளைப் பாதுகாப்பதற்காக அல்லது புறநிர்ப்பந்தங்களை வெற்றிகரமாகக் கையாள்வதற்காக அல்லது உள்நாட்டு நெருக்கடிகளை திசைதிருப்புவதற்குமாகவே இவர்கள் எல்லாரும் சமாதானம் செய்தார்கள். செய்கிறார்கள்.

எனவே மெய்யான சமாதானத்தைப் பற்றிச் சிந்திக்கும்போதுதான் ஸ்திரமான நாடாளுமன்றத்தைப் பற்றியும் கவலைப்படவேண்டியிருக்கும். ஆனால் அவரவர் தன்தன் தனிப்பட்ட பேராசைகளுக்காகச் செய்யும் சமாதானத்தில் நாடாளுமன்றம் எக்கேடுகெட்டாலும் அதில் தமிழர்களுக்கு நட்டமெதுவுமில்லை.

சிங்களத் தலைவர்கள் சமாதானத்துக்கு விசுவாசமில்லை எனவே தமிழர்கள் சிங்களத் தலைவர்களுக்கு விசுவாசமாய் இருக்கவேண்டிய தார்மீக கடப்பாடு ஏதுமில்லை. அவர்களுடைய நாடாளுமன்றத்தை அவர்களுக்குச் சார்பாக பலப்படுத்தவேண்டுமென்றுமில்லை.

மாறாக நாடாளுமன்றம் ஸ்திரமற்றிருந்தால்தான் சிங்களத் தலைவர்கள் தமிழர்களிடம் தங்கியிருக்கும் ஒரு நிலை தொடரும். அப்பொழுதுதான் சிங்களத் தலைவர்கள் தமிழர்களைத் தேடிவருவார்கள் அவர்கள் அப்படி இறங்கிவரும்போதே தமிழர்கள், சமாதானத்தை தமக்குச் சாதகமாக அசைக்க முடியும். அதாவது சமாதானத்தை சிங்களத் தலைவர்களின் நோக்குநிலையிலிருந்து அசைப்பதற்குப்பதிலாக ஆகக்கூடியபட்சம் தமிழர்களின் நோக்குநிலையிலிருந்து. அசைக்கமுடியும்.

ஏறக்குறைய அப்படியொரு நிலைதான் இப்பொழுது காணப்படுகிறது. இது தான் இலங்கைத்தீவின் துயரம். மெய்யான சமாதானத்துக்கு மிகவாய்ப்பற்ற ஒரு சூழலே தமிழர்கள் தம்மைப்பலப்படுத்துவதற்கு மிகவாய்ப்பாய் இருக்கிறது என்பது.


இது தான் சரியான தருணம். தமிழர்களின் நோக்கு நிலையிலிருந்து சமாதானத்தை வியாக்கியானம் செய்யவும் முன்னெடுக்கவும் இது மிக வாய்ப்பான காலம்.

சந்திரிகாவை நம்ப முடியாது. *திருவிளையாடல* திரைப்படத்தில் வரும் வசனத்தைத் திருப்பிச் சொன்னால்.... அவரை நம்பமுடியாது. நம்பவும்கூடாது. அவர் சமாதானத்துக்காக இப்படி திடீர் குத்துக்கரணம் அடித்ததைப்போல பிறகொருநாள் யுத்தத்துக்காகவும் குத்துக்கரணம் அடிக்கமுடியும்.

பிரபல சிங்கள எழுத்தாளரான குணதாசஅமரசேகர சந்திரிகாவை Liberal Wind Bag என்று வர்ணித்துள்ளார். ஒக்ஸ்போட் ஆங்கில அகராதியில் உள்ள அர்த்தத்தின் படி Wind Bag என்றால் சுவாரஸ்யம் அற்றதும் முக்கியத்துவம் அற்றதுமாகிய வசனங்களே அதிகமதிகம் கதைக்கும் ஒரு நபர் அதாவது, தாராளத் தன்மை வாய்ந்த ஒரு வாயாடிப் பேர்வழி என்று பொருள்.

இந்த வாயாடியை நம்பி சமாதானம் செய்வது என்பது, நோர்வேயைப்பொறுத்தவரை வழிப்பறித் திருடனை வழித்துணைக்கு அழைத்துச் செல்வதற்கு நிகரானது. இதில் இரண்டு விதமான முடிவுகளுக்கு இடமுண்டு.


ஒன்றில், இருக்கின்ற கொஞ்சநஞ்ச "சமாதானத்தையும்" அதாவது யுத்தநிறுத்தத்தையும் இழப்பதில் முடியலாம். அல்லது கள்வனையே காவல் காரனாக நியமிப்பதன் மூலம் திருட்டைக்கட்டுப்படுத்தலாம். என்ற கிராமப்புறத்து நம்பிக்கையை மெய்ப்பிப்பதாகவும் முடியலாம். ●



லக்ஸ்மன் கதிர்காமர்



சந்திரிகா குமாரதுங்க



ஆறுமுகம் தொண்டமான்



ரவூப் ஹக்கீம்

# நறுக்கென...

## அரசுக்கு நெருக்கடி —— சந்திரிகாவுக்கு வேறுவழி?



உலகத்தில் எங்குமே சமாதானத்திற்கான பாதை இலகுவானதாக அமையவில்லை"

இது நோர்வேத்தூதரின் கருத்து: சரியான கருத்தொன்றினைச் சரியான தருணத்தில் கூறியுள்ளமைக்காக அவரைப் பாராட்டலாம்.

சிறிலங்காவில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ஏற்பாட்டாளர்பணியைப் பொறுப்பேற்க 'சமாதானத்திற்கான யுத்தம்' என்ற வழிமுறையை உருவாக்கி வரலாறுபடைக்க முயன்று படுதோல்வியடைந்த சனாதிபதி சந்திரிகாவால் அழைப்புவிடுக்கப்பட்ட நிலையில் அதனை எப்படிப் பொறுப்பேற்று முன்னெடுப்பது என்று யோசித்தபோது அவருக்கு இந்தக் கருத்தை கூறவேண்டும் போல தென்பட்டிருக்கலாம்...

கடந்த அரசின் காலத்தில் சமாதான நகர்வுகளை எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியில் நோர்வே முன்னெடுக்கமுயன்ற வேளையில் இதே சனாதிபதியும் தோழர்களுமாக அதனை சகல வகையிலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் எதிர்த்த வரலாறு நோர்வேக்கு தெரியாததா என்ன?

'கெட் அவுட்' (வெளியே போ) என்று வெளிப்படையாகவே நோர்வேயை அவமதித்தவர்கள்...

எரிக்சொல்ஹெமின் கொடும்பாவியை எரித்து சுற்றிநின்று கூத்தாடியவர்கள்...

நோர்வே புலிகளுக்கு தமிழீழத்தை பிரித்துக் கொடுக்க சதிசெய்கிறது என்று குற்றம் சாட்டியவர்கள்...

இப்போது வெட்கங்கெட்டுப்போய் நோர்வே அரசின் கால்களில் விழுந்துள்ளார்கள்...

இது சமாதானத்தின் மீதான பற்றாலா?

அல்லது தமிழ்மக்களுக்கு நீதி வழங்கவேண்டும் என்ற விருப்பாலா?

இரண்டுமே அல்ல... சர்வதேச அழுத்தம் ஒருபுறம், அரசின் திறைசேரியை நிரப்பவேண்டிய தேவையின் அவசியம் மறுபுறம்...


சமாதானம் குறித்து பேசியே ஆகவேண்டும்... அல்லது பேசிக் கொண்டே இருக்கவேண்டும்... இதுவே இன்றைய அரசுக்குள்ள நெருக்கடி... என்ன செய்வது...? நோர்வேயின் காலில் விழுவதைத்தவிர வேறுவழி சந்திரிகாவுக்கு கிடையவே கிடையாது...

ஜே.வி.பி.யும் ஹெல உறுமயவும் எதிர்க்கும் தான்...

எதிர்ப்பவர்களால் ஆட்சியை நடத்த நிதியை வழங்க முடியுமா? அவர்களுக்கான சம்பளத்தை வழங்கக் கூட சமாதானத்தின் பேரில் கடன்பட்டேயாகவேண்டும்...

எனவே தான் சமாதானம் சரணம்கச்சாமி... நோர்வே சரணம் கச்சாமி என சந்திரிகா உபதேசிக்கத் தொடங்கியுள்ளார்... புரிகிறதா?

## கதிர்காமருக்கு ஞானமா? அதுவும் இந்தியாவிலா?



புனித வெசாக் நாட்களில் லக்ஸ்மன் கதிர்காமருக்குக் கிடைத்த ஞானம் மிகப் பெரியது.

அதுவும் புத்தபகவான் அவதரித்து இந்தியாவில் வைத்தே அந்த ஞானம் தோன்றியுள்ளது... ஆச்சரியமானது தான்...

1995களில் ஆரம்பித்து இந்த தேர்தல்வரை அவரது உச்சிமுதல் உள்ளங்கால்வரை ஊறியிருந்து 'புலி எதிர்ப்புவாத' நோய் திடீரென விலகி புலிகளை தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகளாக மதித்து அறிக்கை விடுகிற அளவுக்கு குணமாகி விட்டுள்ளது அதிசயம்தான்...

உள்ளூரில் மட்டுமல்ல. வெளிநாடுகளிலும் அவரது விடுதலைப்புலிகள் எதிர்ப்புப் பிரசாரம் பிசுபிசுத்துப்போன நிலையில்... புலி ஆதரவுப் பிரசார அணிக்கு கட்சிமாறியிருக்கிறாரோ என்று எவரும் சந்தேகிக்கலாம்...

ஆனால் அவரை அந்த அணிக்குள் எவராவது அனுமதிப்பார்களா என்பதையும் அவர்கள் யோசிக்கவேண்டும்.

எப்படியோ கதிர்காமர் விடுதலைப்புலிகளை தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ள வைத்த சூழல் எத்தகையது என்பதை அரசியல் நோக்கர்கள் உணர்வர்.

ஆனால் இந்தியாவில் கதிர்காமர் விட்ட இந்த அறிவிப்பு இங்கு பலரின் வயிற்றில் புளியைக் கரைத்துள்ளது மட்டும் உண்மை...

ஐயா, டக்ளஸ் தேவானந்தரே...!

மாத்தயா விமல் வீரவன்ச அவர்களே...!

மல்லி அநுரா பண்டாரநாயக்க அவர்களே...

சங்கைக்குரிய தேரோமார்களே..!

தோழர் டில்வின்சில்வா அவர்களே..!

கதிர்காமரின் இந்த திடீர் அறிவிப்புக்குறித்து என்ன கருதுகிறீர்கள்?

அதனை சிறிலங்கா வெளியுறவு அமைச்சரின் கருத்தாகக்கொள்ளப்போகிறீர்களா?

சனாதிபதியின் ஆலோசகரின் கருத்தாக கருதப்போகிறீர்களா?

சிறிலங்கா அரசின் ஒருமித்த நிலைப்பாடாகக் கருதப்போகிறீர்களா?

அல்லது வெறுமனே கதிர்காமர் என்ற தனிமனிதரின் புலம்பலாகக்கருதப்போகிறீர்களா?

இங்கே சனாதிபதி விடுதலைப்புலிகளுடன் பேசுவதற்கு நோர்வேக்கு அழைப்பு விடுக்கிறார்.. அந்த அதிர்ச்சிமாறமுன் இந்தியா பறந்த கதிர்காமர் விடுதலைப்புலிகளை தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளாக அரசு அங்கீகரித்துப்பேசப்போவதாக அறிக்கை விடுகிறார்...!

அது சரி.... டக்ளஸ் உங்கள் கருத்துக்கள், எண்ணங்கள், அரசுடன் இணைய முன்வைத்த நிபந்தனைகள் எல்லாமே கதிர்காமரால் தூக்கியெறியப்பட்டு விட்டதே...! எப்போது அமைச்சுப்பதவியை கைவிடப் போகிறீர்கள்...?

அப்படிக்கைவிட்டால்... கதிர்காமருக்கு நன்றி சொல்லத்தான் வேண்டும்.

## கதிர்காமரின் குத்துக்கரணம் டக்ளஷுக்கு சந்தேகம்...!



'நித்தியகண்டம் பூரண ஆயுசு' என்பார்கள்.

இந்தப்பழமொழி ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கு கனகச்சிதமாக பொருந்துவதாகவே உள்ளது.

புதிய அரசு ஆட்சியைப் பொறுப்பேற்றது முதல் ஒவ்வொரு கண்டமாக தப்பிக்கவேண்டிய அபாயத்தை ஒவ்வொரு நகர்விலும் சந்திக்கவேண்டியதாகவே உள்ளது.

பிரதமர் தெரிவிலிருந்து சபாநாயகர் தெரிவுவரை இந்த நிலை எப்படி தொடர்ந்துவந்தது என்பதை விளக்கவேண்டிய அவசியமே கிடையாது.

தடுமாறும் நிலையில் ஒரு சானாதிபதி... தள்ளாடும் நிலையில் ஒரு அரசு... இதுவே சிறிலங்காவின் இன்றைய அரசியல்கள யதார்த்தமாக உள்ளது.

அரசின் சரிவை அல்லது வீழ்ச்சியைத் தடுத்து அதனைத் தக்கவைக்க அம்மணிபடும்பாடு 'நாய்படாப்பாடு' என்பது உண்மையே...

ஒருபக்கம் கதிர்காமரைத் தூதனுப்பி இந்தியாவையும் ஏனைய சமாதான அழுத்தத்தை அஸ்திரமாகப் பிரயோகிக்கும் சர்வதேசசமூகத்தையும் சமாளிக்க முயலும் அதேவேளை

அநுராவை தூதனுப்பி முஸ்லிம் காங்கிரஸின் ஹக்கீமுடனும் தொழிலாளர் காங்கிரஸின் தொண்டமானுடனும் பேரம் பேசும் நடவடிக்கைகளையும் முடுக்கியுள்ள சந்திரிகா விமல் வீரவன்சவையும், ஹெலஉறுமய கும்பலையும் ஏககாலத்தில் சமாளிக்க எடுக்கும் பிரயத்தனத்திற்காக பாராட்டவே வேண்டும்.

'ஒருபுறம் வேடன்.. ஒருபுறம்நாகம் இரண்டுக்கும் நடுவே அழகிய கலைமான்....' என்ற கண்ணதாசனின் பழையதிரைப்படப்பாடல் ஒன்றே நினைவுக்கு வருகிறது.

(கலைமான் என்பது சந்திரிகாவுக்கு பொருத்தமில்லாத உவமைதான் என்றாலும் ஒரு கதைக்கு வைத்துக் கொள்வோம்)

இந்த நிலையில் நிதி உதவிப் பிச்சையைப்பெற சமாதானத்தையும் ஏதாவது 'பண்ண'வேண்டும், அதாவது முன்னெடுக்கவேண்டும், அல்லது முன்னெடுப்பது போன்று பாவனை பண்ணி காலத்தையாவது கடத்தவேண்டும்.

இதற்கிடையே உப சபாநாயகர் தேர்தல் வேறு வருகிறது.

இதிலும் தோல்வியுற்றால் அவமானம்தான்.

இது ஒரு புறமிருக்க விடுதலைப் புலிகளை தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகளாக ஏற்று அரசு பேச்சுவார்த்தைகளை நடத்தும். அதில் இந்தியாவின் பங்கு குறித்து விடுதலைப்புலிகளுடன் பேசித் தீர்மானிக்கப்படும் எனக் கதிர்காமர் அறிவித்திருப்பது அந்த தாடிக்கார தேவானந்தாவுக்கு அதிர்ச்சி தருவதாக உள்ளதாம். 'தான்' தமிழ்மக்களின் பிரதிநிதியில்லையா' என்று தனக்குள் புலம்பத் தொடங்கியுள்ளாராம்....

ஐயா கையைவிட்டாலும் அரசு'அவுட்'... அவ்வளவுதான்.

என்னடா அரசுக்கு வந்த சோதனை?

## பீடாதிபதி ஆசியா? —— இவர்களுக்கான ஆணையா?



'விடுதலைப்புலிகளுடனான அரசின் சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கு ஜே.வி.பி.யினர் ஒத்துழைக்க வேண்டுமாம்.'

இந்த நல்ல அறிவுறுத்தலுடன் கூடிய ஆலோசனை அல்லது கோரிக்கையானது ஒரு பொறுத்த இடத்திலிருந்து தான் வந்திருக்கிறது.

அதாவது இந்த நாட்டின் ஆட்சி பீடத்தையே ஆட்டிப் படைக்கும் வல்லமை கொண்ட பௌத்தமதபீடமான அஸ்கிரிய பீடத்தில் இருந்து அதன் மகாநாயக்கரான உடுகம சிறி புத்தரகித்த 'தேரர் மூலம் இந்த கோரிக்கை வெளிவந்துள்ளது.

'வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவேண்டியது அவசியம். எனவே அரசின் சமாதான முயற்சிகளுக்கு ஜே.வி.பி.யினர் ஒத்துழைப்பு வழங்கவேண்டியது அவசியம்' - என ஜே.வி.பி.யினருக்கு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

'நல்லது - நன்றி..!'

அவர் எப்போது இத்னை கூறியுள்ளார் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

புதிதாக பதவிகளை ஏற்றுக்கொண்ட ஜே.வி.பி.யின் அமைச்சுக்களும் பிரதி அமைச்சுக்களும் அஸ்கிரிய பீடாதிபதியிடம் ஆசிபெறச்சென்றபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பொருத்தமான சமயம்தான்.

என்னடா வெறுமனே ஆசி பெறவந்தால் அறிவுரை சொல்கிறாரே என அவர்கள் நினைத்திருக்கக்கூடும்.

இந்த அறிவுறுத்தல் அவர்களின் அறிவில் ஏறுமா என்பதும் வேறுவிடயம்.

அது சரி... இந்த அறிவுறுத்தலை அந்த ஜாதிகஹெல உறுமயவின் நவக்கிரக நாடாளுமன்ற உறுப்பினர்களான பிக்குமாருக்குத்தான் முதலில் உபதேசித்திருக்க வேண்டும்.

இன்று சமாதான முயற்சிகளில் முதன்மை விரோதிகள் இந்த நவக்கிரகங்களே நிறைவேற்று அதிகார சனாதிபதியையே ஆட்டிப்படைக்க வல்ல நிறைவேற்று அதிகாரமல்லாத வேறு அதிகாரங்களை நிறையவே கொண்டுள்ள இந்த பீடாதிபதியால் இந்த மதவாதிகளாக இருந்து அரசியல்வாதிகளாகி இன்று அரசின் இருப்பை தீர்மானிக்கும் சக்திகளாக விளங்கும் ஹெல உறுமயக்காரரின் சமாதான எதிர்ப்பு உறுமல்களை நிறுத்தச் செய்ய அஸ்கிரிய பீடாதிபதி ஆணையிடுவாரா?

ஆணையிட்டாலும் அவர்கள் அதை ஏற்று அல்லது மதித்து நடப்பார்களா?

அதுசரி இந்த ஆசிபெற்ற ஜே.வி.பி. காரர்கள் சபாநாயகர் தேர்தலின்போது அந்த நவக்கிரக பிக்குகளை நோக்கி புத்தகங்கள் மற்றும் கோப்புகளை வீசியெறிந்தும், கேவலமாகக் கிண்டல் செய்தும் பௌத்த மதகுருமாருக்கே அவமதிப்பை ஏற்படுத்தியது குறித்து மகாநாயக்கரான பீடாதிபதி ஒன்றுமே கேட்கவில்லை.

அல்லது அதற்கும் சேர்த்துத்தான் ஆசி வழங்கினாரா?

வரவர அரசபீடங்களை தூக்கிச் சாப்பிடுமளவுக்கு மதபீடங்கள் வலுக்கொண்டு வருவதானது... நாட்டுக்கு துர்ச்சகுனமே...!

—— செங்குட்டுவன்

செயல் புரிவதே வாழ்வு, செயலற்றிருப்பது சாவு. - லூயி மாரிஸ்

# மாற்றங்கள் நிகழுமா...?

**சிறி.இந்திரகுமார்**

இப்போது சந்திரிகாவுக்கும் சந்தேகம் சந்திரிகாவிலும் சந்தேகம்.

சந்தேகங்கள் இரண்டு. ஒன்று, சந்திரிகா சந்தேகப்படுவது இரண்டு, சந்திரிகாவை சந்தேகப்படுவது.

இரண்டுமே சிங்கள மக்களுக்கு பாதகமானது.

எப்படியென்றால் ஐக்கியதேசிய முன்னணி அரசினையும் ரணிலையும் சிங்கள மக்கள் தமது பொருளாதார அசைவுக்கு ஊடாக சந்தேகப்பட்டு ஜே.வி.பி. சந்திரிகா கூட்டின் என்றில்லாமல் ரணில் என்ன செய்யப்போகிறாரோ, ஹெலஉறுமய என்ன செய்யப்போகிறதோ என்று அவரின் சந்தேகம் நீள்கிறது.

உண்மையில் சந்திரிகா ஜே.வி.பி.யுடன் சந்தேகத்தின் அடித்தளத்திலிருந்து தான் ஜே.வி.பியுடனான உறவை ஏற்படுத்தினார் என்பது வேறுவிடயம்.

இது சந்திரிகாவிடம் சிங்கள மக்கள் எதிர்பார்க்கும் ஸ்திர அரசையும், அந்த அரசின் ஊடாக வழங்குவார் என்ற எதிர்பார்ப்புக்கும் பாதகமானது.


இதன் வெளிப்பாடாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு. நாட்டின் பொருளாதாரத்திற்கான திட்டங்களை தெளிவாக்காதவரை ஆசிய அபிவிருத்தி வங்கி முப்பது மில்லியன் அமெரிக்க டொலருக்கான தனது நிதிஉதவியினை இடைநிறுத்துவதாகவும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பொருளாதாரக் கொள்கைதொடர்பான விபரங்களை வெளியிடாதவரை இரண்டாவது கட்டமாக வழங்கவேண்டிய எண்பது மில்லியன் அமெ

காணி அமைச்சை பொறுப்பேற்றிருக்கும் அனுரகுமார திசநாயக்கா முப்பதினாயிரம் குளங்களை புனரமைக்கும் புதிய திட்டம் ஒன்றை வெளியிடவுள்ளார்.

இந்த திட்டத்தின்படி உள்ளூரில் திரட்டும் நிதியிலிருந்து நாட்டிலுள்ள முப்பதினாயிரம் குளங்களை புனரமைக்க முயற்சிப்பதாகும்.

இதற்கு நாட்டில் ஒவ்வொருவரிடமிருந்து ஐந்துரூபாய் திரட்டுவதன் மூலம் பலமில்லியன் ரூபாவினை திரட்டுவதோடு







உலகவங்கியிடமிருந்து கடன் பெறத் தேவையில்லை எனவும் கருதுகிறார்கள்.

இது ஒருவகையில் ஜே.வி.பி.யின் மேற்குலக நாடுகளின் அல்லது அமைப்புக்கள் மீதான முதலாவது புறக்கணிப்பாக உலக வங்கியை புறக்கணிக்கும் நடவடிக்கை இருக்கலாம்.

இதுமேலும் உலகவங்கி ஆசிய அபிவிருத்தி வங்கி சர்வதேச நாணய நிதியம் என உதவி வழங்கும். அமைப்புகளை சந்தேகம் கொள்ளவே செய்யும்.

ஏற்கனவே ஐக்கியமக்கள் சுதந்திரமுன்னணியின் தேர்தல் வாக்குறுதியில் சம்பள உயர்வு வேலைவாய்ப்பு, உடனடியாக உரமானியம், வழங்குவது என பல அறிவிப்புகள் உண்டு.

இந்த உடனடி அறிவிப்புகளுக்கு உலகவங்கிமற்றும் உதவி வழங்கும் அமைப்புகள் இந்த திட்டங்கள் மூலம் அரசுக்கு மேலதிக செலவினங்களே ஏற்படும்எனவும் இது ஒரு விவேகமுள்ள திட்டமாக இருக்காது எனவும்

வாக்குறுதிகள் மூலம் தமக்கு பொருளாதார நலன் ஏற்படலாம் என்றவகையில் சந்திரிகா - ஜே.வி.பி. கூட்டுக்கு ஆதரவளித்தனர்.

இது சிங் கள மக்களின் பொருளாதார சந் தேகப்பார்வைக்கூடான தேர்தல் முடிவானது.

ஆனால் சிங்கள மக்களின் தேர்தல் முடிவுக்கு அப்பால் சந்திரிகா ஜே.வி.பி யுடன் கூட்டை எற்படுத்துவதற்கு முதலே ஜே.வி.பி.யை சந்தேகத்துடனே நோக்கினார். இப்போதும் சந்தேகத்துடனே நோக்குகிறார்.

இதில் சந்திரிகா ஜே.வி.பி முரண்பாடு; அமைச்சரவை பொறுப்பேற்காததிலிருந்து மகாவலி அதிகாரசபைமூலம் ஜே.வி.பி. எதையெல்லாமோ செய்துவிடும் என்ற சந்தேகம் வரை தொடர்ந்தது. இன்னும் இந்த சந்தேகம் முடிவுக்கு வந்துவிட்டதாக இல்லை.

இந்த நிலையில் சந்திரிகாவுக்கு ஜே.வி.பி.யின் அமைச்சரவை மீது சந்தேகம்.

ஜே.வி.பி.முன்னெடுக்கப்போகும் கிராமங்கள் வரையிலான அரசியல் வேலைத்திட்டம் மீது சந்தேகம் .

ஜே.வி.பி.யின் பொருளாதார நிலைப்பாடு தொடர்பாக சந்தேகம்.

ஜே.வி.பி.யின் சமாதான முயற்சி தொடர்பான நிலைப்பாடு தொடர்பாக சந்தேகம்.

இப்படி சந்திரிகாவின் சந்தேகங்கள் ஜே.வி.பி. தொடர்பான சந்தேகங்கள்

ஆனால் இவற்றையெல்லாம் சந்திரிகாவால் அரசியல் குத்துக்கரணங்கள் மூலம் சமாளித்துவிடலாம் ஆனால் சந்திரிகாவை சந்தேகப்படும் ஒரு நிலைக்காணப்படுவதை அவர் இலகுவில் வென்று விட முடியாது.

ஏனென்றால் சந்திரிகாவைச்சந்தேகப்படுவது சந்திரிகாவின் அரசின் எண்ணங்களையெல்லாம் முன்கொண்டுசெல்ல ஊக்கிகளாக இருக்கவேண்டியநாடுகளும், அமைப்புகளுமாக இருப்பதேயாகும்.

சந்திரிகா - ஜே.வி.பி. கூட்டு முடிவானதுமே கொழும்பில் பங்குச்சந்தையிலும் முதலீட்டாளர்கள் மத்தியிலும் ஒரு தளம்பல் நிலை காணப்பட்டதாகவே அப்போதைய புள்ளி விபரங்கள் தெரிவித்தன.

இதற்கு பிரதான காரணம் இன்றைய உலகமயமாதல்யுகத்தில் திறந்த பொருளாதார கொள்கையினை கடைப்பிடித்துவரும் அரசுகளிலிருந்து, சந்திரிகா - ஜே.வி.பி. கூட்டு மூலமான அரசின் பொருளாதாரக்கொள்கை அடிப்படையில் தமது முதலீடுகளில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தலாம் என்ற முதலீட்டாளர்களின் சந்தேகம் காரணமாக நம்பத்தயாரில்லாத ஒரு மனோபாவ நிலைமை முதலீட்டாளர்கள் முதல் உதவிவழங்கும் நாடுகள் மற்றும் அமைப்புகள்வரை தொடர்ந்தது.

ரிக்க டொலருக்கான நிதி உதவியினை சர்வதேச நாணய நிதியம் இடைநிறுத்தி வைக்கமுடிவு செய்வதாகவும் தகவல்கள் தெரிவிக் கின்றன.

இத்தகைய முடிவுகள் எதைக் காட்டுறது என்றால் சந்திரிகாவை நோர்வே எழுத்துமூலமான சமாதான முடிவுகளை கேட்டதாக வெளியான செய்திகள் போன்று

சந்திரிகாவை இந்த அமைப்புகள் நம்பத்தயாரில்லாத ஒரு நிலைமையே.

ஆனால் இலங்கையில் எந்த அரசுகளானாலும் இந்த அமைப்புகளும் நாடுகளும் நம்பக்கூடியதாக நடந்தாகவேண்டும்.

அத்தகையதொரு பொருளாதார நிலைமையே இங்கு காணப்படுகிறது.

அதிகம், அதிகம் இந்த அமைப்புகளும் நாடுகளும் நோகாமல் நடந்தாகவேண்டும்.

ஆனால் நிலைமை எப்படியிருக்கிறது.

உதவிவழங்கும் அமைப்புக்களும் நாடுகளையும் மேலும் ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி அரசை கூர்ந்து நோக்கும் வகையில் ஜே.வி.பி யின் சார்பில் விவசாயம், நீர்ப்பாசனம்,

வெளிப்படுத்தியுள்ளதுடன் தமது நிலைப்பாட்டை தெரிவித்தும் உள்ளன.

இந்த நிலையில் ஜே.வி.பி.கடைப்பிடிக்கும் மாக்சிய சித்தாந்த கோட்பாடுகளை தழுவிய அல்லது அவற்றை பிரதிபலிக்கும் வகையிலான மாற்றத்துக்கு இலங்கையின் பொருளாதாரம் உட்படுமா? என்ற சந்தேகங்களை மேலும் வலுப்பெறச்செய்யும்.

இவை சந்திரிகா ஜே.வி.பி.தொடர்பாக ஏற்படும் சந்தேகமும், புதிய அரசு தொடர்பாக கொள்ளும் சந்தேகம் என மேலும் சந்திரிகாவுக்கு பல நெருக்கடிகளை ஏற்படுத்தவே செய்யும்.

இதிலிருந்து இலங்கைமீளவும் உயிர்ப்பெற அதிகமாக சிங்கள மக்கள் சிந்தித்தாகவேண்டும்.மாறாக ஒன்றுக்கொன்று முரணான விடயங்கள் சந்திக்கும்போது எல்லாம் மீளவும் பழைய நிலைக்கு கொண்டுவரக்கூடும்.

அது மீண்டும் அதிகம் மரவள்ளியை பயிரிடவும் தூண்டலாம். இப்படியொருநிலை வருமானால் இலங்கையில் சமாதானம் தொலைந்துவிடும்.

ஏனென்றால் இப்போது இலங்கையில் முன்னெடுக்கப்படும் சமாதானம் விழிப்பும் அவதானமும் ஒன்றுசேர பலமான நிலையிலிருக்கும் தமிழர் தலைமையினால் முன்னெடுக்கப்படுவதனாலாகும்.

## மதவடி மயிலர்



என்னவோ பாருங்க ஆறுமாச வெயிலைத்தாங்கலாம் ஆனா....ஐஞ்சு நாள் மழையை தாங்கமுடியவில்லை...எப்ப பார்த்தாலும் சந்திரிகாவின்ரை முகம்மாதிரி வானம் ஒரே இருட்டா..... மப்பும் மந்தாரமுமாக இந்த நாலஞ்சு நாளா இருக்குது பாருங்கோ....

சந்திரிகாவின்ரை முகத்திலை அரசு அமைச்சதிலிருந்து வெளிச்சத்தையே காணவில்லை. எப்பபார்த்தாலும் தாளமுக்கம் பிடிச்ச வானம் போலத்தான் இருக்குது....

அம்மணிக்கு அமுக்கம் ஏதுமில்லை.. அழுத்தம் தான் காரணம் பாருங்க... நான் சொல்லுறது இரத்த அழுத்தமில்லை...இதுவேறை அழுத்தம் பாருங்க.... ஜே.வி.பி. அழுத்தம், ஹெல உறுமய அழுத்தம், சொந்தக்காரங்க..... சொந்தக்கட்சிக்காரங்க அழுத்தம், அமெரிக்க அழுத்தம், இந்திய அழுத்தம், இராணுவ அழுத்தம்.... சர்வதேச அழுத்தம் இப்படி எத்தனையோ அழுத்தங்கள் எந்த அழுத்தத்தை சமாளிக்கிறது... எப்படிச் சமாளிக்கிறது என்று யோசிச்சு யோசிச்சே முகம் அமுக்கத்தாலை இருண்டு போச்சுது பாருங்கோ...

ஒருத்தரும் தன்ரை கஷ்டத்தை புரிஞ்சு கொள்ளினம் இல்லைஎன்று மனசுக்குள்ளை புலம்புறா போலை...

அட இந்த ஹெல உறுமய பிக்குகளாவது படித்த தம்மபதத்தின் படி தர்ம வழியில் நிற்பாங்கள் எண்டுபார்த்தா அவங்க தான் ஆக மிரட்டுராங்க... ஆளாளப்பட்ட இனவாத அரசியல் வாதிகள் எல்லாம் தோத்தாங்க போங்க... இதுக்கிடையிலை அந்த ஜெனரல் மாமா... அவர்தான் ரத்வத்தை... மருமகளோடு ஒரே கோபமும் ஆத்திரமுமா இருக்கிறாராம். தன்னைவிட ரத்தினசிறிவிக்கிரம நாயக்க உசத்தியோ என்று ஆத்திரத்தில் உள்ளாராம்.. பிரதிபாதுகாப்பு அமைச்சை அவருக்கு கொடுத்தபிறகு இருக்குப்பிரச்சினை என்கிறாராம்.

இதற்கிடையில் தனக்கு அந்தப்பதவியை தந்தா என்ன என்று அநுராகூட தன் நண்பர்களுக்குக் கூறி புலம்பியுள்ளாராம். இதுக்கிடையிலை மகாவலிப் பிரச்சினையில் புரட்சிசெய்யமுயன்று அடங்கிப்போன ஜே.வி.பி தோழர்கள் அரசின் கடிவாளம் தங்கடைகையில்தான் இருக்குது என்று கூறுகின்றனராம். இதற்கிடையில் அரசுக்கு அடுத்த கண்டம் உபசபாநாயகர் தேர்தலுடன் வரப் போகிறது.

புத்தம் சரணம் கச்சாமி இனிச் சரிவராது.. ஹக்கீம் சரணம் கச்சாமி... தொண்டமான் சரணம் கச்சாமி என ரகசிய நடவடிக்கைகளிலும் அம்மணி இறங்கிவிட்டாராம் பாருங்கோ... அதிகாரப்பரவலாக்கம் அரசுக்குள்ளேயே செய்ய முடியேல்லை இதுக்கிடையிலை நாட்டிலை எப்படி அம்மணி செய்யப் போறா எல்லாத்தையும் நினைச்சா தலைசுத்துது பாருங்கோ... எனக்கா?... இல்லை இல்லை சந்திரிகாவுக்குத்தான் பருங்கோ மழை வரப்போகுது போல கிடக்கு. குடையையும் விட்டிட்டு பேப்பர் வாங்க வந்தனான் பாருங்கோ...அப்ப நான் வாறன்.

நேர் நோக்கு

# இரண்டாவது தடவை நோர்வேயிடம்...

சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கு அனுசரணையாளராகச் செயற்படுமாறு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வேயை இரண்டாவது தடவையாக அழைக்கும் நிலைக்குத்தள்ளப்பட்டிருக்கிறார். ஓயாத அலைகள்-03 கொடுத்த அதிர்ச்சியால் சமாதான முயற்சிகளுக்கு முதன் முறையாக நோர்வேயை அழைத்த அவர் பின்னர் அவர்கள்மீது அவதூறு வார்த்தைகளை வீசி அனுசரணையாளராகச் செயற்பட்ட எரிக்சூல் கெய்மை பேச்சு வார்த்தை அரங்கிலிருந்து வெளியேற்றினார்.

பின்னர் அவரது ஆட்சி வீழ்ச்சியடைந்ததும் ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்த போது நோர்வே அனுசரணை அப்போது பெறப்பட்டது. ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இச்சமாதான முயற்சிகளுக்குப் பல முட்டுக்கட்டைகளைப் போட்டு வந்ததுடன் நோர்வே அனுசரணையாளர்களைச் சந்திரிகாவும் பல தடவைகள் மறுத்து வந்துள்ளார். இறுதியில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை செயலிழக்கச்செய்து சமாதான முயற்சிகளை முடக்கியபோது நோர்வே இந்த முயற்சிகளிலிருந்து தற்காலிகமாக விலகிக் கொண்டது.

இப்பொழுது சந்திரிகாவின் சிறுபான்மை அரசாங்கம் பதவி ஏற்றுள்ளது. இவ் இடைக்காலப் பகுதியில் மட்டுமல்ல சமாதான முயற்சிகள் நடைபெற்ற இரண்டு வருடகாலப் பகுதியிலும் கூட இந்தியாவை சமாதான பேச்சுவார்த்தைகளில் நேரடியாக ஈடுபடுமாறு சனாதிபதி சந்திரிகாவின் சிறிலங்கா சுதந்திரக்கட்சி மட்டுமல்ல அவருடன் கூட்டுச்சேர்ந்துள்ள ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமய (அப்போது சிகல உறுமய) என்பனவும் வலியுறுத்திவந்தன. சமாதான முயற்சிகளின் ஓர் அங்கமான யுத்தநிறுத்தம் காரணமாக புலிகள் திருகோணமலையில் புதிய பல முகாம்களை அமைத்திருப்பதாகவும் அதனால் இந்தியாவின் பாதுகாப்பிற்கே அச்சுறுத்தல் எனவும் இவர்கள் மிரட்டிவந்தனர். நோர்வே. கண்காணிப்பாளர்களை புலிகள் பக்கம் சார்ந்து நடப்பதாக கூறிவந்தனர். கண்காணிப்புக்குழுத்தலைவரையே வெளியேற்ற சந்திரிகா நடவடிக்கை எடுத்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பதவி ஏற்றதும் பிரதமர் மகிந்த ராஜபக்சவின் முதலாவது உரையில் சமாதானப் பேச்சுக்களில் நேரடியாகப்பங்குபற்றுமாறு இந்தியாவுக்கு அழைப்புவிடுத்தார். முன்னர் போல இந்தியாவும் இவ்விடயத்தில் ஒதுங்கியிருந்து விடவில்லை. ஏனெனில் புதிய பிரதமரை முதலில் சந்தித்த வெளிநாட்டுத்தூதுவராக இந்தியத்தூதுவரே இருந்தார்.

இதே வேளை இப்பொழுது பதவியேற்றுள்ள அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இரு பெரும் கட்சிகளும் இந்தியாவின் பிரசன்னத்தை விரும்புவதுடன் 09 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவான ஹெல உறுமயவும் இந்தியாவை விரும்புவதும் கூட இந்தியாவுக்கு இவ் விவகாரத்தில் ஈடுபடுவதற்கான நம்பிக்கையை கொடுத்திருக்கும்.



இது சமாதானப் பேச்சுக்களுக்கு இந்தியாவை அழைப்பதானது சந்திரிகா அரசாங்கத்தின் உறுதிப்பாட்டுக்கும் கூட உதவக் கூடியதாக இருக்கும்.

இவ்வாறான நிலையிலும் கூட நோர்வேயை அனுசரணையாளராக அழைக்கவேண்டிய தேவை சந்திரிகா அரசுக்கு ஏற்பட்டிருப்பதும் அதனைச் சகிக்கவேண்டிய நிலை ஜே.வி.பிக்கு ஏற்பட்டிருப்பதும் ஏன்? என்ற கேள்வி எழுகின்றது.

அதற்கு காரணம் சமாதான முயற்சிகளும் சர்வதேச நிதி உதவியும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்திருப்பதாகும். ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் இரண்டுவருடகாலம் நடத்திய பேச்சுவார்த்தைகளின் முக்கிய அறுவடையாகிய 45 ஆயிரம் கோடி ரூபாவை மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி பெறுவதாயின் அதற்கு நோர்வேயின் அனுசரணையுடனான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவது அவசியமாகும்.

அதிலும் இம்மாதம் இந் நிதியுதவி தொடர்பான மாநாடு நடைபெறவுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி உடனடியாக 30 ஆயிரம் வேலைவாய்ப்புக்களை வழங்க வேண்டியுள்ளது. அதிலும் ஆட்சியாளர்களின் கூற்றுப்படி "குழப்பக்காரர்களான" பட்டதாரிகள் 27 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படவேண்டும்.

இதற்கெல்லாம் தேவையான நிதியை ஜே.வி.பியோ, சிறிலங்கா சுதந்திரக்கட்சியோ சிறிலங்காவின் திறைசேரியோ கொண்டிருக்கவில்லை. ஜே.வி.பி என்னதான் வெளிநாட்டு உதவி தேவையில்லை என்றாலும் யதார்த்தத்தில் அந்நிதியுதவியை நம்பித்தான் ஆட்சியே. அந்நிதியுதவி கிடைக்கத் தாமதமாகின் ஐக்கிய தேசியக்கட்சி கடந்த தேர்தலில் சந்தித்ததோல்வியையே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் சந்திக்கநேரிடும். எனவே இன்றுள்ள சூழ்நிலை சமாதானப் பேச்சு வார்த்தைகளையும் நோர்வேயின் ஏற்பாட்டாளர் நிலையையும் ஏற்றுக்கொள்ளவைத்துள்ளது.

அத்துடன் முடிவடைந்துவிடவில்லை பேச்சுவார்த்தையைத்தொடர விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சித் திட்ட வரைவு, நிதி உதவிபெற ஒஸ்லோ பிரகடனம், தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களும் சிறிலங்காவின் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பனவற்றைப் பின்பற்றியே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி செயற்படவேண்டியும் உள்ளது.

சுருங்கக் கூறினால் நாட்டிற்கு அச்சுறுத்தல் என்று கூறி மூன்று முக்கிய அமைச்சுகளைப் பறித்த தினத்தில் விட்டதிலிருந்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐக்கிய தேசிய முன்னணியின் வழியில் தொடரவேண்டியவராக இருக்கிறார்.

அதற்கு அவர்தயாராக இருப்பதையே சந்திரிகாவின் குரலாக ஒலித்துவரும் லக்ஷ்மன் காதிர்காமரின் பேட்டிகள் வெளிப்படுத்துகின்றன. தம்மால் அமைக்கப்பட்ட அரசாங்கத்தை பாதுகாக்கும் மனோ நிலையில் ஜே.வி.பி. இருப்பதால் ஜே.வி.பி.யும் இதற்கு உடன்படவேண்டிய நிலையில் இருக்கின்றது.

ஹெலஉறுமய முரண்டுபிடித்து அரசாங்கத்தை ஆதரிக்காது போகலாம். அவ்வாறாயின் அரசாங்கத்தைக் காப்பாற்ற பெரும் பிரயத்தனம் செய்யவேண்டியநிலையும் சந்திரிகாவுக்கு உண்டு. எனவே இரண்டாண்டுகாலம் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் சந்தித்துவந்த நெருக்கடிகளிலும் கூடுதலாக சந்திரிகா அரசாங்கம் சந்திக்கவேண்டிவரும்.

இதேவேளை பேச்சுவார்த்தையைப் பொறுத்தவரை ஐக்கிய தேசியக் கட்சி வேறுபட்ட நிலைப்பாடொன்றை கடைப்பிடிக்கலாம் போலவே அதன் செயற்பாடுகள் காட்டுகின்றன. அதாவது பேச்சுவார்த்தைகளை எதிர்க்காத அதேவேளை தமது இரண்டு வருடகாலச்செயற்பாடுகளைச் சந்திரிகா அரசாங்கத்தைத் தொடரவைக்கும் முயற்சியில் ஐ.தே.க ஈடுபடக்கூடும்.

ஆனால் குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் ஜே.வி.பி இவ்விவகாரத்தை எவ்வாறாயினும் குழப்பி அடித்துவிடும். அப்போது பாத்துக்கொள்ளலாம் என்ற முடிவுடனேயே ஐ.தே.க உள்ளது போலத்தெரிகிறது.

எப்படியோ இரண்டாவது தடவையாகவும் நோர்வேயை அழைக்கவேண்டிய நிலைக்கு சந்திரிகா வந்திருப்பது அவர் தனது எண்ணப்படி எவ்விடயத்திலுமே செயற்படமுடியாத பலவீன நிலையில் இருப்பதையே காட்டுகிறது.

வேலவன்

# விரைந்து செயற்பட வேண்டும்


இலங்கையில் இளம் சந்ததியினருக்குள் அதிகம் பாதிப்புக்குள்ளானவர்கள் என்றால் அது நிச்சயமாக தமிழ் இளம் சந்ததியினர் என்று துணிந்துகூறலாம்.

ஏனென்றால் திட்டமிட்டுத்தமிழர்நிலம் மீது திணிக்கப்பட்டபோரின் காரணமாக அவலத்துக்கும், ஆபத்துக்கும் உள்ளானவர்கள் தமிழ் இளம் சமுதாயத்தினரே.

அதுவும் குறிப்பாக தமிழ் மாணவ சமூகம் போரின் திரைமறைவில் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டதுடன் அவர்களின் கல்விச்செயற்பாடுகளை முடக்குவதில் கூடியகவனம் செலுத்தப்பட்டது என்றால் மிகையாகாது.

குறிப்பாக போர் நடைபெற்றுக்கொண்டிருக்கும் காலத்தில் யுத்தப்பிரதேசம் மீதான பொருளாதாரத்தடை என்ற பெயரில் மாணவர்கல்வி செயற்பாட்டு உபகரணங்களை வழங்குவது முதல் ஆசிரியர்களை நியமிப்பதுவரை புறக்கணிக்கப்பட்டனர்.

அத்தோடு புதிய கல்வித் திட்டம் என்றபெயரில் தமிழ்மாணவர்கள் படங்களிலும், பத்திரிகைகளிலும் மட்டுமே பார்த்துணர்ந்த உபகரணங்களைக்கொண்டு ஒப்படை என்றபெயரில் கல்விச்செயற் பாட்டில் ஈடுபடுத்தியதுடன் இந்த மாணவர்களின் சூழலுக்கு சற்றேனும் பொருத்தமில்லாத கல்வி முறையை நடைமுறைப்படுத்தி மாணவரை குழப்பத்துக்குள் ஆழ்த்தியிருந்தனர்.



பெருவாரியான மாணவர்கள் கல்விகற்கும் பாடசாலைகளில் இராணுவ முகாம்களை அனுமதித்தும் மாணவர்கள் கல்விக்கு ஆபத்தை சிங்கள அரசுகளே ஏற்படுத்தின.

இந்த நிலையில்தான் தற்போது யாழ் மாவட்டத்திலிருந்து அண்மையில் வெளியாகியிருக்கும் புள்ளிவிபரம் ஒன்றில் யாழ் மாவட்ட பாடசாலைகளிலிருந்து இரண்டாயிரம் மாணவர்கள் இடை விலகியிருப்பதாக தெரிவித்துள்ளது.

இதற்கு பிரதான காரணம் மாணவர்களின் வறுமையே எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாணவர் கல்வி தொடர்பாக பல சமூக அமைப்புக்களும் அரசசார்பற்ற நிறுவனங்களும் பல்வேறு நலத்திட்டங்களை முன்னெடுத்தாலும் மாணவர் கல்வியில் நெருக்கடிகள் இருந்தபடியேதான் இருக்கிறது.

இதற்கு மாணவர்நலத் திட்டங்களை மட்டும் முன்னெடுக்கப்படாது மாணவர்களின் பெற்றோரின் பொருளாதார அபிவிருத்திக்கான பலமுன்னோடித்திட்டங்களைப்பற்றியும் சிந்திப்பது அத்தியாவசியமாகிறது.

மேலும் மாணவர் இடைவிலகலுக்கு பொருளாதார ரீதியிலான பிரச்சினையை மட்டும் நாம் கவனத்தில் கொள்ளாது அவர்களின் சூழலில் உளவியல்ரீதியாக பல்வேறு தாக்கங் களை ஏற்படுத்தக்கூடிய பல சமூக நெறிகளுக்கு அப்பாலான செயற் பாடுகள் பற்றியும் நாம் கவனத்தில் எடுத்தாகவேண்டும்.

கல்விக்கு பெயர்போன யாழ்ப்பாணத்தில் இவ்வாறான தொகையில் மாணவர் இடைவிலகல் இருக்கிறது என்றால் நிச்சயம் அங்குநாம் ஆழமாகச் சிந்திக்கவேண்டிய பல புறக்காரணிகள் தாக்கம் செலுத்துகிறது என்பதையே காட்டுகிறது.

இதுபற்றி நாம் சிந்திக்க தவறுவோமாக இருந்தால் தமிழ் மாணவர்களின் கல்விச் சாதனைகள் நெருக்கடிக்குள்ளாகப்போவதுடன் ஒட்டுமொத்த தமிழ் இனத்தில் கல்வியறிவு வீதத்திலும் பல தாக்கங்களை ஏற்படுத்தவே செய்யும்.

ஆகவே நாம் விரைந்து எமது மாணவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளுக்கு பரிகாரம் தேடுவது அத்தியாவசியமாகிறது.

நாம் மேலும் இது பற்றி காலம் தாழ்த்திக்கொண்டிருக்கக் முடியது.

நக்கீரர்

இன்றைய நவீன அறிவியல் உலகில் அறிவியலின் நுழைவு எங்குமே வியாபித்து நிற்கிறது.

இந்த அறிவியல் மூலம் எங்கள் மத்தியில் புலக்கத்திற்குவரும் புதிய அறிவியல் சொற்களுக்கு பின்னால் பல ஆபத்துக்களும் அபாயங்களும் இருக்கவே செய்கிறது.

அதிலும் இந்த அறிவியலின் புதியகண்டுபிடிப்புக்களை வர்த்தகத்துள் நுழைத்து புதிய ஆபத்துக்கள் பலவற்றை எங்களைச்சூழ உலவவிடப்பட்டுள்ளது.

**உலகிலேயே மிகப் பெரிய பருத்தி விதை உற்பத்தி நிறுவனமான இது மரபுத்திரிபினூடாக சற்றே தரமுயர்த்தப்பட்ட பருத்தி விதைகளை அறிமுகப்படுத்திவருகிறது. இதிலென்ன தவறு என்று கேட்கிறீர்களா? இந்த விதைகளால் விளைய மட்டுமே முடியும் இன்னுமொரு முறை விதைகளைத் தரும் பக்குவம் அற்றவை. பயன்படுத்தத் தொடங்கிய விவசாயிகள் விளை விதைகளை இழந்து, தங்கி நிற்கும் நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.**

# வர்த்தக தந்திரங்களுக்குள் சிக்குப்படும் நுகர்வோர்

குளோனிங் (cloning),மரபணுத்திரிவு (Gen-Manipulation) போன்ற பதங்கள் இன்று பலவாறும், பல துறைகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தவகையில் விவசாய சார் உற்பத்தியினை மேற்கொண்டுவரும் பல நிறுவனங்களும், நாடுகளும் தீவிர ஆராய்ச்சி களில் ஈடுபட்டுவருகின்றன. கலப்பு நெல்லி னங்களை அறிமுகப்படுத்தி நமது உணவுத் தேவையை உள்நாடுகளிலேயே பூர்த்தி செய்துகொள்ளவேண்டுமென்று சிறப்பான பெறுபேறுகளுடன் ஆராய்ச்சிகள் நடைபெற்று வரும் இக்காலத்திலே,இடையிலே புகும் சில "இரத்த உறிஞ்சிகளைப்" பற்றி விழிப்பாக இருத்தல் அவசியம். எடுத்துக்காட்டாக Mon santo நிறுவனத்திடம் சோயா விதைகளைக் கொள்வனவு செய்யும் ஒரு விவசாயி, ஒவ்வொரு முறையும் அவர்களிடமே வாங்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உட்படுத்தப்படுகின்றார். அதை விடுத்து அவர் விளை விதைகளை பெற்றுக் கொள்ள வேறுவழிகளை நாடுவது, சட்ட விரோதமாக கருதப்படும். இதைத் தாண்டி இன்னுமொரு Terminator-technic ஐ 2002ம் ஆண்டு ஜனவரி மாதம் அமெரிக்க நிறுவனமான Delta Pine and Land Seed Company அறிமுகப்படுத்தியது.

உலகிலேயே மிகப் பெரிய பருத்தி விதை உற்பத்தி நிறுவனமானம் ஒன்று இது மரபுத்திரிபினூடாக சற்றே தரமுயர்த்தப்பட்ட பருத்தி விதைகளை அறிமுகப்படுத்தி வருகிறது. இதிலென்ன தவறு என்று கேட்கிறீர்களா? இந்த விதைகளால் விளைய மட்டுமே முடியும் இன்னுமொரு முறை விதைகளைத் தரும் பக்குவம் அற்றவை வேறு மாதிரிச் சொல்வதானால் நலம் எடுக்கப்பட்ட நல்ல(?) விதைகள் இவை இவற்றைப் பயன் படுத்தத் தொடங்கிய விவசாயிகள் விளை விதைகளை இழந்து, தங்கி நிற்கும் நிலைக்குத் தள்ளப்படுவார்கள். இந்தக் கசக்கும் பழத்தை எவர்தான் உண்பார்கள் என்று நீங்கள் எண்ண லாம் காப்புரிமை (Patent-Right) பெறப்பட்ட இந்த உற்பத்திமுறையில் செலவு மிகக் குறைவு. இந்த உரிமை கொண்டிருக்கும் இந் நிறுவனத்தில் தங்கிவாழ நிர்ப்பந்திக்கப் படுவதன் மூலம் விவசாயிகளின் எண்ணிக்கையை பொறுத்து, இதன் இலாபம் அதிகரிக்கும் எவ்வளவு விலை குறைவாக விற்றாலும் இந்த நிறுவனம் நட்டம் அடையப் போவதில்லை ஆகவே, மிகவும் குறைந்த விலையில் அல்லது இலவசமாகவே அறிமுகப்படுத்தி, உள்ளூர்ச் சந்தைகளில் ஏக உரிமை நிலை நாட்டிய பின், நலமுள்ள விதைகளெல்லாம் நலிந்து கெட்ட பின், திடீரென்று விலையேற்றும் திட்டத்துடன் இறங்கியுள்ளது இந்த Delta Pine and Land Seed Company. இம் முறை பருத்தி விதைகளுக்கு மட்டுமல்ல , ஏனையவற்றிற்கும் பொருந்தும். பசுமதி அரிசியின் ஒரு வகைக்கான, ஏக போகக் காப்புரிமையை இன்னுமொரு "பெரிய நாடு" எடுத்துவிட்டதாக இந்திய விவசாயிகள் பொருமுவதாகவும் ஒரு செய்தி. உந்தச் சேட்டைகள் எல்லாம் எங்களோட சரி வராது! நாங்கள் கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே, வாளோடு முன் தோன்றிய மூத்தகுடி" என்று முணுமுணுத்தவர்களின் கவனத்திற்கு! இன்றெல்லாம் எங்கள் காலைகளெல்லாம் தேநீரோடுதானே விடிகின்றன. இந்தச் கசப்புச் சாயம் எப்படி எங்களுக்கு இனிக்கத் தொடங் கியது? 19 ஆம் நூற்றாண்டின் தொடக் கத்திலே வீடுவீடாகச் சென்று இலவசத் தேநீர்ச்சேவை நடாத்திய ஆங்கில அரசு, மோரிலும், கொத்தமல்லித் தண்ணீரிலும், கஞ்சியிலும் உறுதி பெற்றுக்கிடந்த எங்கள் மூதாதையரின் வயிற்றுக்குள், இலவசமாக இன்னும் ஒன்றைப் புகுத்தியது. ஒரு மாதம் கழிந்தது.... உற்சாக பான வாகனங்கள் ஏதும் ஊருக்குள் வர வில்லை பழகிய நாக்கு,விட்டு விலகுமா? அன்றிலிருந்து இன்றுவரையும், இனியும் தேயிலை வியாபாரம் நடந்துகொண்டிருக்கிறது.

1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நம் அனைவருக்கும் நன்கு அறியப்பட்ட Nestle நிறுவனம்,கடுமையான குற்றச்சாட்டுக்களுக்கு முகம் கொடுக்கவேண்டிவந்தது. Nestle இன் பணியாளர் ஒருவர் அளித்த தகவல்களின் படி, பாகிஸ்தான் சுகாதார அமைப்பு, மற்றும் வைத்தியர்களுக்கு கையூட்டுக் கொடுத்து, தமக்குச் சார்பான கருத்துருவாக்கத்தினை அங்கு Nestle ஏற்படுத்தியிருந்தது. தாய்ப் பாலை விட புட்டிப் பாலே சிறந்தது என்று தத்தம் வைத்தியர்களால் அறிவுறுத்தப்பட்ட தாய்மார் பலரும், தாய்ப்பால் கொடுப்பதை நிறுத்தினர்.சிறிது காலத்திற்கு அவர்கள் பெற்ற Nestle இன் இலவசத் தயாரிப்புக்களும் இதற்கு இன்னுமொரு காரணமாகும். முலை வற்றியது மட்டுமின்றி அப்படி பருகும் பழக்கத்திலிருந்தும் குழந்தைகள் விடுபட்டனர். மேலத்தேய நாடு களைப் போலல்லாது சுத்திகரிக்கப்படாத குடிநீர்ப்பாவனை காணப்படும் நம் நாட்டைப் போன்ற பாகிஸ்தானில், பால்மா கரைக்கப்பட்ட நீர் காரணமாகவே பல மழலைகள் நோய் வாய்ப் பட்டு இறக்க நேரிட்டன. பலவித எதிர்பார்புக் களுக்குப் பின்னர் தங்கள் இலவச விநியோ கத்தை Nestle விடுத்தது. அது மட்டுமன்றி குழந்தைகள்-உணவு சம்பந்தமாக விளம்பரங்கள் உலக சுகாதார நிறுவனத்தினால் மட்டுப்ப டுத்தப்பட்டிருகின்றன. இருந்தாலும் குறிப்பிட்ட காலப்பகுதியிலே 130 மில்லியன் (13கோடி) மக்களைக் கொண்டுள்ள பாகிஸ்தானில், 87 வீதமான குழந்தைகள் புட்டிப்பாலை (பால் பவு டர்) மட்டுமே பெற்றுவந்தன என்றால் வியாபார லாபத்தைக் கொஞ்சம் எண்ணிப்பாருங்கள்! 82 நாடுகளிலே 520 தொழிற்சாலைகளைக் கொண் டுள்ள, வருடத்துக்கு 5200 மில்லியன் யூரோ இலாபம் ஈட்டும் சுவிஸ் நாட்டு Nestle நிறு வனத்திற்கு, பாகிஸ்தானில் இறந்த குழந் தைகள் பெரிதாக தெரியாமல் போயிருந்தாலும், தொடர்ச்சியான எதிர்ப்புக்கள் காரணமாக, எங்கே தம் பெயர் கெட்டுப் போய் விடுமோ என்றஞ்சி கொஞ்சம் அடங்கிப்போனார்கள்.

தாய்ப்பால் மட்டுமல்ல, தாய் மொழி, தாய் நாடு என்பனவும் நம் சிந்தைக்கும், சீரிய வாழ்வுக்கும் ஆரோக்கியமானவை ஆகும்.

**ஞாலவன்**

# தமிழீழத்தின் தேசியப்பூ




தமிழர்களின் தேசியப் பூவாக, தமிழீழத்தின் தேசியப்பூவாக கார்காலத்தில் மலர்ந்திடுவதும், தமிழீழ தேசியக்கொடியின் வர்ணங் களைக்கொண்டுள்ளதும், தமிழீழ மாவீரர்நாள் வருகின்ற மாதத்தில் கொடிபரப்பி பூத்துக்குலுங்குவதும், தமிழீழ தேசமெங்கும் பரவிக்காணப் படுவதுமான கார்த்திகைப் பூ பிரகட னப்படுத்தப்பட்டுள்ளது. பண்டைய தமிழ்மன்னர்கள் காலத்தில் சோழ ருக்கு அத்திப்பூவும், சேரருக்கு பனம் பூவும், பாண்டியருக்கு வேப்பம்பூவும் தேசிய மலர்களாக இருந்துள்ளன.

மேற்குறிப்பிட்ட பூக்களின் மாலைகளையே அவர்கள் கள முனைகளுக்கு செல்லும்போது அணிந்து சென்றதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். காந்தள் என்பது கார்த்திகைப்பூவின் பாரம்பரியத் தமி ழ்ப்பெயராகும். இவ்வரலாற்றுச் சான் றாதாரத்தினூடாக கார்த்திகை மல ருக்கும் தமிழர் வரலாற்றுக்கும் உள்ள தொடர்பு தெட்டத்தெளிவாகத்தெரி கின்றது.

இராணுவச்சின்னங்கள், நாடுகள், நகரங்கள், மாநிலங்கள் என்பனவும் தத்தமதுதனித்துவத்தை வெளிப்படுத்த தமது சமூக கலாசார பண்பாடு பின்னிப்பிணைந்துள்ள பூக்களைப்பயன்படுத்துகின்றனர். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஒவ் வொரு குடியரசிற்கும் ஒவ்வொரு பூ குடியரசுப்பூவாய் பிரகடனப்படுத் தப்பட்டுள்ளது.

தமிழீழத் தேசியப் பூவாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள கார்த் திகைப்பூவைப் பற்றிய மூலாதார விடயங்களைப்பார்ப்போம். கார்த்தி கைப் பூவினை பண்டைத்தமிழ் இலக்கியங்களிலே காந்தள் என்றே அழைத்தனர். ஒரு வித்திலைத் தாவ ரங்களில் வெங்காயக் குடும்பமாகிய லில்லிஆசியே (Lili aceae) எனப்படும் வகையினை சேர்ந்ததாகும்.

இக்கொடியின் தண்டு பச்சை நிற மானது, நலிந்தது பலமில்லாதது. இலைகளின் நுனிகள் நீண்டு சுருண்டு பற்றுக்கம்பிகள் போல பக் கத்திலுள்ள மரஞ்செடிமுதலிய ஆதாரங்களைப் பிடித்துக்கொண்டு வளரும். கிளைவிட்டுப் படரும் ஆண்டு தோறும் புதிய கொடிகள் நிலத்தினுள்ளே இருக்கும் கிழங்கிலி ருந்து வளரும். கிழங்கு சாதாரணமாக இரண்டு பிரிவுள்ளதாக இருக்கும்... இது உழவர்களின் கலப்பை போலத் தோன்றுவதால், இதனைக் கலப்பை எனவும் அழைப்பர். கிழங்கின் ஒவ் வொரு பிரிவின் முனையிலும் புதிய கணு உண்டாகும். இலைகளுக்குக் காம்பில்லை எனலாம். 3 அங்குலம் தொடக்கம் 6 அங்குலம் வரையான நீளம், 0.75 அங்குலம் தொடக்கம் 1.75 அங்குலம் வரை அகலமி ருக்கும். கணுவிடைகள் வளராமை யால் வட்டவொழுங்கில் அமைந் திருப்பதுமுண்டு. இலை அகன்ற அடி யுள்ள ஈட்டிவடிவில், நுனி கூராக நீண்டு பற்றுக்கொம்பு போலச் சுருண் டிருக்கும். பூக்கள் பெரியவை.

இலைக்கக்கத்தில் தனி யாக இருக்கும். அல்லது கிளை களின் நுனியில் இலைகள் நெருங்கி யிருப்பதால் சமதள மஞ்சரி போலத் தோன்றும். ஆறு இதழ்கொண்ட இப்பெரியபூக்கள் (6-7செ.மீ நீளம்) செப்ரெம்பர் தொடக்கம் ஜனவரி யிலும், மார்ச்சிலும் மலர்கின்றன.

பூக்காம்பு 3-6அங்குல நீளமிருக்கும் முனையில் வளைந்திருக்கும். 2.5 அங்குல நீளம்,0.3 - 0.5 அங்குல அகலம் கொண்டதாகும். குறுகி நீண்டு ஓரங்கள் அலைபோல நெளிந் திருக்கும். தளை அவிழ்ந்த மலர் ஏழு நாட்கள் வாடாமல் இருக்கும். இதழ்களில் நிறம் முதலில் பச்சை, பிறகு வெண்மை கலந்த மஞ்சள். பிறகு மஞ்சள், பிறகு செம்மஞ்சள், பிறகு துலக்கமான சிவப்பு. நீலம் கலந்த சிவப்பாக மாறிக்கொண்டு போகும். பூவின் நிறம் இருவேறாக மாறுபடுவதால் இதனை வெண் காந்தள், செங்காந்தள் என்ற இருவேறு வகைகளாக அழைப் பர். கிழங்கு பிரிந்து கணுக் கள் உள்ளதை ஆண்காந் தள் என்றும் கணுக்களில் லாததை பெண்காந்தள் என்றும் கூறுவர்.

காத்திகைச் செடியின் கிழங்கு ஆயுர் வேதம், யுனானி முறைகளில் பல விதமாகப் பயன்படுகின்றது. இக் கிழங்கில் காணப்படும் நச்சுப் பொரு ளான கொல்சிசைனே வைத்திய முறைகளில் பயன்படுகிறது.

காந்தள் என அழைக்கப்படும் கார்த் திகைத் திங்களில் முகிழ்விடும் இம் மலர்க் கொடி தமிழீழம் மற்றும் இந் தியா,சீனா,மலாக்கா, தீபகற்பம், அயனமண்டல ஆபிரிக்கா முதலான பகுதிகளிலும் காணப்படுகிறது.

இதன் பூ தீச்சுவாலை போலக்காணப்படுவதால் 'அக்கினி சலம்' எனப்படும். இதன் கிழங்கு கலப்பை வடிவமானதாக இருப்பதால் கலப்பை எனவும் அழைக்கப்படும்.

கார்த்திகைச் செடியானது வேலிகளிலும், பாதையோரங்களிலும், காட்டோரங்களிலும் இக்கொடி படர் ந்து நிமிர்ந்து அழகிய விரல்கள் போல வும், சுடர்கள்போலவும் தோன்றும். இதனாலேயே இச்செடிக்கு மிக மேலான மாட்சிமை பொருந்தியது எனும் பொருளில் (Gloriosa Super ba) என்ற பெயரில் அழைப்பர்.

கார்த்திகைப் பூவின் ஏனைய மொழிப் பெயர்கள் வருமாறு:

சிங்களம்: நியன்கல, சமஸ் கிருதம்: லன்கலி, இந்தி: கரியாரி, மராட்டி:மெத தொன்னி, தாவரவியற் பெயர்: லல்லி ஆசியே குளோறி லில்லி(Lili aceae Glory Lily) தேசத்தின் பூவாம் கார்த்திகைப் பூவினை இனிவரும் காலங்களில் தேசிய நிகழ்வுகள் அனைத்திலும் அணிந்து தேசியமாண்பினை வெளிப் படுத்துவோம். இல்லங்கள், பொதுக் கூடங்கள், வாணிபமையங்கள், கல் விச்சாலைகள் என எல்லாவிடங் களிலும் கார்த்திகைச் செடிவளர்த் துப்பேணி கார்த்திகைப்பூவால் தமிழர் தேசமதை நிறைத்திடுவோம்.

சொத்துடமைக்கு உரிமைகள் உள்ளது போலவே கடமைகளும் உண்டு - தாமஸ்

# மனித உடலில் கல்சியம்

மனித உடலில் மிகக் கூடுதலான தாதுப் பொருளாகக் கல்சியம் விளங்குகின்றது. சுண்ணாம்பிலுள்ள மூலக உலோகம் என்று இது வகைப்படுத்தப் படுகின்றது. வளர்ச்சி அடைந்த மனித உடலில் ஒரு கிலோ வரையிலான கல்சியம் இருக்கிறது . இதில் 99 வீதமானது எலும்புகளிலும் பற்களிலும் செறிந்துள்ளது. மிகுதி ஒரு வீதமானது குருதியிலும் உயிரணுத் திரவங்களிலும் காணப்படுகிறது. மனித உடல் தனது எலும்புக் கூட்டுக் கல்சியத்தை இரு வகையில் இட்டு வைத்துள்ளது. (அ) மறு பாவனைக்கு விடப்படாத என்புக் கல்சியம் (ஆ) நாளாந்திர உணவில் ஏற்படும் கல்சியத் தட்டுப்பாடுகளை நிரப்பும் பாவனைக்குரிய கல்சியம். நாளாந்திர உணவுமூலம் உட்கொள்ளும் கல்சியத்தின் அளவு நிரந்தர அடிப்படையில் குறையுமானால் என்புக் கல்சியத்தை உடல் பயன்படுத்த ஆரம்பிக்கும். இது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

உடல் வளர்ச்சிக்கு, அதாவது என்பு வளர்ச்சிக்கு கல்சியம் அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றது. என்பும் பற்களும் திடகாத்திரமாகவும் ஆரோக்கியமானதாகவும் இருப்பதற்கு கல்சியம் முக்கிய காரணியாக இருக்கிறது. உயிரணுக்களின் தொழிற்பாடுகளுக்கும், நரம்பு மண்டலத்தின் நல்நிலைக்கும், தசைநார்கள் சிறப்பாக இயங்குவதற்கும் குருதியோட்டம் இயல்பு நிலையில் இருப்பதற்கும் உணவு மூலமாகக் கல்சியம் உட் கொள்ளப்பட வேண்டும். ஒஸ்ரியோ போறோசிஸ் (OSTEOPOROSIS) எனப்படும் என்பு முறிவு நோயைத் தடுப்பதற்கு கல்சியம் உதவுகின்றது. என்பதை மருத்துவ ஆய்வுகள் நிரூபித்துள்ளன.



கிரேக்க மொழியில் ஒஸ்ரியோ என்றால் என்பு என்று அர்த்தம். போறோசிஸ் என்றால் நுண் துவாரங்கள் என்று பொருள். மனித எலும்பில் நுண் துவாரங்கள் ஏற்படுவதால் இந்த வகை முறிவு ஏற்படுகிறது எலும்புக் கூடு சம்பந்தமான கற்கையை ஒஸ்ரியோலொஜி (OSTEOLOGY) என்பார்கள் முதுமை அடைந்தோரின் முதுகுக் கூனல் ஒஸ்ரியோபோறோசிஸ் நோயின் ஒரு வெளிப்பாடாகும் மாதவிடாய் நின்று விட்ட பெண் பாலாரை இந்தநோய் பெரும்பாலும் தாக்குகின்றது. பெருமளவு இறைச்சி உணவை உட்கொள்வது மூலம் ஒஸ்ரியோபோறோசிஸ் நோயைக் கட்டுப்படுத்தலாம். என்று எண்ணுவது பெருந்தவறு. ஏனென்றால் இறைச்சியில் கலசியச் சத்து இல்லை. மரக்கறி உணவில் அது கிடைக்கின்றது.

உடற் புரத ஓமோன்களின் செயற்பாடுகளுக்கும் கல்சியம் துணைபோகின்றது. இதயத் துடிப்பு இயக்கம், தசை நார் இயக்கம் என்பன கல்சியத்தில் தங்கியுள்ளன. காயங்களினால் ஏற்படும் குருதிப் பெருக்கை நிறுத்தும் இரத்தக் கட்டிகள் (CLOTS) கல்சியத்தின் தூண்டுதலால் ஏற்படுகின்றன. கல்சியக் குறைபாடுகளை பின் வரும் அறிகுறிகள் மூலம் அவதானிக்கலாம் (அ) அடிக்கடி ஏற்படும் கை, கால் தசைநார் பிடிப்பு அல்லது முடக்கம் (ஆ) உயர் குருதி அழுத்தம். (இ) கை,கால், முதுகு என்பு வளைவுகள், என்பு முறிவுகள் மற்றும் அசாதாரண உடல் மெலிவு.

இறைச்சியில் கல்சியம் சிறிதளவேனும் கிடையாது என்று ஏற்கெனவே கூறியுள்ளோம். ஆடு, மாடு, ஆகியவற்றின் பால், பாலிற் செய்யப்படும் பாலுணவுகளில் கல்சியம் நிறைய உண்டு. பெருமளவு பாலையோ பாலுணவையோ உற்கொள்வதால். கல்சியக் குறைபாட்டு நோய்களைத் தடுத்து விட முடியாது . நாளாந்திர உணவு மூலம் பெருமளவு கல்சியத்தை உட்கொள்ளும் மக்கள் வாழும் நாடுகளில் ஒஸ்ரியோபோறோசிஸ் நோயின் தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளது. இதை மருத்துவ ஆய்வுகள் உறுதி செய்கின்றன மேற்கு நாட்டவர்களிலும் பார்க்கத் துருவத்தில் வாழும் எஸ்கிமோ மக்கள் இரு மடங்கு கூடுதலான கல்சிய உணவுகளை உட்கொள்கின்றனர். ஆனால் மேற்கூறிய நோயினால் எஸ்கிமோ மக்கள் பெருமளவில் பீடிக்கப்பட்டுள்ளனர்.

மறுவளத்தில் ஆபிரிக்கா வாழ் பான்ரு (BANTUS) இனத்தவரின் நாளாந்திர உணவில் குறைந்தளவு கல்சியம் காணப்பட்டாலும் அவர்களை மிக அரிதாகவே இந்த நோய் பீடிக்கின்றது. அவர்கள் உட்கொள்ளும் தாவர உணவிலும் குறைந்தளவு கல்சியம் காணப்படுகிறது. பிரிட்டிஷ் அரசின் மருத்துவ நிபுணர் குழு இந்த விந்தையான மனித உடற் கூறு நிகழ்ச்சியை நன்கு ஆய்வு செய்துள்ளது. உலகில் வாழும் பல்லின மக்கள் கல்சியம் உட்கொள்வதில் பெரும் சிரத்தை எடுப்பதில்லை என்றாலும் அவர்கள் மீதான இந்நோயின் தாக்கம் குறைவாக உள்ளது.திட்டமிட்ட உணவுப் பழக்கம் இல்லாவிட்டாலும் தனக்குத் தேவையானவற்றை ஏதோவொரு வகையில் உடல் பெற்றுக் கொள்கின்றது.

கல்சியக் குறைப்பாடுகள் தாவர உணவுகளைச் சரிவர உண்போர் மத்தியில் மிக மிக அரிது. கருமை நிறமுள்ள மரக்கறிகளில், குறிப்பாக இலைகளில் கல்சியம் நிறைவாக உள்ளது. மாமிச பட்சினிகளில் கல்சியக் குறைபாட்டு நோய்கள் கூடுதலாகவும் தாவர உணவு உண்ணிகளில் அரிதாகவும் உள்ளதாக அமெரிக்கன் உணவியல் கழகத்தின் 1980 ஆம் ஆண்டறிக்கை கூறுகின்றது. எம்மத்தியில் எளிதில் கிடைக்கும் முருங்கைக் கீரையில் உடல் வளர்ச்சிக்கு உதவும் விற்றமின்கள் ஏ,பி,சி,ஈ யுடன் அமினோ அமிலங்கள்,கல்சியம், இரும்புச் சத்து பொஸ்பரஸ் சோடியம் போன்ற தாதுக்கள் இருக்கின்றன. முருங்கைக் கீரையைக் கிரமமாக உட் கொள்வதால் உடல் வலிமையும் வனப்பும் பெறலாம்.

பசுப் பாலுடன் அறுகம் புல்லை அரைத்துக் கரைத்து வடித்துக் குடிக்க சிறுநீர் சம்பந்தமான நோய்கள், பலவீனமான இதயம், குருதி நாள அடைப்பு போன்ற நோய்கள் குணமடையும் உடலுக்குத் தேவையான தாதுச் சத்துக்கள் அறுகம் புல்லில் உண்டு. "அரிய மருந்தென அறுகனை அறிவீரே" என்பது சூத்திரம் நவீன இரசாயன மருந்துகளால் தீர்க்க முடியாத நோய்களைத் தீர்க்க வல்லது என்று உலக சுகாதார நிறுவன நிபுணர்கள் ஆராய்ச்சி மூலம் கண்டுள்ளனர். தெய்வீக மூலிகை வரிசையில் அறுகம்புல் முதலிடம் வகிக்கின்றது.

எமது நாளாந்திர சமையலில் பாவிக்கும் பூடு, வெங்காயம், வெந்தயம் என்பனவற்றில் பல்வேறு மருத்துவச் சத்துக்களுடன் கல்சியமும் செறிவாகக் காணப்படுகின்றது.

கல்சியம் செறிந்துள்ள பிற தாவர உணவுகளாவன கரும்புக்கழிவு(MOLASSES), பால் கட்டி (CHEESE), எள்ளுத்தாணியம், சோயா, உருளைக் கிழங்கு, வாதாம்பருப்பு, கடற்பாசி, மோர்,தயிர், கோவா, கோதுமை, தக்காளி இலைவகைகள், கீரைகள், தாவர உணவை மாத்திரம் உட்கொள்வோர் கல்சியத் தேவைகளுக்காக பசுப்பால் உட்பட பால்ப் பண்ணைத் தயாரிப்புக்களை மாத்திரம் நம்பியிருக்கவேண்டாம். கோப்பி, தேனீர் குடிப்பதை குறைக்கவேண்டும். மதுபானத்தை விலக்குவது சாலச்சிறந்தது. மனித என்பிலுள்ள கல்சியத்தை மதுபானம் வெளியேற்றுகிறது. மனித உடல் கல்சியத்தை உள்வாங்குவதற்கு விற்றமின் டி பேருதவி புரிகிறது. சூரிய வெளிச்சத்தில் விற்றமின் டி கிடைப்பதால் சிறிது நேரம் வெய்யிலில் உலாவுவது உடலாரோக்கியத்திற்கு நன்மை தரும். மக்னீசியம் எனும் உலோக மூலகப்பொருள் பச்சை இலைகளில் நிறைய உண்டு. பயறு, உழுந்து போன்ற தானியங்கள், அப்பிள், தோடை, வாழை போன்ற பழங்களிலும் இது காணப்படுகின்றது. விற்றமின் டி உருவாக்கத்திற்கு மக்னீசியம் தேவைப் படுகின்றது. இதுவொரு தொடர் நிகழ்ச்சி. மக்னீசியம் விற்றமின் டி உருவாக்கத்திற்கும் விற்றமின் டி கல்சியத்திற்கும் உதவுகின்றன.

கல்சிய உணவுகளை உட்கொள்ளுதல் அளவோடு இருத்தல்வேண்டும்.கல்சியமு ம விற்றமின் டியும் உடலில் அளவுக்கு மிஞ்சினால் எலும்புகளில் கல்சியம் கூடுதலாகத் தேங்கி நின்று ஹைப்பர்கல்கேமியா(HYPER CALCAEMIA) என்று நோயை உருவாக்கும். நீருக்குப் பதிலாகப் பெருமளவு பசுப்பாலைக் குடிப்போருக்கு இது ஏற்பட வாய்ப்புண்டு. இவர்களின் பல்லில் வெண்படலம் காணப்படும்.

**அன்பரசு**

மனித உடலின் திருப்தியான இயக்கத்திற்குத் தேவையான சமச்சீரான உணவுப் பட்டியலில் கல்சியம் நான்காம் இடம் வகிக்கின்றது. முதலாம் இடத்தில் ஸ்ரார்ச்(STARCH) எனப்படும் மாச்சத்து இடம்பெறுகின்றது. இரண்டாம் இடத்தில் கொழுப்புச்சத்து (FATS) இருக்கிறது. மாவும் கொழுப்பும் இணைந்து உடலின் எரிபொருளாக அமைகின்றன. அரிசி, கிழங்கு, தானியங்கள் மாச்சத்தையும், இறைச்சி, முட்டை, பால், பட்டர், எண்ணைகள் என்பன கொழுப்பையும் உடலுக்கு வழங்குகின்றன. மூன்றாம் இடத்தில் நிற்கும் புரதம் மிகவும் முக்கிய பங்களிப்புச் செய்கிறது. உடல் உயிரணுக்களின் வளர்ச்சிக்கும் இயக்கத்திற்கும் புரதம் அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றது. புரதத்தில் காணப்படும் அமினோ அமிலங்கள் உணவு மூலம் கிடைக்கின்றன.

தரத்தில் சிறந்த புரதம் விலங்கின உணவில் கிடைப்பதாக உணவியல் நிபுணர்கள் கூறுகின்றனர். உடலின் கட்டுமானப் பொருள் என்று வர்ணிக்கப்படும் புரதம் இறைச்சி, மீன், முட்டை, பால், பட்டர், சீஸ் என்பவற்றில் செறிந்து காணப்படுகின்றது. தாவரப் புரதங்கள் சோயா, அவரைகள், தானியங்கள், பால் என்பவற்றில் கிடைக்கின்றது. நாட்டுப் பயறும் பசு நெய்யும் கலந்து சோற்றுடன் உண்ணும் போது இறைச்சிக்கு நிகரான புரதம் கிடைப்பதாக சைவ உணவுப் பிரியர்களும் உணவு வல்லுனர்களும் தெரிவிக்கின்றனர். விலங்கினப் புரதத்தை விரும்பி உண்போர் அதன் சிறப்பையும் தாவரப் புரதத்தை தெரிவு செய்தோர் அதன் சிறந்த இயல்புகளையும் தத்தம் விருப்புக்கு ஏற்ப விதந்து பாராட்டுகின்றனர். உணவு பற்றி ஒன்றை மாத்திரம் இங்கு குறிப்பிடலாம், சிலர் வாழ்வதற்காக உண்கின்றனர், இன்னும் சிலர் உண்பதற்காக வாழ்கின்றனர்.

தாதுப் பொருள்கள் நான்காம் இடம் வகிக்கின்றன. இவற்றைப் பெருமளவில் உண்ண வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் உண்ணாமல் விட்டால் நோய்வாய்ப்பட நேரிடும். கல்சியம், மக்னீசியம், பொட்டாசியம், சோடியம், இரும்பு என்பன இந்த ரகத்தைச் சேர்ந்தவை. கல்சியத்தைப் போன்று ஆரோக்கியமான எலும்பு மற்றும் பற்களுக்கு பொஸ்பரஸ் தேவைப்படுகின்றன. இவ்வகைத் தாதுப்பொருள் முட்டை, மீன், இறைச்சி,பால், தானியங்கள் என்பனவற்றில் செறிந்துள்ளது. அனேகம் தாதுப் பொருள்கள் கிட்டத்தட்ட ஒரே உணவு வகைகளில் இருப்பதை அவதானிக்கலாம். இரத்தச்சோகை எனும் நோய் இரும்புச்சத்துக் குறைபாடுகளால் ஏற்படுகின்றன. பச்சை இலை மரக்கறி, வெந்தயம், தானியங்கள், இறைச்சி, முட்டை, பால், பழவத்தல், மீன் என்பவற்றில் இரும்புச்சத்து உண்டு.

மேலைத் தேயங்களில் இப்போது தாவர உணவு உட்கொள்வதை நாகரீகமாகவும், பயனுள்ள உணவுப் பழக்கமாகவும் பார்க்கின்றனர். இத் தொடர்பில் ஐந்து வகை, தாவர உணவு உண்போர்களை நாம் அவதானிக்கலாம்.

(அ) யாதொரு இறைச்சியோ முட்டையோ உண்ணாதவர்கள், இவர்கள் பாலையும் பால் பண்ணைத் தயாரிப்புகளையும் உட்கொள்வார்கள். இவர்கள் LACTO VEGETARIANS என்று அழைக்கப்படுகிறார்கள்.

(ஆ) யாதொரு இறைச்சியோ, பாலோ, பாற்பண்ணைத்தயாரிப்பையோ உட்கொள்ளாதவர்கள். இவர்கள் மரக்கறியும் முட்டையும் உண்பார்கள். இவர்களை OVOVEGETARIANS என்பார்கள்.

(இ) இறைச்சி வகைகளை இவர்கள் உண்ணமாட்டார்கள். ஆனால் பால், பாற்பண்ணைத் தயாரிப்புகள், முட்டை என்பனவற்றை உண்பார்கள். இவர்கள் LACTO - OVO - VEGETARIANS என்று அழைக்கப்படுகிறார்கள்.

(ஈ) ஒருவகை இறைச்சியையும் இவர்கள் உண்ணமாட்டார்கள். முட்டை,பால், பால் பண்ணைத் தயாரிப்புகள், இளம் கோழிகுஞ்சு ஆகியவற்றை உண்பார்கள்.

(உ) இந்த ரகத்தினர் இறைச்சி,பால், பாற் பண்ணைத் தயாரிப்புக்கள், முட்டை, பட்டர், சீஸ், விலங்கினத்தோடு தொடர்புடைய உணவுகள் போன்ற யாவற்றையும் விலக்கித் தனித் தாவர உணவை மாத்திரம் உட்கொள்கின்றனர். இவர்களை VEGANS என்று அழைக்கிறார்கள். உணவு உலகில் இவர்கள் தீவிரவாதிகள். ◉

ஒரு விவேகி தனியனாய் இருக்கும்போதுதான், தனிமையில் இருப்பதில்லை. - ஜனார்த்தனன்

# மகிழ்ச்சியின் தோற்றுவாய்... அழகியல் செயற்பாடுகளே...

**"முள்ளியவளை நுண்கலைக் கல்லூரியில் நடந்த அறிவோர் கூடல் நிகழ்வில் முல்லை கல்வி வலய சிறுவர் கல்வி ஆசிரிய ஆலோசகர் திரு. அருணாசலம் அவர்களால் நிகழ்த்தப்பட்ட "சிறுவர் கல்வியில் கலைத்துவ வெளிப்பாடுகளின் பங்கு" என்னும் தலைப்பிலான ஆய்வுரையின் தொகுப்பு"**

அழகியல் என்பது கலையம்சங்களின் தொகுப்பாகும் கலையும் பண்பாடும் வாழ்வியலில் இரண்டு கண்கள். ஒவ்வொரு மனிதர்களுடைய மகிழ்ச்சிகரமான வாழ்வின் பின்னணியில் கலைத்துவமும் பண்பாடும் இணைந்துள்ள தன்மை நிலவுகின்றது. வாழ்வின் தன்னிறைவை அடையாளப்படுத்தி நிற்பது மகிழ்ச்சி. தனி மனிதனிடம் குடும்பத்திடம் குழந்தைகளிடம், நிறுவனங்களிடம் மகிழ்வுச் சூழல் வெளிப்படுவதையே ஒரு தேசத்தின் கல்விக் கோட்பாடுகள் சுட்டி நிற்கின்றன. நிலையான மகிழ்ச்சியின் தோற்றுவாயாக அழகியல் செயற்பாடுகள் வெளிப்படையாக நிற்கின்றன. மனிதனின் இயல்பூக்க வெளிப்பாடுகளை நெறிப்படுத்தி ஒழுக்காற்றுப் படுத்துகின்ற அம்சங்களாக. ஆடல், பாடல், ஒட்டுதல்,வெட்டுதல், கட்டுதல், தொடுத்தல், ஆக்குதல், இசைத்தல் என்பன எமது செயற்பாடுகளுடன் பிணைக்கப்பட்டுள்ளன. இவற்றை எமது வாழ்வியலில் இருந்து பிரித்துப்பார்த்துவிடமுடியாது அழகியல் கலையம்சங்கள் வாழ்வியலிலிருந்து பிரிக்கப்படுமாயின் சடப்பொருட்கள் என்ற தொகுதிக்குள் வாழ்வு தளளப்பட்டுவிடும். அழகி யல் மனிதனுடன் கூடப்பிறந்த அம்சமாகையினால் இதன் மூலம் அடையப்படவேண்டிய மனிதப்பண்புகளை பிரதிப்படுத்துவதில் ஆதிக்கம் செலுத்துகிறது. இதனாலேதான் குழந்தை கல்விக்கலைத்திட்டத்திலும், ஆரம்பக்கல்விக் கலை திட்டத்திலும் அழகியல் கல்வியை தேசியக்கல்வி ஆணைக்குழுவினால் உள்ளடக்கிப் பாடநூல்களும் செயற்பட்டு ஒழுங்குகளும் வரையறை செய்யப்பட்டுள்ளது. ஆரம்பக் கல்வியில் அழகியல் கல்வி கட்டாயமான செயற்பாடுகளை உள்ளடக்கியிருக்கின்றது.

சுயகௌரவம் பேணப்படுதல்
தன்நிறைவு
பிறரால் பாராட்டுப் பெறல்
தரமுயர்ந்து நிற்றல்
வருமானம் மீட்டுதல்
} மகிழ்ச்சி

கல்வியின் குறிக்கோள் இறுதி வடிவம்-மகிழ்ச்சி படம் வரைதல், படம் பார்த்து கதை கூறுதல், கவிதை ஆக்குதல், இசைக்கருவிகளை ஒலித்தல், இசைத்தல் பாடல்கள் அபிநயத்தோடு பாடுதல், கும்மி கோலாட்டம் பரதம் கூத்து வெளிப்பாடுகள் பாவனை வெளிப்பாடுகள் (றோல்பிளே) ஒட்டுதல், மாலை கட்டுதல், தொடுத்தல் வனைதல் அப்புதல் மெத்துதல் ஆகிய செயற்பாடுகள் போன்ற அழகியல் செயற்பாடுகள் கல்வி முழுவதும் இணைக்கப் பட்டுள்ளது தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம் போன்றவற்றில் சரியான தேர்ச்சித்திறனை குழந்தைகள் பெற்றுக்கொள்ளும் வகையில் அழகியல் செயற்பாடுகளுடன் இணைக்கப் பட்டுள்ளது. அழகியல் கல்வியின் அம்சங்கள் வியக்கத்தக்க தேர்ச்சித்திறன்களைத் தோற்றுவித்தி ருக்கின்றது. ஒவ்வொரு பிள்ளைகளும் வாழ்வுக்குத்தேவையான பின்வரும் தேர்ச்சிகளைப் பெற்றிருப்பதை ஆரம்ப கல்விப்பிரிவு உறுதிசெய்கிறது.

ஆக்குவார்
இரசிப்பார் கருத்தை வெளிப்படுத்துவார்
இசையுடன் பாடுவார்
ஒப்பனை செய்வார்
பூக்களை தொடுப்பார் கட்டுவார்
சைகைமூலம் எண்ணங்களை வெளிப்படுத்துவார், கோலம்போடுவார்,
பொருத்தப்பாடுகளை அறிவார்,
ஓவியம் வரைவார்.

மேற்படி தேர்ச்சித்திறன்களைச் சிறப்பாகப் பிள்ளைகள் பெறுவதன்மூலம் பண்புசார் தேர்ச்சிகள் அடையப்படுகின்றன. பொறுமை, சகிப்பு, விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு எண்ணங்களை வினயமாக வெளிப்படுத்துதல் எடுத்தகாரியத்தை முழுமைப்படுத்துதல் ஆவணப்படுத்துதல் மதிப்பளித்தல் ஏற்றுக்கொள்ளுதல் நன்மை தீமை பகுத்துணர்தல் மனச்சுமைகளிலிருந்து விடுபடுதல் பயனுள்ள பொழுதுபோக்கு எழுத்தாற்றல் பெறுதல் பேச்சுத்திறன் பெறுதல் இவ்வாறான பண்புகளை வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்புக்கள் பெற்றாரிடம், ஆசிரியர்களிடம், சமய சமூகவழிகாட்டிகளிடம், கலைக்கல்லூரிகளிடம் கலைஞர்களிடம், விடப்பட்டிருக்கின்றது அழகியலின் அம்சங்களை வெளிப்படுத்துவதில் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, கலைக்காட்சி நிலையங்கள் முக்கியபங்கை ஏற்கின்றன.

இந்த அழகியலின் முக்கியத்துவம் ஒவ்வொரு தாய் தந்தையரிடமும் எடுத்துச் சொல்லப்பட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும் கல்வியை ஒரு திணிப்பாகக் குழந்தைகளிடம் ஏற்படுத்தி வாழ்வின் குறிக்கோளை திசை திருப்புவதால் நெருக்கீடுகளுக்குள்ளாகும் குழந்தைகள் மனமுரண்பாடு,அடிதடி, கொலை, கொள்ளை, அவமதிப்பளித்தல், தற்கொலை புரிதல் போன்ற பாதை மாறியசெயற்பாடுகளில் இறங்கிவிடுகின்றன. பிள்ளைகளிடம் இயல்பாகவே இணைந்துள்ள அழகியல் உணர்வுகளை அடக்கி வாசிப்பது சிறுவர் உரிமை மீறல் செயற்பாடுகளுக்குள் சேர்க்கப்படுகின்றது.

மறைமுகமாக நாம் குழந்தைகளின் பண்புகளை வளர்த்தெடுப்பதில் பாரியபிழைகளைச்செய்து விடுகின்றோம்.

இன்றைய தேவை மன உறுதி மிக்க இளைய தலைமுறையினைத் தோற்றுவிப்பதாகும். இவ்வாறான குறிக்கோளை அடைவதற்குப் பெற்றார்கள் விளிப்படையவேண்டும் ஆசிரிய உலகம் வினைத்திறனுள்ள செயற்பாடுகளைத் தோற்றம் பெறச்செய்யவேண்டும். முறைசார் கல்வியில் பெற்றுக்கொண்ட தேர்ச்சிகளோடு முறைசாரா வகையில் சேவையாற்றிக் கொண்ருக்கின்ற நுண்கலைக் கல்லூரிகள் எமது தேசியத்தின் அரும் பெரும் பொக்கிசங்களாகக் கொள்ளப்படுகிறது. இக்கல்லூரிகளின் பயன்பாட்டைமுழுமையாகக் கிக் கொள்வதற்கு பெற்றாரும் துறைசார்ந்தவர்களும் முன்வரவேண்டும் இந்த இலக்கை அடையச்செய்வதில் அனைவருக்கும் கூட்டுப்பொறுப்பு உண்டு.





# உள நெருக்கடிகளால் ஏற்படும் விளைவுகள்...!

உள நெருக்கீடு (nental stress) களின் உருவாக்கத்திற்கு இன்றைய சூழல், சமூகம், குடும்பம், தனிநபர் போன்றவற்றின் நடவடிக்கைகளும், இதன் தாக்க விளைவுகளுமே காரணமாக அமைகின்றன. இத்தகைய உள நெருக்கீடுகள் பொதுவாக எல்லோரிடத்திலும், எல்லாமட்டங்களிலும் காணப்படுகின்றன.

ஆனால் இவை தனியார் வேறுபாட்டை பொறுத்து சிலரிடம் இதன் தாக்கவலு உயர்வாகவும், சிலரிடம் தாழ்வு மட்டத்திலும் தீவிரம் அடைவதுண்டு. இத்தகைய தீவிர உணர்வானது அவர்களை உடல்,உள நோயாளியாகவும், வேறு சில சமூக மட்டத் தாக்கங்களையும் அதன் வெளிப்பாடுகளையும் உள்வாங்கி அதன் தாக்கத்திலிருந்து மீள முடியாதவர்களாகவும் நடைப்பிணங்களாகவும் மாற்றமடைகின்றனர்.

சமூக மட்டத்தில் சிலரின் நடவடிக்கைப் பெறுபேறுகள் சூழலின் தாக்கத்தால் உள நெருக்கீடுகளுக்கு ஆட்படுவது போன்ற உள்ளத்தில் ஏற்படும் உந்தல்களினாலும் போராட்டங்களினாலும் இத்தகைய நிலைக்கு உட்படுகின்றனர். இதன் காரணமாக உள நெருக்கீடுகள் தீவிரமடைகின்ற போதே நடத்தைப் பிறள்வுகள் ஏற்படுகின்றன.

இவ்வாறான உள நெருக்கீடுகளுக்கு ஆளாகும் நிலைகள் பல மட்டங்களில் காணப்படுகின்றன. இவை சிறுவயதிலும் பார்க்க விடலைப் பருவத்தினரிடையேயும் நாற்பது (40)வயதினைக் கடந்தவர்களிடையேயும் அதிகரிப்பதைக் காண முடிகின்றது.

குறிப்பாக உளநெருக்கீடுகளுக்கு பொருளாதார காரணிகளும் பெரும் பங்கு வகிக்கின்றன.

இன்றைய யாழ். சமூகமட்டத்தினை எடுத்துக்கொண்டால் இங்கு கிடைக்கும் குறைந்தவருமானமும், மற்றும் நிவாரண கொடுப்பனவுகளும் அக்குடும்பச் சூழலை பராமரிக்கமுடியாது போகவே குடும்ப அங்கத்தவரிடையே பெரும் உளநெருக்கீட்டினை உருவாக்கிவிடுகின்றது.

இதேபோன்றே 'சுற்றுச் சூழலில் ஏற்படும் பல்வேறுபட்ட தாக்கங்கள், பதட்டங்கள், என்பனவும் உள நெருக்கீடுகளைத் தூண்டுகின்றன. வெளிநாட்டுத் தொடர்புடைய ஒரு குடும்பத்தின் ஆடம்பர வாழ்க்கை அக்குடியிருப்பில் உள்ள ஏழைக்குடும்பங்கள் மத்தியில் உளநெருக்கீடுகளை மேலோங்கச்செய்கின்றன மற்றும் ஊர்க்கலவரங்கள், குண்டர்குழு மோதல்கள், இன வன்முறைகள் என்பன இடம்பெறும் சமூக அமைப்பில் உளநெருக்கீட்டினை அதிகரிக்கச் செய்கின்றன.

குறிப்பாக போர்க்காலச் சூழ்நிலையினை எடுத்துக்கொண்டால் இங்கு ஏற்படும் வாழ்வுக்கான உயிர்க்காப்புக்கான தற்காப்புப் போராட்டங்கள் மற்றும் மரபுகள், கட்டுப்பாடுகள்,சமூக நியமங்கள் என்பவை உளநெருக்கீடுகளைத் தூண்டிவிடுகின்றன.

இவ்வாறு உளநெருக்கீடுகளுக்கு ஆளானவர்களிடம் நடத்தைகள் சார்பாக, உடலியல் எழுச்சிகள் சார்பாக, மன உணர்வுகள் சார்பாக, பல மாற்றங்களை எதிர்பார்க்கலாம் இவர்களிடம் படபடப்பு, செயற்பாடுகளில் காணப்படும் பதட்டம், நெஞ்சுநோ, அடிக்கடி வியர்த்தல், நாவரட்சி, வேலையில் நாட்டமின்மை, பாலியல் செயற்பாடுகளில் ஏற்படும் அசமந்தம், பசியின்மை, தெளிவற்ற சிந்தனை என்பன தென்படும்.

உள நெருக்கீடுகளுக்கு ஆட்பட்டவர்கள் தம்மைப் பற்றி தாழ்வு மனப்பான்மை உடையவர்களாக, எல்லா நிலைகளிலும் தம்மில் சுய நம்பிக்கை அற்றவர்களாக, காணப் படுவர். இப்படியானவர்கள் எதிலும் தெளிவானதொரு முடிவினை எடுக்க முடியாத பதட்ட நிலையினை அதிகம் கொண்டிருப்பர்.

இப்படிப்பட்டவர்களில் பெரும்பாலானோர். தமக்குள்தாம் ஏதோ பேசுதல், முணுமுணுத்தல், சத்தமிட்டு உரத்துப் பேசுதல், காரணமின்றிச் சிரித்தல், கோபப்படுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவர் இத்தகைய காரணங்கள் உள நெருக்கீடுக்கான ஆரம்ப காரணங்களாகும்.

இத்தகைய உள நெருக்கீடுகளுக்கு அதிகளவில் ஆட்படுவோர் ஆண்களைவிட பெண்களே அதிகம் என உளவியல் ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. இதற்குக்காரணம். குடும்பப்பெண்கள் சமூகத்தில் பலசுமைகளை,பலபொறுப்புக்களைத்தாங்கிக்கொள்வதோடு, பல கருமங்களை உரியகாலத்தில் செய்து முடிக்கவேண்டுமென்ற கட்டாய எண்ணப்பாடுகள் காணப்படுவதால் தமது உள்ளத்தில் ஏற்படுகின்ற இன்ப-துன்பங்களை மற்றவர்களோடு சுதந்திரமாக பகிர்ந்துகொள்வதில் வாய்ப்புக்கள் குறைவாக இருப்பதுமாகும்.

**உளநெருக்கீடுகளுக்குத் தகுந்த சிகிச்சை அவசியம். இவை தொடர்பான சமூகத்தின் தவறான பார்வை உடைக்கப்படுதல் வேண்டும். இல்லை எனில் அறிவுசார் சமூகத்தின் விருத்தி எதிர்காலத்தில் வீழ்ச்சிப்பாதை நோக்கி...............**



உளநெருக்கீடுகளுக்கு ஆட்படுவோர் அதிலிருந்து மீள சிறந்தசமூக உளவியலாளர்களை அணுகி சிகிச்சை பெறுதல்வேண்டும். இவ்வாறு சிகிச்சை பெறுவதை சமூகரீதியாக சிலர் விரும்புவதில்லை இதற்கு பிரதான காரணம் தாம் உளநோயாளர் என கருதப்பட்டுவிடுவோம் என்ற அச்ச நிலையாகும். இதேபோன்று சமூகத்தின் பார்வையும் இப்படிப்பட்ட சிகிச்சை பெறுபவர்கள் மீது தவறான சொற்பிரயோகங்களை (விசர்,லூஸ்) கையாழ்வதாகும்.

இத்தகைய சமூக நிலைகள் உடைக்கப்பட்டு ஆரோக்கியமான சமூகம் ஒன்று உருவாக இப்படிப்பட்ட சிகிச்சை அணுகுமுறைகள் மிகமுக்கியமானதொன்றாகும்.


இவ்வாறு நாம் சமூகத்துக்குப் பயந்து கொண்டு, இத்தகைய அரம்ப நிலைகளில் சிகிச்சை பெறாது ஒதுங்கிக்கொள்வோமாயின் காலப் போக்கில் "மன நோயாளி" ஆக வேண்டிய கட்டாய நிலைக்கே தள்ளப் படுகின்றோம்.

இத்தகைய பிரச்சினைகளிலிருந்து எம்மை விடுவித்துக்கொள்ள நாம் எமது உள்ளத்தினை சமனிலை மட்டத்தில் வைத்திருத்தல் முக்கியமானது. மேலும் எவ்விதமான தாக்கங்களுக்கும், பாதிப்புக்களுக்கும் ஆட்படாமல் மனத்தினை (உளத்தினை) சகஜ நிலையில் வைத்திருத்தல் அவசியமாகும்.

இதற்காக ஒருவர் ஒருவரோடு மனம் விட்டுப்பேசி தமது உள்ளக் கிடைக்கைகளையும், மனச்சுமைகளையும் வெளிக்கொண்டுவருவதோடு, அவைபற்றியசிறந்த தெளிவு நிலையினைப் பெறுதல்வேண்டும். மேலும் நல்ல பொழுது போக்குகள், சுகமான தூக்கம், அரோக்கியமான உணவு நடைமுறை என்பன பின் பற்றவேண்டும். இத்தோடு இன்பமான-அமைதியான குடும்பச்சூழல், தூய்மையான சுற்றுச்சூழல் என்பனவும் முக்கியமானதொன்றாகும்.

**சே. ஜெயானந்தன்**

தவறு எதையும் உணராது இருப்பதே, தவறுகளில் தலையாயது. - தாமஸ் கார்லைல்







பள்ளிக்கூடம் இப்ப என்னைவிட்டு தொலைவுக்கு போய்க் கொண்டிருக்கு. வகுப்பில படிச்சவங்களின்ர முகங்களை ஒவ்வொன்றாய் மறந்துகொண்டிருக்கிறன் வகுப்பறைக்கென்று ஒரு மணம் இருந்ததை மட்டும் என்னால உணரமுடியுது. எங்கட வகுப்பறை பூவரசுகள் நெருக்கமாக நிற்கிற வேலிக்கு பக்கத்தில் இருந்தது. நாலஞ்சு வகுப்புகள் சீலிங் பலகையடிச்ச ஸ்கிரினுகளால பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொருவருடமும் ஒவ்வொரு வகுப்பாக மாறிக்கொண்டிருந்தம் (ஆமியளப்பற்றிக் கேள்விப்பட்டுக் கொண்டு) நாலாம் வகுப்பில இருக்கேக்க திரியாயில இருந்து இடம் பெயர்ந்து வந்திருந்த கோணேஸ் எங்கடை வகுப்பில சேர்ந்திருந்தவன்-அவனுக்கு எங்கடை வகுப்பில இருந்த ஆரோ ஒருத்தன் (அனேகமாக கிரிசாந்தனாயிருக்கும்) 'திரியாய்' எண்டு பட்டப்பெயர் வைச்சிருந்தான்- அவனாலதான் முதல்ல ஆமியளப் பற்றி கேள்விப்பட்டன்- திரியாய்க்குள்ள ஆமிவந்ததால நாங்கள் இடம் பெயரவேண்டிவந்தது' என கோணேஸ் எப்பவும் சொல்லிக் கொண்டிருப்பான்- அப்ப நாங்கள் ஆமியைக்கண்ணால காணாதகாலம்-ஆமியின்ர உருவத்தை மனதில் கீறிப்பார்க்கத் தொடங்கியிருந்தம்மனதில கீறிப்பார்த்த உருவங்களுக்கும் இப்ப நேரில் பார்க்கிற உருவங்களுக்குமிடையில பெரிசா வித்தியாசம் ஏதும் இருக்கிறதா நான் உணரேல்ல.

அவங்கள் வரேக்குள்ளேயே சுட்டுக்கொண்டுதான் வந்தவங்கள் நாங்கள் எல்லாம் வகுப்புக்குள்ளையே விழுந்துகிடந்தம் அவங்கள் வெளியாலநிண்டு சுட்டுக்கொண்டிருந்தாங்கள் விடாமல் கொஞ்சநேரத்தால சத்தமொண்டும் கேக்காமல் எல்லாம் ஓஞ்சுபோயிருந்தமாதிரி உணர்ந்தன். பிறகு ஆரோ பொம்பிளை கூழறின சத்தம் கேட்டுது. மைதிலி ரீச்சரின்ர குரல்மாதிரியும் இருந்தது. எனக்கு மூச்சு விடவும் பயமாயிருந்தது- ஒருவாத்திமாரின்ர அசைவும் இல்லை அதைத் தொடர்ந்து பிறகொரு சத்தமும் இல்லை. நாயள் மட்டும் மோசமாய் குலைக்கிறது கேக்குது. தலைநிமிர்த்திப்பார்க்கிற துணிவுமில்லை. சீலிங்பலகையடிச்ச ஸ்கிரீனெல்லாம் பாட்டத்தை வீழுந்து போயிருக்கு. அதுக்குக் கீழையும் கனபேர்கிடக்கினம் எனக்கோ மூத்திரம் முட்டியிட்டுது. கொஞ்சநேரம் கழிஞ்சு விழுந்துகிடந்த எல்லாரும் எழும்பி தாறுமாறாக ஓடினம். பின்வளவு பனங்காணிக்குள்ளால ஓடி கோயிலடிக்குவந்து சேரக்குள்ள கண்டபாட்டில வெடிபறியத் தொடங்யிட்டுது. நான் நிக்கிற தீர்மானமில்லாமல் ஓடிக்கொண்டிருந்தன். ஒருதலைக்கறுப்புமில்லாத தெருவில நான்மட்டும் தான் ஓடிக் கொண்டிருந்தன்."

"வீட்டில ஆரப்பார்த்தாலும் பயமாத்தானிருந்தது. கண்திறக்கேலமலிருக்கு வெளிமுத்தத்தில கனபேர் இருந்து கதைக்கிறது கேக்குது பள்ளிக்கூடத்தில நடந்ததைப்பற்றி தானாக்கும்."திரியாய்" கோணேஸ் வந்து கனவில் எங்கடை இடத்துக்கு ஆமிவந்து எல்லாரையும் கலைச்சிட்டாங்கள்" 'எண்டு சொல்லுறான்.

பள்ளிக்கூடத்துக்கு வாற அதே உடுப்புத்தான். புளுதியடிச்சுப்போய் இருக்கு. தொக்குத் தொக்கெண்டு அவங்கள் ஓடியாற சத்தம் கேக்குது. பக்கத்தில நெசவுசாலை திறந்திருக்கு. நெசவடிக்கிற சத்தம் கேட்கயில்லை. நெசவடிக்கிற பெட்டையல் ஒருத்தியையும் காணேல்ல நெசவுக்குள்ளை ஆரோஒருத்தி வீரிட்டுக்கத்துகிறாள். நாயள் எப்பவும் குலைச்சுக் கொண்டுதானிருக்கு. அவங்கள் என்னைப் பிடிச்சிடுவாங்கள் எண்டு நம்புறன். மைதிலி ரீச்சரில

அவனைப்பார்த்தால் பாவமாயுமிருக்கு "போடா" லூசா!எண்டு கலைக்கவேணும் மாதிரியும் இருக்கு 'என்ர நெற்றியைத் தொட்டுப் பார்க் கிறகை அம்மாவின்ர மாதிரியிருக்கு.'

"அனலாக்கொதிக்குது." அவதான் சொல்லுறாபோல எனக்குமூடின கண்களுக்குள்ள பொறிபறக்குது. கண்மூடி முழிக்கிறதுக்கிடையில எல்லாம் நடந்து முடிஞ்சிட்டுது. புத்தகம் கொப்பிகளின்ர எண்ணமும் வருகுது. புத்தகப்பையைத் தூக்கிக் கொண்டு ஓடிவந்திருக்கலாம் என்ற எச்சமான நினைவும் வருகுது. மைதிலி ரீச்சரைப்பற்றி ஆரோ வெளியில இருந்து கதைக்கினம். "கண்ணுக்குள்ள குத்துற மாதிரித் தானே அவளின்ரை உருவம்." கனபேர் ஓடிவாறாங்கள் என்னத்தைத் திரத்திக் கொண்டு .நான் மூச்சுவாங்க ஓடுறன் ஒளிக்குறதுக்கு ஒருடமும் கண்ணில தென்படயில்லை நாளைக்கு பேப்ரில நான் பிடிபட்டதாய் அல்லது சுட்டுக்கொல்லப்பட்டதாய் ஒரு செய்தி பிரசுரமாயிருக்கும் எண்டு நினைச்சுக்கொண்டு ஓடுறன். பிறகு பார்த்தா எங்கடை வீட்டில் வெங்காயப்பிடியளைக் கட்டித்தூக்கியிருக்கிற மால் தெரியுது. மனதில ஒருஆறுதல் வந்துஓடிப்போய் உள்ளுக்கை புகுந்து கட்டிலுக்கு கீழே பதுங்கிறன். அதுக்குள்ளை.........இதென்ன அநியாயம் மைதிலிரீச்சர் ரத்தம் தோஞ்சுபோய் கிடக்கிறா.

எந்தவித அசைவுமில்லை நான் அவவுக்குப்பின்னால ஒளிக்கிறன். அவங்கட சப்பாத்துக்கால்களைப் பக்கக்கூடியதா இருக்கு கீழே குனிஞ்சு பாப்பாங்கள். நான்துலையப்போறன்.

என்னைக் கொண்டுபோய் வைச்சிருக்கிறது ஒருபள்ளிக் கூடம் மாதிரித்தான் தெரியுது சரியான இருட்டாயிருக்கு. இடைக்கிடை சில முகங்கள் நெருங்கிவருகுதுகள் திரியாய் கோணேஸ்மாதிரியும் கிரிசாந்தன்

## இராகவன்

மாதிரியும் உணருகிறன். அவங்களிட்ட நாங்கள் எல்லாம் இயக்கமெண்டு ஒப்புக்கொள்ளோனுமாம். ஒருமுகம் சொல்லிக்கொண்டிருக்கு. ஒருத்தனை உளண்டியில கட்டிக்கிணத்துக்குள்ளை இறக்கிறாங்கள். அவன் முக்குளிக்கிற சத்தம் கேக்குது. பிறகு மேலை இழுத்துக்கேக்கிறாங்கள் 'நீ இயக்கந்தானே?' அவன்பேசாமல் தொங்குறான். பிறகும் இறக்கிறாங்கள். முக்குளிக்கிற சத்தம் எனக்கு அவன் இயக்கமெண்டு ஒப்புக்கொள்ளவேணும் மாதிரிக்கிடக்கு.' இதோட ஒரு ஐம்பது தரம் உப்பிடிச் செய்து போட்டாங்கள்.' எண்டு பக்கத்தில ஒரு முகம் கதைக்குது. அது கிரிசாந்தனாயிருக்கும். என்னை இங்கை கொண்டு வர முதலே அவங்கள் அவனை உளண்டியில கட்டிஇறக்கத்தொடங்கியிருப் பாங்களாக்கும்.

எங்கடை பள்ளிக்கூடத்தில தான் எங்களைக்கொணந்து வைச்சிருக்கிறாங்களோ? ஆரையும் கேக்கவேணும் போலயிருக்கு. மைதிலி ரீச்சர் என்ர வீட்டு மாலுக்கை கட்டிலுக்குக் கீழேரத்தம் தோய்ந்து போய்க்கிடக்கிறதையும் ஆருக்கும் சொல்ல வேணும் போலயுமிருக்கு. ஆனால் எனக்கு மூச்சுவிடவும் பயமா இருக்கு. "ஐயோ! என்ரஐயோ!" ஆருக்கோ கொதிதண்ணி ஊத்திறாங்களாக்கும். அல்லாட்டில் நிகம் புடுங்கிறாங்களாக்கும்.

வலைவீச்சுக்குப் போறாக்களின்ரை பெடியல் கனபேர். ஈசன், சர்வன், சங்கர், நேசன், அருமை சிவராசா எண்டு பள்ளிக்கு வந்து போவாங்கள் அட்டைகிழிஞ்ச புத்தகங்களும் கொப்பியளுந்தான் அவங்களிட்டை இருக்கும். இங்கிலீஸ்பாடத்துக்கு அடிவாங்கிறதும் அவங்கள் தான். அநேகமாக எல்லாரும் சளியை உறிஞ்சிக்கொண்டிருப்பாங்கள். வகுப்பில குப்பை கூட்டிக்கொளுத்துறதும் அவங்கள் தான். ஒருத்தன்ர முகமும் ஞாபகத்துக்கு வரேல்ல. இதுக்குள்ளையும் சளி உறிஞ்சிற சத்தம் இடைக்கிடை கேக்குது. அவர்களும் பிடிபட்டிருப்பாங்களோ?

பொம்பிளையளை தலைமயிர் பிடியில நிலத்தோட தேய்ச்சு இழுத்தொண்டு போறாங்கள் அநியாயப்படுவார். நான் அநேகமா இண்டைக்கு தொலைஞ்சன். எனக்குப்பக்கத்தில ஒருத்தரும் இருக்கிறதா அசுகையில்லை. எல்லாரையும் சத்தமில்லாமல் இழுத்தொண்டு போட்டாங்கள் போல அடுத்தது நான் தான் ஆரோமிளகாய் வறுக்கினம் நாசிளரியுது சரியான வேகாரம் இருமினால் கொஞ்சம் சுகமாயிருக்குமெண்டு நினைக்கிறன்.

நல்லவேளை நான் வெளிக்கிட்டதை அவங்கள் காணேல்ல தலைதெறிக்க ஓடுறன் கிறவல் றோட் விழுந்தெழும்பி ஓடவேண்டியிருக்கு. ரத்தமும் கசியத்தொடங்கியிட்டுது நல்ல வேளையாக அந்த வீட்டைக்கண்டன் ஒரு கிழவன் மட்டும்தானிருக்குதோ? ஒளிஞ்சிருக்க வசதியான இடம். கிழவனிட்டைப் போய்க் கேக்கிறன். அது பயப்பிடுகுது. ஒரேயொரு அறையிருக்குதெண்டும் அதுக்குள்ளை ஒளிக்கலாமெண்டும் நடுக் கத்தோட கிழவன்சொல்லுது. நான் அந்த அறைக்குள்ள ஓடினாப்போல கிழவன் வெளியால பூட்டுற சத்தம் கேக்குது. அதுகும் நல்லது தான்.

அறைக்குள்ள ஒரு மணம் கிளம்புது. எங்கடவகுப்பில மணக்கிற அதே மணம். அப்பஇது எங்கட வகுப்பறையாக இருக்குமோ? அந்த அறைக்குள்ளை தாறுமாறுமா கனபேர் கிடக்கினம். எல்லாம் பிரேதங்கள் எண்டது எனக்குப்பிறகு தான் தெரியும். பிரேதங்களோட கழிக்கவேண்டியிருந்த அந்த இரவு வெளியில என்னைத் தேடிக் கொண்டிருக்கிற அவங்களிட்டை இருந்து தப்ப நான் சாமணத்தை சுவாசிக்க வேண்டியிருக்கு.

எங்களைக் கொண்டுபோய் அடைச்சுவைச்சிட்டு பகலில வடிவா நோட்டம் விட்டுப்போட்டு இரவில எல்லாத்திசையாலும் ஆக்கள் ஓடியந்தாங்கள். அகப்பட்ட எல்லாருக்கும் வெட்டு விழுந்தது . மண்டையள் பிளந்தது. என்னோட நெருக்கமா பழகின ஒருத்தனின்ரை பெயர் மறந்திட்டன். மண்டை பிளந்து என்ற முகத்தில தெறிச்சு வழிஞ்ச ரத்தம் சுடுதண்ணி பட்டமாதிரி இருந்தது. அவன் ஆரையோ நினைச்சு முனங்கிக் கொண்டிருந்தான். தாய்தேப்பனை? பெஞ்சாதிபிள்ளையள? சகோதரங்களை? நான் தப்பியிருக்கிறன். ரத்தமும் சதையும் நிறைந்த கனவுகளை காணக்கூடிய வகையில் சாமணத்தை நிதமும் சுவாசிக்கக்கூடிய வகையில எந்தத் திசையில பார்த்தாலும் கூடப்படிச்சவங்களின்ரை ரத்தம் வழியிற முகந்தான் தெரியுது. ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் கதைக்கிறன். வகுப்பில கூடப்படிச்ச திரியாய், கோணேஸ், கிரிசாந்தன், வேவி, வலைவீச்சுக்கு போகிற ஆக்களின்ரை பொடியல் எல்லாரோடையும் பள்ளிக்கூடம் என்னைவிட்டுத் தொலைவாகிக் கொண்டிருக்கு! ஆனால்

பாசிபடிஞ்ச பள்ளிக்கூடத்தின்ர பின்பக்கம் இப்பவும் அதேமணத்தோட எனக்குள்ள இருந்து வருகுது. அந்த இடம் அடிக்கடி கனவுகள் முடியேக்குள்ள வரும்.

நான் அந்த இடத்திலஓடிப்போய் நிற்பன்

. பிறகு எழும்பிப்பார்த்தால் போக்கிறசீலை, பாய் எல்லாம் நனைஞ்சிருக்கும். அவங்களின்ட தலைக்கவசங்கள் தெரியிறதோடைதான் கனவுகள் அநேகமாகத் தொடங்கும். ரக்ரர் போய்க்கொண்டிருக்கிறது கேக்கும். அவங்கள் தான் போய்க்கொண்டிருப்பாங்கள் ரக்ரரில். நாய்கள் விடாமல் குலைச்சுக் கொண்டு பூவரசம் சருகுகள் நொருங்கிக் கொண்டுமிருக்கிற இரவு. மரத்தில ஏறியிருக்கிற வீட்டுக்கோழியள் வெருளும். மரநாய்கள் வந்திருப்பதாய் உணர்ந்திருக்குதுகளாக்கும். எங்கடை வகுப்பு நெருப்புப்பிடிச்செரியும் உள்ளுக்கை கனபேர் அகப்பட்டிருப்பம். எங்களின்ர புத்தகம், கொப்பியெல்லாம் எரியும்

நாங்களே கீறிப்பிடிச்ச நிறங்களைக் கொண்டு நிரப்பி ஒட்டி வைச்சிருக்கிற படங்கள் எல்லாம் கருகும். நாங்களே நட்டு ஒவ்வொரு நாளும் தண்ணியூத்தி வளர்த்த பூக்கன்றுகள் பெருமூச்சு விட்டுக் கொண்டு பொசுங்கும். வகுப்பில இருக்கின்றவங்களோட நானும் தீய்ந்து கொண்டிருக்கிறன். மயிர் எரிஞ்சு மணக்குது. பொசுபொசெண்டு தோல் உருகினபடியே........ என்னத்தைக் கத்துகிறது? ஆரும் கத்தேலாமலுக்கு வாயைத் தைச்சிருக்கு ரக்ரர் ஒண்டு வேகமாய் வாறதும் கேட்குது. அதுக்குள்ளயிருந்து குதிச்சு எங்களிட்ட வருகிற ஆக்களுக்கு முகம் வெறுமையாயிருக்கு கைவிரல்களுக்குப் பதிலாகக் குப்பைவாரி அலகுகள் பொருத்தியிருக்கு (கொஞ்சம் நீண்டு நெருக்கமான பல்லுகளோட) குப்பைவாரி அலகுகளால எங்களை வாரி றோட்டில கொண்டுபோய் குவிச்சு அங்க விட்டிருக்கிற ரக்ரரில கூட்டி அள்ளி ஏத்துராங்கள். பிறகு முகமில்லாத அதேஆக்கள் எங்களுக்கு மேலே இருந்தபடி அடிக்கிறதை உணருகிறோம். ரக்ரர் வேகமா போய்க் கொண்டிருக்கு. நாங்கள் ஒருத்தரோட ஒருத்தர் மோதுபடுகிறம் அவங்கள் சிரிக்கிறாங்கள். கொஞ்சநேரத்தில ரக்ரர் வேகம் குறைஞ்சி நிற்கிறது எங்களுக்கு மேல இருந்தவங்கள் ஒருத்தரையும் காணேல்ல. முன்னால கடல் தெரியுது ரக்ரர் பெட்டி மேலே எழும்புது. நாங்கள் சறுக்கின படியே கடலுக்குள்ள கொட்டுப்படுகிறம் காலநிலை குழம்பிக் கொண்டிருக்கிறதா வாற கனவுக்குறிப்புக்களில் நான்தேடிப்பார்ப்பது எல்லாம் வழமைபோலிருக்கிற வகுப்பையும் நாங்கள் ஆரவாரமாக விளையாடும் மைதானத்தையும்தான். ஆனால் எதிர்பாராதநேரத்தில மழைபெய்யத் தொடங்குது. குடையில்லாமல் நான் போய்க்கொண்டிருக்கிறன். பள்ளிக்கூடம் நோக்கி. எங்கையோ ஒருவீட்டில ஒப்பாரிக்கேக்குது. தொப்பலா நனைஞ்சி வகுப்புக்குள்ள போறன். எங்களை கட்டுப்பாட்டுக்குள்ள வைச்சிருக்கக் கூடியதாய் அவங்கடை குரல் வகுப்புக்குள்ளயிருந்து கேக்குது. எங்களுக்கு குடைவைச்சிருக்கவேண்டியதேவை இருக்கெண்டு ஒருத்தரும் உணரேல்ல ஏன்?. காலம் குறுகிக் கொண்டிருக்கிறதை உணரமுடிகிறது. கூரை ஒழுகிக்கொண்டிருக்கு. நாங்கள் கதிரை, மேசையள ஒழுக்குவிழாத இடத்திற்கு நகர்த்திக் கொண்டிருக்கிறம். இது தான் வகுப்பில எங்களுக்கு இருக்கிற வேலை. எங்கடை எழுத்துக்கள் நிரம்பின கொப்பியள மழைநனைச்சு மையைக்கரைச்சிகொண்டிருக்கு. தொடர்ந்து பெய்தொண்டிருக்குது மழை. எல்லாஇடமும் வெள்ளம் பெருகி வந்துகொண்டிருக்கு. நாங்கள் இருந்த இடமெல்லாம் வெள்ளம் ஆக்கிரமிக்குது. எங்கடை எழுத்துக்கள் நிரம்பிய கொப்பிகள், எங்கடை உணர்வுகள் நிரம்பின வரைபடங்கள் என எல்லாம் வெள்ளத்தில மிதக்க நாங்கள் மூலைக்குமூலை ஒடுங்குறம் கோழிக்குஞ்சுகள் மாதிரி.

திரியாய்-கோணேஸ்,கிரிசாந்தன், அசோக், வலைவீச்சுக்குப் போறாக்களின்ரை பொடியள் என கூடப்படிச்சவங்கள் எல்லாரும் இயக்கத்திற்கு போட்டாங்கள் எண்டு கேள்விப்படுறன். நான் மட்டும் தனிச்சுப் போனமாதிரி இருக்கு. எனக்கு முன்னால தெரியிற ஒவ்வொரு பாதையும் மூடுப்பட்டுக்கொண்டுடிருக்கு. அவங்கள் கன இடத்தில குழிதோண்டி வைச்சிருக்கிறாங்கள். நான் பார்த்துக்கொண்டிருக்கத் தக்கதாக பலரை நிலம் தேய இழுத்து வந்து குழிகளுக்குள்ள விழுத்தி மூடிப்போட்டு நிற்பாங்கள். குக்குறுப்பச்சான்கள் வெருண்டு கத்தினபடி இருக்கு.

அடுத்ததாக குழியில விழுத்திறது என்னைத்தான்.........

இனித்தப்பேலாது. நான் மட்டும் தனிச்சுப்போயிருக்கிற சூழல். எனக்கு முன்னால எந்தப்பாதையும் இல்லை. வீட்டாக்கள் என்னைத்தேடி அலையத் தொடங்கியிருப்பினம். இருள் அடர்ந்துகொண்டுவருகுது. தொடர்ந்து வாகனங்கள் இரைஞ்சு இரைஞ்சு போய்க்கொண்டிருக்கு. அவங்கள் மூடின குழியள ஓநாயள் வந்து வதவதெண்டு வறுகுது. தூரத்தில தெரியிற பனையள் எல்லாம் வட்டில நெருப்புப் பிடிச்செரியுது. இப்பவும் ஆரோ மிளகாய் வறுக்கினம். நாசி எரியுது. இருமினால் கொஞ்சம் சுகமாய் இருக்கும். ஆரோ பெட்டையள் மாறிமாறிக்கத்திறாளவை. அதில மைதிலி ரீச்சரின்ரை குரலும் கேக்கிறமாதிரி இருக்கு. ஆட்காட்டியள் அலறிஅடிச்சொண்டு பறந்து. வட்டமடிக்குதுகள். அவங்கள் வாறாங்களாக்கும். பள்ளிக்கூடம் தொலைவாகிக் கொண்டிருக்கு. இனிப்பிறகு ஆரும் இந்த இடத்தை வந்து சுத்தப்படுத்தித் தோண்டினால் கன எலும்புக்கூடுகள் கிடைக்கும். அதில என்ரையும் ஒன்றாயிருக்கும். பேப்பருகளில படங்களோட பரபரப்பாச் செய்தியள் வந்திருக்கும்.

---

# "செருப்பு" குறும்படம் பற்றி சில நிமிடம்

சமாதானச்சுருள் திரைப்பட வெளியீடு அண்மையில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. பெரும் எண்ணிக்கையில் கொட்டும் வியர்வையில் நனைந்திருந்தனர் இரசிகர்கள். ஆர்வம் அவர்களை அசையவிடவில்லை என்றே சொல்லலாம். 7 குறும்படங்கள் திரையிடப்பட்டன. அவற்றில் என்மனதை பாதித்த படைப்புக்கள் "செருப்பு" "போருக் குப்பின்".

நாங்கள் தென்னிந்திய திரைப்படத்தையும் தொடர் நாடகங்களையும் பார்த்து அந்த கற்பனையில் வாழ கற்றுக் கொள்கின்றோம். எமது தாயகத்தின் பிரதிபலிப்புக்களை ஏனோ தானோ என்று விட்டுவிடுகின்றோம் போலிருக்கின்றது. ஆனால் நாம் ஒருமுறை எம்மை திரும்பி பார்க்க வேண்டும். எமக்குள் ஆழப்புதைந்த வடுக்களை உணர வேண்டும். இவைதான் காலத்தால் அழியாதவை. அந்த உணர்வுகள் ஒருமுறை எமது தேசத்தை மீட்டு பார்க்க உதவும்.

கடலோரக்காற்று, உப்பில் உறைந்த உதிரங்கள் பல்கலையில் திரையிட்ட போது நிறைந்து வழிந்த் இரசிகர்களை அம்மா நலமா? திரையிட்டபோது காணமுடியவில்லை.

இருப்பினும் 'செருப்பு' குறும் படத்தில் ஆரம்பத்தில் உயிர்ப் பெறுகின்ற களம் வன்னிப் பெருநிலப்பரப்பு என்பதை உணர்த்துகின்றது. பாழடைந்த கட்டடம் ஏழ்மை நிறைந்த குடும்பம் அவர்களை பின்னணியாகக்கொண்டு கதை நகர்த்தப்படுகின்றது. பொருளாதார வசதியின்மையால் செருப்பு வாங்குவதற்கு சிறுமி உண்டியல் சேர்க்கிறாள். உண்டியல் சேர்த்த பணத்தில் செருப்பு வாங்கியும் அவள் ஆசைக்கு அணியவில்லை என்பதே குழந்தை மனத்தின் சோகம். வெளிப்பார்வை என்பதை விட அவள் அடிமன ஆழத்தை, அதன் ஏக்கத்தை இரசிகர்கள் மீது நேரடியாக உடைக்காமல் மெல்ல மெல்ல உடைக்கின்றார் தயாரிப்பாளர் கௌதம் .

சிறுமி பெண் என்ற ரீதியில் மிக அமைதியாகவே தன் ஏக்கத்தை மனதில் அடக்கி வைத்திருக்கின்றாள். தன் நண்பியிடம் ஆசைக்கு ஒரு தடவை செருப்பை போட்டு பார்க்க விரும்பி கேட்கிறாள், பாடசாலை போகும் போது வெறுங்கையுடன் வெயிலில் நடந்து போவதும் காலில் தொப்புழங்கள் வருவதும் இயல்பான காரியமா? அதில் அவளுக்கு ஏற்படும் கவலைகள்?...

தொடர்ந்து அவள் தந்தை செருப்பு வாங்கி வந்ததைக்கண்டதும் அந்த ஆசையில்: நின்ற பிரதேசத்தையும் கவனிக்காமல் ஓடியபோது.. அவலம் வந்து சேர்கின்றது. பாதத்தை இழந்த சிறுமி தனக்கு வாங்கி வந்த செருப்பில் ஒன்றை போட்டுப் பார்ப்பதும், "நான் செருப்பு வாங்கிட்டன் வாடி" என்று வெளியில் நின்ற நண்பியை வீட்டிற்குள் கூப்பிடுவதும், அந்த சிறுமியின் உள்ளார்ந்த வேதனையின் வெளிப்பாட்டை காணலாம். இங்கு சிறுமிக்கு செருப்பு முக்கியமில்ல அவளின் பாதம்தான் முக்கிய கருவாகின்றது. இனி எத்தனை செருப்பு வாங்கியும் என்ன பயன்?

இளம் தயாரிப்பாளர் கௌதம் மிதிவெடி வெடிப்பதுடனேயே படத்தை முடித்திருக்கலாம் போலும். வாசகர்களின் சிந்தனைக்கு தூரப்படுத்தி விட்டிருக்கலாம். தொடரும் சம்பவ நிகழ்வுகள்:

1) சிறுமி மீது அதீத பரிதாபத்தையும்,

02) மட்டுப்படுத்தும் சிந்தனையையும் கொடுக்கலாம்.

விளைநிலம் எம்நிலம்
செந்நிலம்- வெடிக்கும்
விதைகளை விதைத்தது
அரக்க 'கூட்டம்.....
(யாழவன் கவிதைகள்)

விளைநிலத்தில் இன்று எம் உறவுகளை முடக்கிவிடும் விதைகள் எத்தனை? அந்த வகையில் 'செருப்பு' யுத்த மோகம் சூழ்ந்த எமது தாயகத்தின் ஒரு துளியினை ஆவணமாகத்தந்துள்ளது. பிரதேச ஆக்கிரமிப்பும் அவற்றின் விளைவுகளையே எண்ணிலடங்காதன. அவற்றின் ஒரு துளி கௌதமின் "செருப்பு" .

இளம் வயதிலேயே பலரும் பேசக்கூடிய வகையில் எடுத்துக் கொண்ட முயற்சி வாழ்த்துவதற்குரியது. இங்கு ஏதோ ஓர் வகை 'தொற்றாக' இந்த கலைஞனை பீடித்திருக்கின்றது போலும். குறிப்பாக பேசும் கரு, இசை, காலம், இடம், சூழல் என்பன அவரின் திறனுக்கெட்டிய வரை நகர்ந்துசெல்கின்றது.

எமது தேசியமும் அதன் வரலாறுகளும் ஆவணமாகவேண்டிய சூழலில் நகர்ந்து கொண்டிருப்பது சிறப்பானது. தேசிய உண்மைகள் பேணப்பட குறும்படமும் ஓர் உத்தியாக இருக்கின்றது. அந்த வகையில் தொடர்ந்தும் இக் கலைஞன் ஈழவரலாற்றை பேணும் தேடலில் வாழும் போது அவனது அர்ப்பணிப்பு அவன் வரலாறு பேசும்.

தர்மினி பத்மநாதன்

---

# உச்சரிக்க வராத உதடுகள்.

மௌனமொழிகளை
உதடுகள் உச்சரித்து
உலகத்துக்குச் சொன்னாலும்
இந்த உலகத்துக்கு ஏனோ
அது கேட்பதில்லை!
ஏனென்றால்
இரைச்சலும், சந்தடியும்
ஆக்கிரமித்துக் கொண்ட பூமியில்
இதயத்தின் காரணம் புரியாத
கனவுகளிற்கும், கற்பிதங்களுக்கும்
ஆழ்மனதில் அகலவோடிய
அன்பின் அற்புதங்களிற்கும் விளக்கம்
நிசப்தத்தின் நிர்மூலமான
மொழியாடலுக்குள்ளேயே
ஒலிந்துக் கிடக்கின்றது!
புலன்கள் ஓய்ந்துவிட
ஓர் பொழுதில்
தானாகவே நோக்கிக்கிடக்கும்.
தேடல் ஒன்று..அல்லது
பலது...சீ..! இனம்புரியாதவைகளுக்கு
இலக்கவரைகள் எப்படி இடுவது?
ஏதோ...
அண்மை சேய்மை எல்லாம்
இன்மையாகி அருமைகளே
தன்மைகளாக தேடல்
தொடர்கின்றது...

சு.ஞாலவன்

# மீண்டும்......!!

ஆங்காங்கே தப்பிப் பிழைத்த
பனையின் ஓலைகள் ஓடு ஓலைகள் உரசும்
தாளயதி!

யுத்த தாண்டவம் முடிந்த - எம்
ஊரின் சோகக் கதைக்கேற்ப
தாளயதி!

எஞ்சியுள்ள ஓரே ஓரு செவ்வரத்தை
செடியை சுற்றிச் சுற்றி வந்து
அவலக் குரலாய் அந்தக் கருக்குருவியின்
கீச்சல்!

பார்த்துக் கொண்டே இருக்கின்றேன்
அங்காங்கே குருவிக்கூடு தரையிலே
கட்டப் பட்டதாய் குடிசைக்கள்.

மரங்களும், மாடுகளும், வீடுகளும்.
மட்டுந்தான் போயின. நாங்கள்
இன்னும் உயிரோடுதான்,

என்று இருமாப்பில் சில உருவங்கள்.
ஊசலாடியபடி.
கருப்பாகி போன எம் ஊருக்கு
பச்சை வர்ணம் பூசிக்கொண்டு
இருக்கின்றோம்.

கொஞ்சம் பொறுங்கள்!
காய்ந்து போன காவோலை விழுந்தாள் என்ன
புதுக் குருத்து புறப்படத் தயாராகத்தான்.

பூபாளம் மறந்த குயில்கள் மீண்டும்
ஒத்திகையில்
அதுவரை கருக் குருவிகள் கத்தட்டும்
ஆழய மணிகளுக்கு எண்ணை போடப்படுகிறது.
அது வரை பனை ஓலை சரசரப்பு வேண்டும்.

கொஞ்சம் பொறுங்கள்!
இப்போதுதான் உள்ளாடைகள் போடப்பட்டுக்
கொண்டு இருக்கின்றது.
நான் கருப்புச் சார்ந்து கொஞ்சம்
தேடுகிறேன்.

எங்கள் ஊருக்கு திரும்பவும்
திருஷ்டி வராமல் தாடைக்கு கீழே
ஒரு பொட்டுவைக்க

இத்தாவில் -சீலன்

ஒருவன் தன்னைத்தானே நேசிக்கும்போது நேசத்தில் போட்டியிட வேறு யாரும் வரமாட்டார்கள். - பெஞ்சமின்







தினமும் மோகன் கொண்டு வந்து நண்பர்களுக்குத் தரும் மாங்காய்க்காக ஏங்குபவர்களில் பாபுவும் ஒருவன்.

குமாரசாமி தோப்பு மாங்காய் என்றாலே அந்த ஏரியாவே நாவில் நீர் சொட்ட ஆவலாய் எதிர்பார்க்கும். அவ்வளவு இனிப்பு.

அதனாலேயே அந்த வழி போவோர் நிலவை அண்ணார்ந்து பார்த்து ரசிப்பது போல் ரசித்து விட்டு கற்பனையிலேயே காயை ருசித்து விட்டுப்போவார்கள்.

அப்படியிருந்தும்.. ஆறாம் வகுப்பில் படிக்கும் மோகன் மட்டும் எப்படி தினமும் ஒன்றிரண்டு மாங்காயோடு பள்ளிக்கு வருகிறான் என்பது மற்ற மாணவர்களுக்குப் புதிராக இருக்கும்.

எப்படியாவது மோகனிடம் பேசி நண்பனாகி அவன் எந்த வழியில் மாங்காயைக் கொண்டு வருகிறான் என்பதை அறிந்து கொள்ள விரும்பினான் பாபு.

பாபுவின் விருப்பப்படியே மோகன் கொஞ்சம் கொஞ்சமாக பாபுவிடம் நெருக்கமானான்.

பாபு, மோகனுடன் சேர்ந்து மாங்காய் திருட முடிவெடுத்தான்.

அன்று ஞாயிற்றுக் கிழமை, பிற்பகல் நேரம் மோகன் முன்பே சொல்லியிருந்த இடத்துக்குப் பாபு வந்து சேர்ந்தான்.

அருமையான திருட்டு வழி.

மோகன் சத்தம்போடாமல் குனிந்து மெல்ல மெல்ல நகர்ந்து போனான். பாபு அவனைப் பின் தொடர்ந்தான்.

வழியைச் சரியாகப் பார்த்துக்கொண்டான் பாபு. அப்போதுதானே அவன் தனியாக அடுத்த முறை தனியாக வர முடியும்!

மோகன் வேலியைக் கடந்து விட்டான். பாபு நிமிரும் நேரம் அவனுடைய முதுகில் ஏதோ குத்தியது 'ஆ' என்ற அலறல் அவனது தொண்டையிலேயே அடங்கிப்போனது.

சட்டை கிழிந்து முதுகிலே முள்ளொன்று கீறிக் காயம் பட்டு ரத்தம் வருவதை அவனால் உணரமுடிந்தது.

ஆனால் வெளிக்காட்ட முடியவில்லை. பேசாமல் பின் தொடருமாறு மோகன் சைகை காட்டினான்.

மோகன் பாபுவை அருகில் இழுத்துக் காதருகில் இதோ இந்த மரம்தான் என்று காட்டினான். நிமிர்ந்து பார்த்த பாபு கொத்துக்கொத்தாய் தொங்கிக் கொண்டிருந்த காய்களைப் பார்த்து 'ஆ' வென வாய்பிளந்தான்.

அவனது வாயை கையால் மூடிய பாபு,"டேய்,அதோ பார்" என்று வேறு திசையில் கையை நீட்டிக் காட்டினான்.

அங்கே...சற்றுத் தொலைவில்.... கயிற்றுக் கட்டிலில் காவலாளி தூங்கிக்கொண்டிருந்தான். பார்த்தவுடன் பாபு அதிர்ந்து போனான். மோகனைப் பார்த்தான்.

மோகனோ பதற்றமே படாமல் "பயப்படாதே இதோபார் என்று சொல்லிய படியே ஏற்கெனவே கொத்தாய் எடுத்து வைத்திருந்த முட்களைக் கொடிபோல் அள்ளிப் போட்டு விட்டு "காவலாளி வந்தால் இந்த வழியாகத்தான் வருவான், இது கடுமையான விஷ முள்! இதிலே காலை வைத்தால் அவன் கதி அவ்வளவுதான். அவன் நெருங்கி வருவதற்குள் நாம் வந்த வழியாலே ஓடி விடலாம், பயப்படாதே!" என்றான்.

பாபுவுக்கும் அது சரியாகவே பட்டது.

"எனக்குத்தான் காவல்காரன் எப்படி வருவான் என்பது தெரியும் ஆனால் நான் கீழே நிற்கிறேன், நீ மரத்துமேலே ஏறிக் காய்களைப் பறித்து இந்தப் பையில் போட்டு எடுத்துக் கொண்டு பொறுமையாக இறங்கி வந்து விடு. புரிந்ததா?" என்றபடியே தன் கால் சட்டைப் பையில் இருந்த துணிப்பை ஒன்றைக் கொடுத்து விட்டு பாபுவை மரத்தின் மேல் தூக்கிவிட்டான் மோகன்.

காந்தத்தைக் கண்ட இருப்பு போல் பாபு வேகமாக மேலே ஏறிக் காய்களை நெருங்கினான்.

தன் கைக்கு எட்டிய வரை இருந்த காய்களைப் பறித்துப் பையில் போட்டுக்கொண்டான்.

பை நிரம்பியவுடன் சுமை தாங்கவில்லை.

இறங்க முயன்றான் முடியவில்லை

கீழே பார்த்தான். மோகன் சீக்கரம் வரும்படி சைகை காட்டினான்.

அவனைப் பார்த்தபடியே கிளையென்று நினைத்துக் காலை வைத்து வழுக்கி விடவே, பையை நழுவவிட்டான்.

'தொப் தொப்பென்று ஒவ்வொரு காயாகக் கீழே விழுந்தது. ஒன்று மோகன் தலையில்!

'அம்மா' என்று அலறினான்.

காவல்காரன் எழுந்து கொண்டான். அவ்வளவுதான். மோகன் சிட்டாகப் பறந்துவிட்டான்.

வேகவேகமாகக் கீழே இறங்கிய பாபு தப்பிக்க வழி தெரியாமல் ஓட முயன்றான்.

அப்போதுதான் அது நடந்தது.

மோகன் ஏற்பாடு செய்திருந்தபடியே விஷமுள் வேலை செய்தது. ஆனால் காவல்காரனின் காலில் அல்ல, பாபுவின் காலில் தான்.

பாபு அலறிவிட்டான் கீழே விழுந்தவன் எழுந்திருக்கமுடியவில்லை.

அதற்குள்... காவல்காரன் பாபுவை நெருங்கிவிட்டான். பாபுவின் தோளில் கைவை த்து அழுத்தி, "தம்பி பயப்படாதே. நான் ஒன்றும் செய்யமாட்டேன் இது விஷமுள் பொறு மையாக இரு எடுத்து விடுகி றேன்'' என்றான்.

பாபு மெளனமானான் சொன்னபடியே செய்தான் காவல்காரன்.

முள்ளிலிருந்து விடுபட்ட பாபுவை மெதுவாகத்தூக்கி புல் தரையில் உட்கார வைத்த காவல்காரன் கீழே விழுந்து கிடந்த மாங்காய்களில் நான்கை எடுத்து அவனிடம் கொடுத்து,

" தம்பி நீ திருட்டுப் புத்தி உள்ளவன் கிடையாது என்பது உன்னைப் பார்க்கும் போதே தெரியுது. உன் கூட வந்தவன் உன்னை விட்டுட்டு ஓடிவிட்டான் உன்னை ஆபத்தில் விட்டு விட்டு ஓடக் கூடிய அவனை நம்பி வந்தாயே அதனால் தான் உனக்கு இந்தத் தண்டனை விளையாட்டா திருட ஆரம்பிச்சா அதுவே பழக்கமாகி விடும் இனி மேல் எப்பவுமே எதையும் திருடாதே அதை விட தீய நண்பர்களோடு சேராதே குமாரசாமி ஐயா வருகின்ற நேரம் நேர் வழியாவே வெளியில் போய் விடு என்றான்.

காவல் காரன் கொடுத்த மாங்காய்களோடு வெளியே வந்த பாபு தோப்பின் வெளிப்பகுதியில் ஒளிந்திருந்த மோகனைக் கண்டான்.

காலில் முள் குத்திய இடமெல்லாம் வலி தாங்க முடியாமல் வேதனைப்பட்டான் பாபு.

மோகன் மெல்ல அவனிடம் வந்து தோளைத் தொட்டு "என்னடா நடந்தது?" என்று கேட்டான்.

பதிலேதும் பேசாத பாபு கையிலிருந்த மாங்காய்களை மோகனிடம் கொடுத்து விட்டு வேகமாகத் தன் வீடு நோக்கி நடந்தான்.

●●●

## தாயே!

பத்துமாதம்
சுமந்து பெற்று
கண்ணை இமை காப்பது
போல் காத்து
நோய் ஏற்படும்போது
கண்ணீரை மருந்தாக்கி
உதிரத்தை பாலாக்கி
உன்னையே வருத்தி
எம்மை உயர்த்துகிறாயே
உனக்கு கோடான
கோடி நன்றிகளை
சமர்ப்பிக்கின்றேன்.

சி.தர்மிலா,

## சிந்திக்கச் சில

மிக மிக நல்ல நாள் - இன்று
மிகப்பெரிய வெகுமதி - மன்னிப்பு
மிக வேண்டாதது - வெறுப்பு
மிகப்பெரிய தேவை - சமயோசிதபுத்தி
மிகக்கொடிய நோய் - பேராசை
மிக சுலபமானது - குற்றம்காணல்
நம்பக்கூடாதது - வதந்தி
ஆபத்தை விளைவிப்பது - அதிகபேச்சு
செய்யக்கூடாதது - உபதேசம்
செய்ய வேண்டியது - உதவி
விலக்கவேண்டியது - விவாதம்
உயர்வுக்கு வழி - உழைப்பு
நழுவ விடக்கூடாதது - வாய்ப்பு

நா.கரன்.

## வாரம் ஒரு குறள்



"நட்பு" என்பது எமக்கு உடனே ஞாபகம் வருவது நமது நண்பர்கள் தான் ஆனால் உண்மையில் நண்பர்கள் நட்புடன் தான் இருக்கின்றார்களா என்றால் நமக்கு சொல்லத் தெரிவதில்லை.

ஏனெனில் சிரிப்பவர்கள் எல்லாம் நண்பர்கள் என்பதுதான் எமது கணிப்பு. அதனால் அவர்களுடன் விழுந்து விழுந்து பழகுவோம் ஆனால்அந்தச் சிரிப்பின் பின்னே கொடி ஆயுதம் இருக்கும் எப் போது நாம் அசந்து போகின்றோமோ அப்போது அது எம்மீது பாயவும் தயாராக இருக்கும்.

அதனால் முதலில் நல்ல நண்பர்களை இனம் காணப்பழக வேண்டும் தமது காரியத்திற்காக கூடும் நண்பரை இனம் கண்டு அவர் வழியிலேயே சென்று அவர் நம்மை விட்டு விலகிஓடும் படி செயல்களால் அவர்களை விரட்ட வேண்டும் அதாவது நட்பு என்று பொய் கூறுபவரை நட்பாலேயே ஓடச்செய்ய வேண்டும் சுருங்கக் கூறின் முள்ளைமுள்ளால் எடுத்தல் என்பது போல இதனைத்தான்

மிகச்செய்து தம்எள்ளு வாரை நகம்செய்து
நட்பினுள் சாப்புல்லற் பற்று.

என்று வள்ளுவப்பெருந்தகை மிகவும் அழகாகக் கூறியுள்ளார்.

## சொற்சிலம்பம் - 34

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| த் | யு | ஊ | நெ | கு | ரா | ழி |
| சா | தீ | ப | மூ | பா | ரா | ளெ |
| ளீ | செவ | ர் | ர் | ங் | மோ | வி |
| கு | கே | ஆ | லே | சி | கா | மா |
| தா | அ | ழ | பௌ | ஓ | சீ | யெ |
| னி | கோ | வ | ஜெ | ள | னி | ஈ |
| கூ | ல | யீ | லு | ரீ | சோ | ய் |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் -32 இன் விடைகள்

01. மான்.
02. மரை.
03. கரடி.

01. மல்லிகை.
02. முல்லை.

### சொற்சிலம்பம் - 32 இன் பரிசுக்குரியவர்

நா.முரளிகரன்,
இல.59,கல்விளான்,
துணுக்காய்.

### சொற்சிலம்பம் - 32 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. ர.கஜீபன், தரம் -6, கிளி/சிவநகர் அ.த.க, பாடசாலை.
02. அமிர்தநாதன் பிரவீன், மு/ஸ்ரீசுப்பிரமணிய.வி, புதுக்குடியிருப்பு.
03. சூ. புவிதர்சன், மு.நட்டாங்கண்டல், அ.த.க.பாடசாலை.
04. கி.அமிர்தவர்ஷன், நாவலடி, உடுப்பிட்டி.
05. பூ. கிஷாந்தினி, தரம்-2A, வ/வி.க, வவுனியா.
06. ல.நிரோஜன், இல.54,D8,உருத்திரபுரம் கிளிநொச்சி.


01. மாதங்கள் மூன்று?
01) ......................................
02) ......................................
03) ......................................

02. தயிரில் இருந்து பெறப்படுபவை இரண்டு?
01) ......................................
02) ......................................

பெயர் :- ......................................
முகவரி :-......................................
......................................

சொற்சிலம்பம்-34
ஈழநாதம்.
யாழ் சாலை,
கிளிநொச்சி.

## ஐந்து வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள்



## நகைச்சுவை



"திருடனிடம் பீரோ சாவியைக் கொடுக்கும்போது, எதுக்காக 'சலூட்' அடிச்சனிங்கள்?"

"மரியாதையா பீரோ சாவியைக் கொடுத்திடு என்று சொல்லி கத்தியைக் காட்டினானே!"

## புரிதலும் தெளிதலும்

ஆதங்கம்.ஆவல் அபிலாசை என்பவை ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு வகை சார்ந்ததாகவும், அவர் அவர் வாழும்அகம் புறம், சார்ந்த சூழலின் தாக்கமாகவும் மாறுபட்டவை யாக இருக்கும்.

ஆனால் இந்த செயற்பாடுகள் எல்லாம் சிலவேளைகளில் மனிதனின் அடிப்படைத் தேவைகளோடு சந்திக்கிறபோது அதிகமான மனிதர்களின் செயற்பாடுகள் ஒன்றாகவே இருந்து வருகின்றன.

இப்படித்தான் ஒரு அரச ஊழியரின் ஆதங்கம் இது.

எனக்கும் மனைவிக்கும் ஞாயிற்றுக் கிழமைதான் விடுமுறை நாள் (எனக்கு என்பது அதிகம் அலுவலகங்களில் கடமையாற்றும் எல்லோருமே) அன்றைய விடுமுறை நாளில் கடைத் தெருவுக்கு போவதென்றாலோ அல்லது எங்களது தேவைகளைப் பூர்த்தி



### மாற்றங்கள் பற்றி சிந்திக்கலாம்

செய்வதென்றாலோ முடியாத காரியமாக இருக்கிறது.

ஏனென்றால் அன்று புடவைக்கடையிலிருந்து எமது தலைமயிரை அழகு செய்யும் அழககங்கள்வரை பூட்டியிருக்கிறது அதனால் அன்று எமது தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் இருந்து விடுகின்றன என்றார்.

இன்னுமொரு புறத்தில் எல்லோருக்கும் விடுமுறை நாள் என்பது ஒரேநாளாக இருப்பதால் அன்று எல்லோரும் சந்திக்க, பேச நட்பைத்தொடர குடும்பத்தோடு மகிழ்ச்சியாக பொழுது கழிக்க என ஒரு திட்டமிட்ட ஒரு ஓய்வு நாளாக பொதுவான ஓய்வு நாளாக அமைந்து விடுகின்றது. என்ற நியாயப்பாடுகள் நிறையவே இருக்கிறது.

ஆயினும் மேற்சொன்னதுபோல காரியங்கள் எவையும் செய்யமுடியாத ஒரு நாளாக இருந்து வருமாயின் அது பற்றி சிந்திக்கவும் வேண்டும்தானே?

ஏனென்றால் வாரத்தில் வழங்கப்படும் இந்த விடுப்பைத்தவிர, விடப்படுமாயின் கடமை நாட்களாக அவற்றை கட்டாய விடுப்பாக அவர் அவர் தேவைக்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்ற ஒரு தேவை இருக்கிறது அல்லவா?

ஆகவே சம்பிரதாயங்கள் மரபுவழியாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் நடைமுறை என்ப வற்றிற்கு அப்பால் நாம் சிலவற்றை சிலயதார்த் தங்களோடும் ஒப்பீடு செய்யும் போது சிற்சில நடைமுறை மாற்றங்கள் பற்றியும் சிந்திக்க முடியுமல்லவா?

**வேழினி**

---

## தொடர் - 17




"போதும்: காண்டாமிருகம்!"

"இது காண்டா மிருகமில்லை, சிறுத்தை..", எங்களுக்கு சற்று முன்னால் பாதை அருகோடு நிழலோடு நிழலாய் நழுவிக்கொண்டிருந்தது சிறுத்தை.

"எங்களுக்குச் சிறுத்தை காட்டத்தேவையில்லை", விமுக்தி கொஞ்சம் ரோஷத்தோடு சொன்னார். "நாங்கள் இலங்கையிலிருந்து வருகிறவர்கள். அங்கே நிறைய சிறுத்தை உண்டு!"

"சீற்றா, லெப்பேட்,பான்தர், என்றெல்லாம் வகைகளுண்டே: உங்கள் ஊரிலுள்ளது எது?" அயூப் கேட்டார்.

"லெப்பேட்!"

"இது, சீற்றா.." அதற்குள் அந்தச் சீற்றா புதரொன்றின் பின்னால் தாவி மறைந்தேவிட்டது. எங்களைவிட வேறு மனுக்கணமே இருக்கிற சுவடு கூடத் தெியாத அத்துவான வெளியில் வான் மீண்டும் நகரலாயிற்று. இயந்திர இரைச்சலை யும் மீறி ரீங்கரிக்க ஆரம்பித்திருந்தன சுவர்க்கோழிகளும் வேறேதோ இரவுப் பூச்சிகளும். நேரம் ஆறரையாகி விட்டிருந்தது.

" ஒரு மணிக்குள் விடுதிக்குத் திரும்பிவிட வேண்டும் என்பதுநியதி"

"போய்விடலாமா?"

"இன்ஷா அல்லா" என்றபடி முன்விளக்குகளைப் போட்டு, வேகத்தை அதிகரித்தார் அயூப்.

"உங்களுக்குத் தெரியுமா, விமுக்தி? நாங்கள் கட்டுபெத்தையில் படித்த காலத்தில்- அறுபத்தெட்டு, எழுபத்திரண்டு காலத்தில் கூட கல்லூரிக்குப் பின்னால் இருந்த காட்டில் ஒரு சிறுத்தை இருந்ததாகப் பேசிக்கொள்வார்கள்: கேள்விப் பட்டிருக்கிறீர்களா?" கேட்டேன். அவர் ஊரும் அருகில் தான் விலியந்தலைப் பக்கம். ஓமோம்... ' என்றார் அவர்,' ".... அந்தக் கதை நானும் கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால் எவ்வளவு உண்மையென்றுதெரியாது."

வெளியே முழு இருட்டாகியிருந்தது. இப்போது உஎர்மையான ஒரு காட்டினூடாகவே போயக்கொண்டிருந்தோம். பெரு விருட்சக் கிளைகள் பாதைக்கு மேலே கூடாரமிட்டிருந்தன. ஓடி மறைகிற ஒவ்வொரு அடிமரமும் காட்டின் கனத்திற்குச் சாட்சியாய் நின்றது.

"பயமில்லையா? இப்படிப் போவது?"

"நோ!" என்றது அயூப்பின் அடிக்குரல். "எதற்குப் பயம்? விடுதியை நெருங்கிவிட்டோம்." தொலை தூரத்தில் மின்னொளிப் பொட்டுக்கள் ஒன்றிரண்டாய். அல்லது மின்மினிகள் தானோ?

"அப்படியானால் .."

அயூப்பிடம் மெல்லக் கேட்டேன், "இந்த இடத்தில் ஒரு நிமிடம் நிறுத்துவீர்களா?"

"எதற்கு?" -மூவருமே வியப்புடன் கேட்டார்கள்.

"இந்தக் காட்டை, இந்த இருளில், அதனுடைய அமைதியோடு உணர்ந்து பார்க்க வேண்டும் போலிருக்கின்றது!"

"ஒரு நிமிடமல்ல இரண்டு நிமிடம் நிறுத்துகிறேன்," அயூப் சிரித்தார். "...விளக்குகளையும் அணைத்து விடுகிறேன்."

சட்டென்று இருளும் அமைதியும் எங்களை விழுங்கின. சில வண்டுகள் அங்கில்லையோ, சுவர்க் கோழிகளும் கத்துவதாயில்லை. ஒரு அசாதாரண நிச்சப்தம். இருக்கையில் சாய்ந்து, இன்னமும்திறந்திருந்த கூரை வழியாக மேலே பார்த்தால் மர இருளின் மேலே, சாம்பல் திட்டு களாய்த்தெரிந்த வானத்தின்



பின்னணியில் பெயரறியா ஒற்றைப்பறவையொன்று உட்கார்ந்திருப்பது தெரிந்தது.அதுவும் எங்களைக் கண்டிருக்கக்கூடும்.

'லேக்நக்குறு' விடுதிக்குத் திரும்பியபோது நல்ல மழை மணி ஏழு. சாப்பாட்டுக்கான நேரம் பகலும் சாப்பிடாததில் நல்ல பசி வேறு. ஆனால் இன்னொரு அவசர அலு வலிருந்தது. இங்கேயிருக்கிற 'ஃபோரெக்ஸ் பீரோ' இன்னும் அரை மணிநேரத்தில் பூட்டிவிட முன் கொஞ்ச டொலர்களை ஷில்லிங் குகளாக்கி விட வேண்டும். நாளை ஞாயிறு அதன் பிறகு இரண்டு நாட்கள் தொடர்ந்தாற் போல மஸாய்மாறாக் காட்டில், அங்கும் மாற்ற முடியுமோ தெரியாது. பீரோ வில் மாற்று வீதத்தை பார்த்த போது நேற்றுக் காலையே இதையும் மாற்றியிருக்கலாமே என்றிருந்தது.

வர வேற்புப் பீடத்தில் அறைத்திறப்பை எடுக்கப்போன போது, " உங்களுக்கு ஒரு தகவல்..." என்று ஒரு கடிதத்தையும் கூடவே தந்தாள் அங்கு கடமையிலிருந்த பெண். யாரடா, அது? வியப்புடன் வாங்கிப்பார்த்தால் நேற்றிரவு தங்கியிருந்த மலை விடுதியிலிருந்து வந்திருந்தது அது! இங்கிலாந்துக்கு ஃபோன் பண்ணிவிட்டுப் பதிலைப் பார்த்திருந்தேனே, அந்தப் பதில் இன்று காலை-நான் புறப்பட்ட பின்-வந்திருக்கிறது. அதை அறிவித்தது கடிதம். நக்குறு விடுதியில் பரந்த உணவுக் கூடத்திற்குள் இரவு போனபோது மின்விளக்குகளையே காணவில்லை. ஒவ்வொரு மேசையிலும் ஒவ்வொரு மெழுகுதிரி மட்டும் எரிந்து கொண்டிருந்தது. கரிய சுவர்களில் ஆடும் இன்னுஞ் சற்றுக் கறுப்பான நிழல்கள், கறுப்பானவர்கள், வெள்ளையவர்கள் இருவருக்குமே சொந்தமானவையாயிருந்தன. எவருடையது எது என்று கூறுவதெப்படி? மஞ்சள் ஒளி முகங்களை மட்டும் காட்டும் படியாக மனிதர்கள் மேசைகளைச் சுற்றி அமர்ந்திருந்தார்கள். பறையொலி-பதிவுசெய்யப்பட்டிருந்தது. போலும்-அளவாக எல்லா இடங்களிலும் பரவி அதிர்ந்துகொண்டிருந்தது சமையல் வாசனை இதமாய்ப் பரவியிருந்தது. கூரை,தளம், எல்லாமே கறுப்பு. சாப்பிட்டுக்கொண்டிருந்த போது ஒரு பணியாள் வந்துசொன்னான், "ஒன்பது மணிக்கு, சிற்றுண்டிக் கூடத்தில் பாரம்பரிய கிக்கியு நடனநிகழ்வொன்று தொடங்கப்போகிறது..."

அரைகுறைச் சாப்பாட்டோடு அறைக்கு ஓடி கெமராவும் (அந்த 200 சுருள்தான்!) கையுமாய் வந்து வசதியாக இடம் பிடிக்கவும் பறை அதிரவும் சரியாக இருந்தது. பல நாட்டுப் பார்வையாளர்களிருந்த மண்டபத்தில் வரிசையாக நுழைந்த ஆண்-பெண் நடனக்காரர்கள் கூடியபட்சம் தற்காலத்துச் சாதாரண உடைகளிலேயே காட்சியலித்தார்கள் பறைக்குப் பக்க வார்த்தியமாய்க் கொம்பு ஒன்று ஒலிக்கலாயிற்று. மெல்லத் தொடங்கிய இசையும் நடனமும் நேரம் ஆக ஆக துரிதமும் விறுவிறுப்புங்கொண்டு ஆபிரிக்க அடையாளம் காட்டின. அந்த அதீத வேகம் இடைகளும்,அடிகளும் இயங்கும் விரைவு, உச்சங்களின் போது தம்மை அறிந்தும் அறியாமலும் கிளர்ந்தொலித்த குரல்கள் -என்று அந்த நிகழ்வு பார்வையாளர்களையும் தன்னுள் ஈர்த்து இயக்கலாயிற்று இணைகிறவர்களின் வரிசை என்னையும் அண்மிக்கும் போலிருந்ததில், படமெடுக்கக் கோணந் தேடுபவன் பாவனையில் இடத்தை மாற்றிக் கொண்டேன்.

ஞாயிறு காலை ஏழே காலுக்கே நக்குறுவை விட்டுப் புறப்பட்டாயிற்று. விமுத்தியின் படச்சுருள் நேற்று வாங்கவில்லை என்பது சுவையான சேதி! இன்று மஸாய் மாறா போகும் வழியில் நக்குறு நகரிலோ, நய்வாஷாவிலோ அல்லது நறொக்கிலோ கட்டாயம் வாங்கிட முடியுமென அவர் நம்பினார். ஞாயிறு கடைகள் பூட்டியிருந்தாலும் அப்படி இந்த மூன்றிடங்களிலும் ஏதோ ஒரு கடை திறக்காமலோ போய்விடப் போகிறது!

நக்குறு நகர் அமைதியாக இருந்தது: ஒரு விடுமுறை நாளில் எந்த ஒரு நகரமும் இருக்கின்ற மாதிரி நேற்று மாலை வரும் வழியில் புறநகர் பகுதியொன்றில் ஒரு வீட்டின் மதிலுக்கு மேலால் மஞ்சள் கொத்தாய் குலைகுலையாய்ப் பூத்துக் தொங்கிய அந்தப் பெயர் தெரியாத முன்-பின் காணாத பூங்கொடியைக் கண்ட தெருவால் இன்று திரும்பவில்லை அயூப்பிடம் அந்தப் பூவைக் காட்டி அக்கொடியின் விதையை அல்லது தடியையாவது. பெற்று 'மெல்ல'க் கொண்டு வந்து சேர்த்துவிட ஒரு ஆசையிருந்தது, லேசாக. இன்று அந்தப் பாதையுமில்லை, பூவுமில்லை! பரவாயில்லை: பூவுக்கு ஆசைப்பட்டுச் செடியைக் கொண்டு வரப்போய்-சுங்கத்திற்கு ஒளித்தாலும்- தேவை யில்லாமல் பார்த்தீனியம் போல் எதை யாவது கொண்டு வராமலிருக்கலாம்.

நக்குறுவிலிருந்து மஸாய் மாறாவுக்குப் போகிற 275 கி.மீ. தூரத்தை ஐந்து மணித்தியாலத்தில் கடப்பதாக எங்கள் பயணத்திட்டம் குறிப்பிட்டது.

(தொடரும்)

## மனிதமனம்

அன்று நான் அல்லற்பட்டு
தவித்தவை எல்லாம்
ஆண்டவனே என்னை
வசதியான வாழ்க்கைக்கு
அழைத்துச் செல்வாயா என்று
ஆனால் இன்று நான் ஏங்கியது
மண்குடிசையில் எனக்கிருந்த
மனத்திருப்தி மறுபடியும்-என்
மனமேடையில் குடிபுக
ஆண்டவனே அருள்
பாலிக்க மாட்டாயா என்று.

சு.சிவாஜினி

## பிரமை

இசையில் நான்
இன்புற்றிருக்க - பெரும்
கரடிக்கும்பல் என்னை
கர்ச்சனை செய்தது.
வசையால் எனை வதைத்து
இதயறை அலசி - கடும்
ஊளை விட்டது.
எனும்.........
என்
இசை ஞானம்
கலையவில்லை.
உறுதியோடு தொடர்கிறேன்.
"உன்னைச் சரணடைந்தேன்"
தஞ்சம் புகும் பொருட்டு
பெண் குரல் - என்
காதினூடே
ஆழ் மனம் தொட்டு
நின்றது.
ஞானம் கலைந்தது.
எனைச் சூழ
யாவுமே துறவியாய்
இருந்தது.
கேட்டது...
கல்லறைக் காதலியின்
வெண்கல குரலமுக்கம் - நான்
பிரமைப் பித்தனென
அப்போது புரிந்து கொண்டேன்.

வ.செல்வன்.

## சீருடை நண்பனுக்கு

நண்பனே!
எமது பிள்ளைகள்
உனது குகைக்குள்
நிராயுத பாணியாக
நடமாட ~ நீ மட்டும்
ஆயுதத்துடன்
அலைகிறாயே
உனக்குத்தான்
உயிரின் மேல்
எவ்வளவு ஆசை
ஓ..............
உன்னைச் சொல்லி
குற்றமில்லை ~ நீதான்
எமது பிள்ளைகளின்
இடுப்புப் பட்டிக்கே
பயந்தவனாச்சே...

ப.வினோதன்,

## புரிந்தது

இன்றுதான் புரிந்தது
தாண்டமுடியா தடைகளும் இல்லை
எட்டமுடியா தூரமும் இல்லை
மாஜா ஜாலம் எதுவுமின்றி
மனத்துணிவும் விடாமுயற்சியும்
சாதிக்கும் வெறியும்
பகைபுகும் நுண்ணறிவும் இருந்தால்
வெல்ல முடியாதவை என்றும்
சாதிக்க முடியாதவை என்றும்
எதுவும் இல்லை.

ந.விதுரா

### மழை

பூமிசிரிப்பதற்காய்
வானம் விடும்
கண்ணீர்...

### மாவீரர்கள்

மரணத்திற்கு
மண்டியிடாத
இலட்சிய வீரர்கள்...

### துரோகிகள்

எலும்புத்துண்டுக்காய்
தம் இனத்தைக்
காட்டிக் கொடுக்கும்
மனிதப் பிசாசுகள்..

### சீதனம

வீரமற்ற
ஆண்கள் எடுக்கும்
பிச்சை...


### மரணம

மாவீரர்களின்
இலட்சியக் கனவு...

க.முருகானந்தன்

## ஊக்கமாத்திரை

***உறவைப் போற்றுதல்:-*** பெற்றோரையும், மற்ற உறவினர்களையும் போற்றிப் பேணும் வழக்கத்தைக் கொள்ளுதல் வேண்டும். பெற்றோரைப் பேணாமல் ஒருவன் தன் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று எண்ணுவானேயானால், அவனது எண்ணம் ஈடேறாது. 'பெற்றோரைப் பேணாதவன் பெரும்பாடு படுவான்' என்று பெரியோர்கள் கூறுவது பொய்யாவதில்லை. பெற்றோரை வருந்த விட்டுவிட்டு, பிள்ளை வாழ்க்கையில் முன்னேற முயல்வது அறியாமையுடையது; பெற்றோர்களைப் பேணி அவர்களின் துணை கொண்டு முயல்வதே அறிவுடமை. பெற்றோரின் ஆலோசனைகளும், அனுபவங்களும் பிள்ளையின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் துணை செய்வனவாகும் பிள்ளையின் முன்னேற்றத்தில் பெற்றோர்க்கு பெரிதும்



அக்கறை இருக்குமென்றோ? பிள்ளையின் முன்னேற்றத்தின் பாதுகாவல்களாக பெற்றோர்கள் நின்று விளங்குவார்கள். எனவே; ஒருவன் தன்னுடைய பெற்றோரைப் பேணி, அவர்களின் பாதுகாவலைப் பெறுதல் வேண்டும்.அவ்வாறே அவன், தன்நண்பர்களின் தொடர்பையும் விடாது பேணுதல் வேண்டும். 'உயிர் கொடுப்பான் தோழன்' என்பது பழமொழியன்றோ் நட்புறவின் துணையும் ஒருவனுடைய முன்னேற்றத்திற்குத் தேவைதான். எனவே ஒருவன் பண்புடைய நல்ல நண்பனைத் தேடிக்கொள்ள வேண்டும்; அவனது நட்புறவினைப் பல்லாண்டுகள் பேணிப் பயன் பெறுதல் வேண்டும்.

***பாராட்டும் பழக்கம்:-*** பிறருடைய குறைகளை மட்டும் மற்றவர்களிடம் எடுத்துக் கூறும் குறிகிய பண்புடையவனைப் 'புறங்கூறுபவன்' என்று சொல்லுவார்கள். தவறு செய்வது மனித பண்பாக இருந்தாலும் அதை உலகறிய மற்றவர்களுக்கு எடுத்துச்சொல்லுவது, எடுத்துச்சொல்லி அவமானப்படுத்துவதும் மனிதப் பண்பாகாது. மனிதப் பண்பற்ற இச்செயல்- இப்பழக்கம், ஒருவனுடைய முன்னேற்றத்திற்கு இடையூறு விளைவிக்கும்: பிளவு பகையை உண்டாக்கும்; கடைசியில் சண்டையையும் அதனால் பெரும் அழிவையும் ஏற்படுத்தும். ஆகையால்,வாழ்க்கையில் முன்னேறும் நோக்கமுடையவன், புறங்கூறும் பழக்கத்திற்கு மாறான பாராட்டும் பழக்கத்தினைக் கொள்ளுதல் வேண்டும்: பிறருடைய நல்ல பண்புகளையே எடுத்துப் பேசுதல் வேண்டும்; பாராட்டிக் கூறுதல் வேண்டும். அப்போது அவனும் பிறரால் பாராட்டப்படுவான். பிறருடைய பாராட்டு அவனுடைய முன்னேற்றத்திற்குத் துணை செய்யும். பிறருடைய குறையைத் திருத்த வேண்டும் என்று விரும்பினால், அவரைத் தனியே அழைத்து, அவரிடமுள்ள நல்ல பண்புகளை முதலில் பாராட்டிக் கூறி, பின்னர் அவரிடமுள்ள குறையை எடுத்துக் கூறி, சுட்டிக் காட்டினால் அவர் தம்முடைய குறையை உணர்ந்து வருந்தி உறுதியாகத் திருந்தி விடுவார்: நன்றியுடையவராகவும் நடந்து கொள்வார்.

## குறுக்கெழுத்துப்போட்டி - 69

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | ■ | 07 |
| ■ | 09 | 10 | | | | ■ |
| 15 | | | | ■ | 20 | |
| 22 | | | ■ | 26 | | |
| | | ■ | 32 | 33 | | |
| ■ | | 38 | | | | ■ |
| ■ | | 45 | | | ■ | 49 |

பெயர்:-.............................................
முகவரி:-...........................................
.......................................................
.......................................................

### இடமிருந்து வலம்

01. மேதினத்தைக் கொண்டாடுபவர்கள்.
10. இராமனால் சாபவிமோசனம் பெற்றவர்.
15. ஆண்டு.
20. பழம்.
22. நிறங்களில் ஒன்று.
26. சூரியனைக் கண்டுமலர்வது.
33. நெல்லில் இருந்து பெறப்படுவது.
38. மீனில் இருந்து இதனைப் பெறலாம்.
45. இருப்பதற்குப் பயன்படுவது.

### மேலிருந்து கீழ்

07. மாதங்களில் ஒன்று.
09. வில்வித்தையில் சிறந்தவன்.
22. கற்பகத்தரு.
32. இரத்தம்.
49. மலர்.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.67 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01. ஆரோகணம்.
08. திங்கள்.
13. வளி.
16. பாடசாலை.
25. சரீரம்.
33. சிலை.
40. அரிசி.
47. நகை

**மேலிருந்து கீழ்**

01. ஆதி.
03. கடகம்.
07. கிளி.
16. பாண்டியன்.
22. இளைஞன்.
25. சந்ததி.
38. சாலை

**இளையவர்களே!**
**மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.**

குறுக்கெழுத்துப்போட்டி,இல.69
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.67 இன் பரிசுக்குரியவர்

**ஸ்ரீதரன். லோஜிதன்**
**கலையரசி நகைமாடம்**
**புதுக்குடியிருப்பு**

### குறுக்கெழுத்துப்போட்டி இல.67 இன், பாராட்டுக்குரியவர்கள்.

01. கே.அர்சேஸ்வரன், நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
02. ந.மனோகரன், களபூமி, காரைநகர்.
03. இ.பாலசுப்பிரமணியம், மாங்குளம்.
04. இ.சுரேஸ், அளவெட்டி யாழ்ப்பாணம்.
05. கா.சிறிவதனி, ஆயப்பகுதி, கிளிநொச்சி.
06. சி.சயந்தன், அரசடி வீதி வட்டு-தெற்கு, வட்டுக்கோட்டை.

# எங்களின் பிள்ளைகளுக்கானது கரிசனையோடு சிந்திக்கவேண்டும்

**எந்தவிதமான நெகிழ்ச்சியுமற்ற புரிந்துணர்வுமற்ற இளைஞர் யுவதிகளாக சூழ்நிலைகளுக்குள்ளால் உருப்பெறுபவர்கள் நாளைக்கு இந்தச் சமூகத்தில் பாதகமான மனோபாவத்துடன் இயங்குவோராகவே நிச்சயம் இருப்பார்கள். இந்த உண்மையை உலகமெங்குமுள்ள பல அனுபவங்கள் நிரூபித்துள்ளன.**

ஒரு வகுப்பில், ஒரே சமயத்தில், ஒரு ஆசிரியரால் ஆகக்கூடுதலாக எத்தனை மாணவர்களுக்கு கற்பிக்கமுடியும்?

ஒரு ஆசிரியரிடம் ஒரே சமயத்தில், ஒரு வகுப்பில் ஆகக்கூடுதலாக எத்தனை மாணவர்கள் படிக்கமுடியும்?

திறமையான ஆசிரியர் எத்தனை மாணவர்களுக்கும் கற்பிக்கமுடியும் என்று யாரும் சொல்லலாம்.

ஆனால் எத்தனை தான் திறமையான ஆசிரியராகவோ மாணவர்களாகவோ இருந்தாலும் மிஞ்சி மிஞ்சிப்போனால் 35 மாணவர்களுக்கு மேல் ஒரு வகுப்பிலிருந்து கற்க முடியாது. இது கற்பித்தலிலும் கற்றலிலும் ஈடு பட்டவர்களின் அனுபவம்.

கல்வித்துறை சார்ந்தவர்களின் மதிப்பீடும் அறிவுறுத்தலும் கூட 35 மாணவர் களுக்குள்தான் கற்பித்தலுக்கான அளவு என்கிறது.

ஆனால், பரவலாக எல்லா இடங்களிலும் இயங்கு கின்ற தனியார் கல்வி நிலையங்களில் இதெல்லாம் கவனிக்கப்படுவதில்லை.

கற்றலுக்குரிய அடிப்படைக் கூறுகளில் ஆகக் குறைந்தவைகூட பல தனியார் கல்வி நிலையங்களில் இல்லை. அது பற்றிய கவலைகூட சிறிதும் அந்த நிலையங்களைச்சேர்ந்தோருக்கிருப்பதில்லை.

இருக்கின்ற ஒரேநோக்கம் மாணவர்களை எப்படியாவது தூண்டி, கசக்கிப் பிழிந்து பரீட்சையில் சித்தியடையவைப்பதுதான். அந்தச் சித்தியினூடாக தம்மிடம் படித்த மாண வர்கள் அவர்கள் என்று காட்டி தமது நிலையத்தின் ஸ்தானத்தையும் கவர்ச்சியையும் உயர்த்துவதுதான் அவற்றின் நோக்கம். அதனூடாகத் தமது பொக்கற்றை நிரப்புவது தான் இலக்கு.

யாழ்ப்பாண நகரத்தில் இயங்குகின்ற பிரபல தனியார் கல்வி நிறுவனமொன்றில் ஒரு பாடத்திற்கு ஒரே நேரத்தில் ஒரு ஆசிரியரின் வகுப்பில் ஐநூற்றி எழுபத்தைந்து மாணவர்களுக்கு மேல் இருக்கின்றார்கள்.

இவ்வாறுதான் ஏனைய ஒவ்வொரு பாடத்துக்கும் ஆகக்குறைந்தது இருநூற்றி ஐம்பது மாணவர்களுக்குக் குறையாமல் நகரின் எல்லாக் கல்விநிலையங்களிலும் பாடங்கள் நடக்கின்றன.

ஒரு வகுப்பில் ஒரு பாடத்துக்கு எவ்வளவு மாணவர்கள் கூடுகிறார்களோ அந்தளவுக்கு அந்தக் கல்வி நிலையமும் குறிப்பிட்ட வகுப்பும் அதற்குரிய ஆசிரியமும் மதிப்படைவதாகக்கருதப்படுகிறது இந்த மதிப்பு வருவாயைக் கூட்டுவதற்கான முதன்மையான புள்ளியாகவும் இருக்கிறது.

இதேவேளையில் மிகக்கூடுதலாக மாணவர்கள் சேர்வதைப்பார்த்துவிட்டு ஏனையவர்களும் அந்தக்கல்வி நிலையத்தில் குறிப்பிட்ட ஆசிரியரிடம் படிப்பதே பெருமைக்குரியது, சிறந்தது என்று கருதுகிறார்கள். படிக்கும் மாணவர்களிடம் மட்டும்தான் இந்த எண்ணம் என்றில்லை. பெற்றோரின் ஆசையும் இதே கண்ணோட்டத்தில்தான் உள்ளது.

ஐநூறுக்கு மேற்பட்ட மாணவர்கள் இருந்து படிப்பதற்கான கொட்டகையை யாராவது போய்ப்பாருங்கள் அல்லது எந்தத் தனியார் கல்வி நிலையங்களுக்காவது ஒரு தடவை சென்று பாருங்கள் அங்கே படிக்கின்ற மாணவர்கள் எவ்வளவு சிரமப்படுகிறார்கள் என்பதை அப்போது தெரிந்துகொள்ளலாம்.

அகலமும் நீளமும் குறைந்த கொட்டகைகள் போதிய வெளிச்சமும் காற்றோட்டமும் அங்கே இருக்காது ஒரு வாங்கில் நெருங்கி நெருங்கி ஐந்தாறு மாணவர்கள் என்று பாதி உடம்பை ஒருவாறு அதில் திணித்துக்கொண்டிருப்பார்கள். வைத்து எழுதுவதற்குரிய மேசை கூட மட்டுமட்டானது தான். ஆறுபேர் பாதி பாதியாக இருந்து கொண்டு எப்படி ஒழுங்காக எழுதமுடியும்? இந்தளவு நெருக்கமும் இறுக்கமுமாக இருக்கும் போது புழுக்கம் வேறு. ஒரு கையால் காற்றுக்காக ஒரு கொப்பியால் விசிறிக்கொண்டு மறுகையால் எழுதிச்சாதனை புரிகின்றார்கள் இந்த மாணவர்கள். ஆனால் வேறுவழியில்லை என்கிற மாதிரியாக அங்குதான் போகவேண்டும் என்றும் முண்டியடிக்கின்றார்கள்.

இவ்வளவு தொகையானோருக்கு சத்தமிட்டுப் படிப்பிக்கவேண்டியிருப்பதால் இயல்பான தொனியில் ஆசிரியர்களால் கற்பிக்க முடிவதில்லை கத்திப்படிப்பித்தாலும் பின்னுக்கிருக்கும் மாணவர்களுக்குத் தெளிவாகக் கேட்பதும் விளங்குவதும்கூட இல்லை. அதே வேளை தனித்தனியாக எந்த மாணவரையும் தெரிந்து கொள்ளமுடிவதில்லை.

ஒவ்வொருவருடைய கல்வி நிலை பற்றியும் இந்த ஆசிரியர்களால் அறிய முடிவதில்லை.

ஏன் எவருடைய கொப்பியையுமே அவர்கள் பார்ப்பது கூட இல்லையே. பிறகெப்படி அந்த மாணவர்கள் என்ன செய்கின்றார்கள், எப்படியிருக்கின்றார்கள் என்று கவனிக்க முடியும்?

மாணவர்களிடம் இது பற்றிக் கேட்டால் ஒரு வகுப்பிலுள்ள இவ்வளவு பேருடைய கொப்பிகளையும் அவர்களால் எப்படிப் பார்க்க முடியும் என்கிறார்கள் கவலையோடும் ஆதங்கத்தோடும்.

**வெளிவாசல்பாலன்**

இடநெருக்கடி, ஆட்தொகை என்பவற்றால் ஏற்படுகிற சிரமங்களுக்காக தினமும் நேரம் முந்திவந்து இடம் பிடிக்கப்போட்டிபோட வேண்டியிருக்கிறது. என்று சொல்லும் மாணவர்கள் கல்விக்கான போட்டியில் தனியார் கல்வி நிலையங்களை பெரிதும் நம்பியிருக்க வேண்டியிருக்கிறது என்றும் அதனாலேயே இப்படியெல்லாம் தாங்கள் படாதபாடெல்லாம் பட்டாக வேண்டி யதாயுள்ளது. என்றும் சொல்கிறார்கள் இப்படிக்கஸ்ரப்பட்டுப்படித்து, போட்டியிட்டுக் கற்று எத்தனை பேர் சித்தியடைகிறார்கள் என்றால் வருந்தத்தக்க அளவில் அந்தத் தொகை மிகக்குறைவாகவே இருக்கிறது.

அண்மையில் ஒரு மாணவரின் தகப்பனாரிடம் பேசிக்கொண்டிருக்கையில்; அவருடைய மகனின் படிப்புப் பற்றிய கதை வந்த போது சொன்னார், பள்ளிக்கூடத்தைப்பற்றி பெரிதாகக்கவலைப்படவேண்டியதில்லை நல்ல ரீயூசன் வசதிமட்டும் இருந்தால் பேசும் அதையே நாங்கள் பார்க்கவேண்டும் என்று.

பாடசாலைகளில் நம்பிக்கை இழந்து பேசும் நிலைமை மிகவும் பரவலாக வளர்ந்து வருகிறது என்பதற்கான சிறு உதாரணம் தானிவை.

இந்த மனநிலைதான் இப்போது பரவலாக எங்கும் உருவாகியிருக்கிறது.

ஆரம்பக் கல்விக்கும் இடைநிலைக் கல்விக்கும் தான் பாடசாலைகளில் பலரும் நம்பியிருக்கிறார்கள். பிள்ளையின் ஒழுக்கம்? பாடசாலையைப் பற்றிய அடிப்படையான அறிதல் சான்றுகள் பதிவுகள் ஆகியவற்றைப் பெறுவதற்காகவே பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புகிறார்கள் பெற்றோர். பரீட்சையில் சித்தியடைய வேண்டுமானால் ரீயூசனுக்குப் போவதுதான் வழி என்றவகையிலான கருத்தோட்டம் அதிகமாக காணப்படுகிறது. இதை யாரும் மறுக்கமுடியாது என்பதை ஒவ்வொரு வீட்டின் யதார்த்தமும் சொல்லும் ஏனென்றால் ஆரம்பக்கல்வியின் போதே பிள்ளைகள் ரீயூசனுக்குப் போகத் தொடங்கிவிடுகிறார்கள். அதிலும் குறிப்பாக புலமைப்பரிசில் பரீட்சைக்கான காலம் (தரம் ஐந்து) என்றால் அதிகம் ரீயூசனில்தான் பிள்ளையும் பெற்றோரும் மையங்கொண்டு நிற்கிறார்கள். இதைவிட பிரத்தியேக வகுப்புகளும் முதலிடம், தனியிடம் என்ற தகுதியை வகிக்கின்றன.

உயர்கல்வியில் தனியார் கல்வியே முதன்மைப்பங்கை வகிப்பதாக மாணவரும் பெற்றோரும் மிகையாக கருதுவதால் தனியார் கல்வி நிலையங்கள் எதேச்சையாக நடந்துகொள்கின்றன. பாடசாலைகளைவிடவும் தனியார் கல்வி நிலையங்களில் கூட்டம் முண்டியடிப்பதற்கான நிலைமையை தமக்குச் சாதகமாகப்பயன்படுத்திக்கொண்டு இவை தன்னிச்சையாக இயங்குகின்றன.

ஒரு கல்வி நிலையம் பெறுகின்ற வருமானத்தில் சிறு பகுதியை அதனுடைய அடிப்படை வசதிக்கு செலவிடக்கூடவிரும்பாத மனோ நிலையை என்னவென்பது.

சில கல்வி நிலையங்களில் உயர்கல்வி படிப்பிக்கும் ஆசிரியர்களின் மாதவருமானமாக மாதமொன்றுக்கு ஒரு லட்சத்துக்குமேல் சேருகிறது என்றும் மாணவர்கள் சொல்லுகிறார்கள்.

சில ஆசிரியர்கள் பாடசாலைகளிலும் படிப்பிப்போர். சில ஆசிரியர்கள் கல்வி துறை சார்ந்த நிறுவனங்களில் பணிசெய்பவர்கள்.

பலருக்கும் கல்விசம்பந்தமாகவும் கல்வி உளவியல் தொடர்பாகவும் அறிதலுண்டு.

ஆனால் தங்கள் வருமானம் என்று வரும் போது மட்டும் அடிப்படையான நியாயங்கள் புரிதல்கள், எல்லாவற்றையும் விட்டு விட்டு லாபத்தை மட்டும் நோக்கமாகக் கொண்டு மாணவர்களைப் பிழிந்தெடுக்கிறார்கள்.

இவ்வாறு நெருக்கடிகள் சிரமங்கள் எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு படித்துத் தேறிய மாணவன் எதிர்காலத்தில் எத்தகைய மனோபாவத்துடன் உருவாகுவான் என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப்பாருங்கள்.

எந்தவிதமான நெகிழ்ச்சியுமற்ற புரிந்துணர்வுமற்ற இளைஞர் யுவதிகளாக சூழ்நிலைகளுக்குள்ளால் உருப்பெறுபவர்கள் நாளைக்கு இந்தச் சமூகத்தில் பாதகமான மனோபாவத்துடன் இயங்குவோராகவே நிச்சயம் இருப்பார்கள். இந்த உண்மையை உலகமெங்குமுள்ள பல அனுபவங்கள் நிரூபித்துள்ளன.

இன்றைய மாணவர்களின் இந்தப் பேரவலங் களை கல்வித்துறை சார்ந்த அறிஞர்கள் கண்டிப் பார்களா? இதுபற்றி கவனிப்பார்களா?

குறிப்பிட்டு எண்ணக் கூடிய அளவில் மட்டும் சில கல்வியலாளர்கள் இதுதொடர்பாக குரல் கொடுக்கிறார்கள். இதுபோதுமான அளவு இல்லை. இது அதிகரிக்கப்படவேண்டும்.

கல்வியின் நோக்கம் மாணவர்களின் நலன் சார்ந்து புதிதாகவும் நியாயமாகவும் சிந்திக்கவேண்டும். அவை புதிய செயல்களாக நடைமுறையாகுவது அவசியம். இல்லையென்றால் எதிர்காலத்தில் சில விளைவுகளின் பின் இதற்கு புதிய விதிமுறைகள் வரையறைகள் என்று சட்டபூர்வமான தீர்வுகளுக்குத் தான் சகலரும் போகவேண்டிவரும். அது ஒரு தவிர்க்கமுடியாத நிர்ப்பந்தமாகியேதீரும்.

எங்களிடையே பொதுவான ஒரு இயல்புண்டு. முன்கூட்டியே பல விடயங்களிலும் சரியான அணுகுமுறைக்கும் நியாயமான நடைமுறைக்கும் நாங்கள் செல்வது குறைவு. யதார்த்தத்தில் நெருக்கடிக்குள்ளாகும் போது தான் நாங்கள் திணறிப்போய் சேதங்கள், சிதைவுகளோடு அவசர நடவடிக்கைக்கு இறங்குவோம். இந்த நிலைமை இன்னும் தான் தீர வேண்டுமென்றில்லை.

ஆட்தொகையை பகிர்ந்து வெவ்வேறு நேரங்களில் வகுப்புகளை நடத்தலாம். அல்லது வெவ்வேறு இடங்களில் வகுப்புகளை ஒழுங்குபடுத்தலாம்.

அதைச்செய்வதற்கு இந்த ஆசிரியர்கள் இன்று தயாராகவில்லை.

தங்களுடைய பணத்தின் வருவாயை உயர்த்துவதிலுள்ள கரிசனையை மாணவர்களின் நலனிலும் வசதியிலும் வைப்பதில்லை. பல மாணவர்கள் தொலை தூரங்களிலிருந்து வருகிறார்கள். அப்படிவருவோரை நோக்கி இவர்கள் செல்வதற்கு பதிலாக தம்மை நோக்கி மாணவர்கள் வரவேண்டும் என்றே விரும்புகின்றார்கள். சரி அப்படித்தான் அந்த மாணவர்கள் ஆசிரியர்களை நோக்கி வந்தாலும் அவர்களுக்குரிய மதிப்பை, உரியகவனிப்பை, கற்பதற்குரிய வசதியை உரியமுறையில் ஏன் வழங்கக் கூடாது.

தனியார் கல்வி ஒன்றியம்,தனியார் கல்வி அமைப்புகள், கல்வி சார்ந்து இயங்கும் பிற அமைப்புகள், நிறுவனங்கள், பொறுப்புள்ள கல்வித் துறையாளர்கள் கூடி இவற்றுக்கு ஒரு தீர்வுக்கு வருவது அவசியம்.

இலவசக் கல்வியை வைத்திருக்கும் ஒரு நாட்டின் ஒரு சூழலில்தான் காசுக் கல்வியில் இவ்வளவு கடும் பிடியும் அநாகரீகமும் சிந்தனைக் குறைபாடும் இருக்கிறது.

இதை நீக்குவது எப்போது?

இன்னும் காத்திருக்க வேண்டுமா?

விளையாட்டு

# சாதனை வீரர்களின் பயணம்...

டெஸ்ட் கிரிக்கெட்டில் ஒரே இன்னிங்ஸில் 400 ஓட்டங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளார் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் பிரையன் லாரா. இதன் மூலம் கடந்த ஆறு மாதங்களாக அவுஸ்திரேலிய வீரர் மத்தியூ ஹைடனிடமிருந்த சாதனையை லாரா மீண்டும் தனதாக்கியுள்ளார்.

127 வருட கால கிரிக்கெட் வரலாற்றில் ஓர் இன்னிங்ஸில் அதி கூடிய ஓட்டங்களைப் பெற்ற வீரர் எனும் சாதனையை 10 வீரர்கள் தன்வசப்படுத்தினர் இவர்களில் பிரையன் லாரா மட்டுமே இச் சாதனையை இரு தடவை புரிந்துள்ளார். இச் சாதனை நாயகர்களின் விபரங்கள் இங்கே.

### 165 -சார்ள்ஸ் பன்னெர்மென்

இவ் வரிசையில் முதலாவது சாதனையாளர் அவுஸ்திரேலியாவின் சார்ள்ஸ் பன்னெர்மென் ஆவார். 1877 இல் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க உலகின் முதலாவது போட்டியில் 165 ஓட்டங்களைப் பெற்றார் அவர் அந்த இன்னிங்ஸில் காயம் காரணமாக அவர் ஓய்வுபெற்றார் டெஸ்ட் வரலாற்றில் முதலாவது ஓட்டத்தைப் பெற்ற வீரர் எனும் பெருமையும் இவருக்கு உள்ளது. அப்போது 25 வயது வீரராக இருந்த பன்னெர்மென் அந்த இன்னிங்ஸில் அவுஸ்திரேலியாவின் மொத்த ஓட்டங்களில் 67.3 வீதமானவற்றைப் பெற்றார். இன்று வரை இதுவுமொரு சாதனையாகவுள்ளது ஏழரை வருடங்கள் இவரின் சாதனை நீடித்தது.

### 211 - பில்லி முர்டோக்



மற்றொரு அவுஸ்திரேலிய வீரரான பில்லி முர்டோக், இங்கிலாந்துக்கு எதிராக இங்கிலாந்து ஓவல் மைதானத்தில் 1884 இல் நடைபெற்ற போட்டியில் 211 ஓட்டங்களைப் பெற்று புதிய சாதனை படைத்தார்.

டெஸ்ட் கிரிக்கெட்டின் முதலாவது இரட்டைச்சதம் இதுவாகும். இச்சாதனையைப் புரிந்த போது 29 வயதான முர்டோக், அவுஸ்திரேலிய அணித்தலைவராகவும் விளங்கினார்.

பின்னாளில் இவர் இங்கிலாந்து அணி சார்பாகவும் டெஸ்ட் போட்டியொன்றில் விளையாடினார் என்பது குறிப்பிடத்தக்கது.




### 365 - கெரி சோபர்ஸ்

1957 கிங்ஸ்டனில் நடைபெற்ற பாகிஸ்தானுடனான போட்டியில் மேற்கிந்திய வீரர் கெரி சோபர்ஸ் தனது ஆட்டமிழக்காமல் 365 ஓட்டங்களைப் பெற்றார். இதன் மூலம் லென் ஹட்டனின் 20 வருடகால சாதனை முறியடிக்கப்பட்டது.

சோபர்ஸின் முதலாவதுடெஸ்ட் சதமும் இதுவே. இச் சாதனையின் போது சோபர்ஸுக்கு வயது 21 மட்டுமே. 36 வருடங்கள் இச்சாதனை முறியடிக்கப்படாமல் இருந்தது.

### 375- பிரையன் லாரா



1994 இல் சொபாசின் மேற்கிந்திய அணியைச் சேர்ந்த 24 வயது வீரரான பிரையன் சார்ள்ஸ் லாரா, இங்கிலாந்துக்கு எதிராக அன்டிகுவா,சென்ஜோன்ஸ் மைதானத்தில் 375 ஓட்டங்களைப் பெற்று புதிய சாதனையாளரானார். லாராவின் இச் சாதனைத் துடுப்பாட்டத்தை சோபர்ஸ் நேரில் வந்து பார்த்தார்.



### 380- மத்தியூ ஹைடன்

2003 ல் பேர்த் நகரில் நடைபெற்ற சிம்பாப்வே அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியாவின் மத்தியூ ஹைடன் 380 ஓட்டங்களைப் பெற்று லாராவின் 10 ஆண்டு கால சாதனையை முறியடித்தார். அப்போது ஹைடனுக்கு வயது 32 ஆகும்.

### 400 பிரையன் லாரா



கடந்த எப்ரல் 12 ஆம் திகதி சென்ஜோன்ஸ் மைதானத்தில், இங்கிலாந்து அணிக்கெதிரான 4 ஆவது டெஸ்ட்டின் மூன்றாவது நாள் அன்று ஆட்டம் இழக்காமல் 400 ஓட்டங்களைக் குவித்தார் லாரா. 542 பந்துகளில் 4 சிக்ஸர்கள்,43 பவுண்டரிகளையும் அவர் பெற்றார். டெஸ்ட் இன்னிங்ஸில் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்ற முதலாவது வீரரும் ஆவார்.

1994 இல் தாம் சாதனை படைத்த அதே சென்ஜோன்ஸ் மைதானத்தில் இங்கிலாந்து அணிக்கெதிராகவே மீண்டும் லாரா சாதனை படைத்துள்ளார். என்பது குறிப்பிடத் தக்கது.

இம்மாதம் (மே) 2 ஆம் திகதி தனது 35 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடும் பிரையன் லாரா, 1989 இல் இந்தியாவுக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டிக்கான அணியில் இடம் பெற்றிருந்தார்.

எனினும், இறுதி 11 பேர் பட்டியலில் அவர் இடம் பெறவில்லை. அப் போட்டியில் முதல் நாள் மாலை லாராவின் தந்தை பண்ட்ரி,மாரடைப்பினால் காலமானார்.

1990 இல் பாகிஸ்தானுக்கெதிரான டெஸ்ட் போட்டியில் முதன் முதலாக லாரா விளையாடினார்.

### 325- அன்டி சந்தாம்

ரிப் போஸ்டரின் சாதனையை 26 ஆண்டுகளுக்குப் பின்னர் 1930 இல் கிங்ஸ்டனில் நடைபெற்ற மேற்கிந்திய அணிக்கெதிரான போட்டியில் மற்றொரு இங்கிலாந்து வீரர் அன்டி சந்தாம் முறியடித்தார். போஸ்டர் தனது முதல் போட்டியில் படைத்த சாதனையை சந்தாம் தனது கடைசி டெஸ்டில் முறியடித்தார். அப்போது சந்தாமின் வயது 39 வருடங்களும் 9 மாதங்களுமாகும்.



### 334- டொன் பிரட்மன்

அன்டி சந்தாமின் சாதனை 3 மாதங்கள் மாத்திரமே நீடித்தது. 1930 இல் ஹெடிங்லேயில் நடைபெற்ற இங்கிலாந்துடனான போட்டியில் அவுஸ்திரேலிய வீரர் டொனால்ட் பிரட்மன் 334 ஓட்டங்களைப் பெற்று புதிய சாதனையாளரானார். இவற்றில் 309 ஓட்டங்களை ஒரே நாளில் குவித்தார் பிரட்மன். அப்போது அவருக்கு வயது 21 மட்டுமே. 300 இற்கும் மேற்பட்ட ஓட்டங்களை இரு தடவை பெற்ற முதலாவது வீரர் பிரட்மன் ஆவார்.

### 336 - வில்லி ஹமன்ட்



1932-33 இல் இங்கிலாந்து வீரர் வில்லி ஹமன்ட் ஆட்டமிழக்காமல் 336 ஓட்டங்களைப் பெற்று புதிய சாதனையாளரானார்.

நியூசிலாந்தின் ஆக்லாந்து நகரில் பலவீனமான நியூசிலாந்து அணிக்கெதிராக இச் சாதனையைப் படைத்தார். 29 வயதான ஹமன்ட். எனினும் அக்காலத்தில் பிரட்மனுக்கு அடுத்ததாக மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரராகக் கருதப்பட்டவர் இவர்.



### 364 - லென் ஹட்டன்

1938 இல் இங்கிலாந்து வீரர் லென் ஹட்டன் ஓவல் மைதானத்தில் நடந்த அவுஸ்திரேலியாவுடனான போட்டியில் 364 ஓட்டங்களைப் பெற்று புதிய சாதனையாளரானார். அப்போது இங்கிலாந்து அணிக்குத் தலைமை தாங்கியவர் வல்லி ஹம்மன்ட். அவரின் சாதனையையே 32 வயதான ஹட்டன் மூறியடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப் போட்டியில் இங்கிலாந்து அணி 07 விக்கெட் இழப்பிற்கு 903 ஓட்டங்களைப் பெற்றது. அவுஸ்திரேலிய வீரர் டொனால்ட் பிரட்மன் காயம் காரணமாக துடுப்பெடுத்தாட முடியாத நிலையில் இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்திய பின்னரே இங்கிலாந்து அணியின் துடுப்பாட்டத்தை ஹம்மன்ட் நிறுத்தினார்.

### 287 - ரிப் போஸ்டர்

1903 04 இல் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக சிட்னியில் நடைபெற்ற போட்டியில் இங்கிலாந்து வீரர் ரெஜினால்ட் ஏர்ஸ்கைன் ரிப் போஸ்டர் 287 ஓட்டங்களைக் குவித்ததன் மூலம்,20 வருடங்கள் முர்டோக் வசமிருந்த சாதனை முறியடிக்கப்பட்டது.

ரிப்போஸ்டர், தனது 25 ஆவது வயதில் முதலாவது டெஸ்ட் போட்டியிலேயே இச்சாதனையை புரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தனது முதல் போட்டியிலேயே வீரர் ஒருவர் பெற்ற ஆகக் கூடுதலான ஓட்ட எண்ணிக்கை இதுவாகும்.

அவுஸ்திரேலிய மண்ணில் இங்கிலாந்து வீரர் ஒருவர் பெற்ற ஆகக் கூடுதலான ஓட்டங்களும் இவையே. இங்கிலாந்து சார்பில் கால்பந்து, கிரிக்கெட் ஆகிய இரு அணிகளுக்கும் தலைமை தாங்கிய ஒரேயொரு வீரர் இவராவார்.

## சாதனைகளில் ஆசிய வீரர்கள்

சர்வதேச கிரிக்கெட் உலகில் பந்துவீச்சு, துடுப்பாட்டம் போன்றவற்றில் ஆசிய வீரர்கள் முன்னிலையில் திகழ்கின்றனர்.

பந்து வீச்சைப் பொறுத்தவரை பாகிஸ்தான் அணியின் வேகப் பந்து வீச்சாளர் வசீம் அக்ரம் ஒரு நாள் போட்டியில் ஆகக் கூடுதலான 500க்கும் அதிகமான விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். இது முறியடிக்கப்படாத சாதனையாகவுள்ளது. இவர் டெஸ்ட் போட்டியிலும் 400க்கும் மேற்பட்ட விக்கெட்டுக்களை கடந்துள்ளார். தற்போது இவர் ஓய்வுபெற்றுவிட்டார்.

இந்தியா - சச்சின் டெண்டுல்கர்

துடுப்பாட்ட வீரரான இவர் பகுதி நேர பந்து வீச்சாளரும்கூட ஒரு நாள் போட்டியில் 13500 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

கங்குலி - ஒருநாள் போட்டிகளில் 9000 ஓட்டங்களைக் கடந்துள்ளார். பகுதி நேரப் பந்து வீச்சாளரும்கூட தற்போது அணியை வெற்றிப் பதையில் வழி நடத்துகின்ற சிறந்த தலைவரும்கூட.

சிறிலங்கா - சமிந்தவாஸ் , முன்னணி பந்து வீச்சாளர். ஒரு நாள் போட்டியில் 300 விக்கெட்டுக்களைக் கடந்துள்ளார். சிறிலங்கா அணியில் நம்பிக்கைக்குரியவர். துடுப்பாட்டத்திலும் சிறப்பாக பிரகாசிப்பவர்.

முரளி, ஒரு நாள் போட்டிகளில் 350 விக்கெட்டுக்களைக் கடந்த உலகின் முதல் தர சுழல் பந்து வீச்சாளர். தற்போது 519 டெஸ்ட் விக்கெட் சாதனையை நிலை நாட்டவுள்ளார்.

இதனைவிட இந்திய அணியின் கபில்தேவ் சிறந்த சகலதுறை ஆட்டக்காராக விளங்கியவர். டெஸ்ட் போட்டியில் 434 விக்கெட்டுக்களையும், 5400 ஓட்டங்களையும், ஒருநாள் போட்டியில் 252 விக்கெட்டுக்களையும், 3500 ஓட்டங்களையும் பெற்றுள்ளார்.

ஓரளவு திறமையிருந்தும், ஒன்றும் செய்யாமலிருக்கும், செயலின்மை. - வில்லியம் கூப்பர்

# பொருண்மிய வாசல்

## எங்கள் பொருண்மிய வளம்

**சிதம்பரதிரு**

ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும் மாண்டார் வரமாட்டார்கள் என்பது பழமொழி. ஆனால் ஆண்டாண்டு காலமாக நாம் வளர்த்து வந்த மரங்கள் எம்மை அழவிடமாட்டா என்பது அனுபவமொழி.

எங்கள் பிரதேசங்களில் உயரமாக வளர்ந்து கிளைபரப்பி அடர்த்தியாக நிற்கும் மரங்களைப் பாருங்கள் அவற்றுக்குப் பின்னால் நீண்ட வரலாறுகள் இருக்கும். எங்கள் மண்ணின் கதையை மக்களின் வரலாறுகளை அவை சொல்லும்.

எனினும் பல்வேறு காரணங்களால் நம்முன்னாலேயே அம்மரங்கள் தறிக்கப்படுகின்றன, அழிக்கப்படுகின்றன.

இந்தத் துயர நிகழ்வுகளுக்கு மத்தியில் மாறுதலாக ஒருநிகழ்வு அண்மையில் நடந்துள்ளது. "சமூககாடு வளர்ப்புத்திட்டம்" ஒன்று பளை பச்சிலைப்பள்ளியில் தொடக்கி வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் அவர்களின் நிதியீட்டத்துடன் தொடங்கப்பட்ட இத்திட்டம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தில் சமூக காடு வளர்ப்புத்திட்டத்தினரால் ஒழுங்கமைக்கப்பட்டதாகும்.

சமூக நிறுவனங்களுக்குரிய பொதுக்காணிகளை தெரிவுசெய்து அக்காணிகளில் தேக்கு,வேம்பு,சமண்டலை போன்ற மரங்களை நடுகை செய்வது இத்திட்டத்தின் ஆரம்ப அம்சம்.

அத்துடன் நடுகை செய்யப்படும் மரங்களைப் பராமரிக்கும் பொறுப்பும் சமூக நிறுவனங்களுக்கே உரியதாகும். இத்திட்டமானது வீதியோர மரநடுகை திட்டத்தைவிட வித்தியாசமான முறையில் அமைந்துள்ள இத்திட்டத்தின் மூலம் கூடுதலான பயனைப் பெற்றுக்கொள்ளலாம் என கிளிநொச்சி அரச அதிபர் அவர்கள் தெரிவித்திருப்பது முக்கியமான விடயமாகும்.


மரங்கள் அழிக்கப்படும் வேகத்தினைவிட மரமீள் நடுகை செய்தல் அதிக வேகத்துடன் முன்னெடுக்கப்படுவது அவசியமாகும்.

அந்த அவசியத்தினை இந்த மண்ணில் வாழும் சகலரும் உணர்ந்துகொள்வதோடு செயற்படுத்தவும் முனைய வேண்டும்.

## குறைந்த நீரில் கூடிய வருமானம் பெற?

உலர் வலய விவசாயத்திற்கும், ஏனைய தேவைகளுக்கும் குளத்தின் நீரையே நம்பியிருந்த மேட்டு நிலப் பயிர்ச்செய்கையாளர்கள் தற்போது தங்கள் காணிகளுக்குள் தோட்டக் கிணறுகள் அமைத்து பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். தற்போது ஏற்பட்டுள்ள வரட்சி காரணமாக நிலத்தடி நீர் வேகமகாக வற்றிக்கொண்டு போகும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த வகையில் விவசாயிகள் நஷ்டம் அடைய வேண்டிய நிலையாக உள்ளது.

அதாவது நீர்ப்பாசனக் குளங்களுக்கு மேலுள்ள இடங்களில் காடழிப்புச் செய்தல், மண்ணகழ்வு மேற்கொள்ளல் போன்ற பாதுகாப்பற்ற நடவடிக்கைகளால் மண்ணரிமானம் ஏற்படுகின்றது. இம் மண்ணரிமானமானது கிழே உள்ள குளங்களில் மழை நீருடன் வந்து சேருகின்றது. இதனால சேற்றினால் நிரம்புகிறது. குளத்தின் கொள்ளளவு குறைகிறது. அதிக அளவிலான நீர் வீணாக குளத்தில் இருந்து வெளியேறி கடலை அடைகிறது. எனவேதான் குளம் மாரிகாலங்களில் நிரம்பி இருந்தாலும் எதிர்பார்க்கப்படும் அளவு பயிர் செய்கை மேற்கொள்ள முடியாமல் போய்விடுகிறது.



நிலத்தடி நீரை நம்பி (அதாவது கிணற்று நீர்) பயன்படுத்தும் போது நீண்ட காலத்தில் ஏற்படக்கூடிய விளைவுகளைச் சிந்திக்கவேண்டும். எனவே நீர் வளத்தையும் அதனை எல்லை படுத்தும் காரணிகளையும் விவசா யிகள் அறிந்திருப்பது அவசியமாகும்.

விவசாயி ஒருவர் நிலத்தடி நீரை நம்பி விவசாயம் செய்யமுயற்சிக்கும் போது திட்டமிட்டே செயற்படவேண்டும். தன்னிடமுள்ள காணியின் பரப்பு நீரின், அளவு என்பவற்றை அறிந்து பயிரிட வேண்டும். திட்டமிட்டு செய்கை பண்ணாது பெருமளவு பயிர்களை பயிரிட்டால் நீரின்றிக்கைவிடவேண்டிய நிலை ஏற்படும். முற்கூட்டியே திட்டமிடாமல் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதால் கடைசி நேரத்திலே பயிர்களில் இருந்து வருமானம் எடுக்கமுடியாமல் நஷ்டத்தை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலை கூட ஏற்பட வாய்ப்பு ஏற்படும். ஏனெனில் தண்ணீர் பற்றாக்குறையே இதற்குக்காரணமாக அமையும்.

அதாவது பெரும்போக மழையின் பின்னரே கிணறுகளில் உயர்மட்டத்தில் நீர் காணப்படும். தை, மாசி, பங்குனி மாதங்களில் படிப்படியாக தன்னிச்சையாகவே நீர் வற்றிக்கொண்டேபோகும். கிணறுகள் நெருக்கமாக காணப்படும் பிரதேசங்களில் மிகவேகமாகவே நீர் வற்றல் நடைபெறும்.

இதன் பிற்பாடு சித்திரைமாத மழையுடன் நீர்மட்டம் கூடும். வைகாசி மாதத்தில் இருந்து மீண்டும் நீர் குறைந்து கொண்டேபோகும். ஆகவே இந்த நிலையை வைத்தே விவசாயிகள் பயிர்ச்செய்கைக்கான திட்டத்தை செயற்படுத்தவேண்டும்.

நீர் இறைக்கும் இயந்திரத்தின் மூலம் நிலத்தடி நீரை உறுஞ்சி நீர்பபாசனம் செய்வதால் அதிகளவிலான நீரைப்பாய்ச்சி நிலத்தடி நீர் விரையமாகின்றது. தேவைக்கதிகமான நீரையும் உரத்தையும் பயிர்களுக்கு இடுவதன் மூலம் மண்ணின் வளம் பாதிப்படைகின்றது. மேலதிக உரம் நீருடன் கரைந்து நிலத்தின் கீழ் இறங்கி நிலத்தடி நீரைச்சென்றடைகின்றது. இதனால் இந்நீர் மாசுபடுத்தப்படுகின்றது. நீரை உவர்த தன்மையடையச் செய்கின்றது, நீரை நஞ்சடையவைக்கின்றது.

பயிர்கள் தம்மால் கிரகிக்க கூடிய நீர்,உரம் போன்றவற்றை மட்டுமே உள்வாங்குகின்றது. மேலதிக நீரும் உரமும் நிலத்திற்குக் கீழே ஊடுருவுகிறது. பாத்திமுறை நீர்ப்பாசனத்தினால் பாத்திகள் வாய்க்கால்களில் பயிர்கள் வளர முடியாது, நிலம் வீணா கிறது. பாத்திகளின் நிறைவாக நீரையும், உரத்தையும் இடுவதன் மூலம் வீண் செலவுகளும் ஏற்படுகின்றன.

விவசாயச் செய்கையில் மிகவும் நீரைச்சிக்கனமாகப் பாவித்து பயிர் செய்யக்கூடிய வழிமுறைகளை விவசாயத்திணைக்களம் அறிமுகம் செய்துள்ளது. இவை சொட்டு நீர்ப்பாசனம், தூவல் நீர்ப்பாசனம் ஆகும். இவற்றுள் தூவல் நீதப்பாசன முறை தற்போது யாழ்மாவட்டத்தில் பிரபல்யம் அடைந்து வருகிறது. வன்னிப்பிரதேசத்தில் நெடுங்கேணிப் பகுதியில் இத்தூவல் நீர்ப்பாசனம் மூலம் விவசாயச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

தூவல் நீர்ப்பாசனம் நிலத்தடி நீரை நம்பி மேட்டு நிலப்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு உகந்தமுறையாகும் குறைந்த நீரில் கூடிய வருமானத்தைப் பெறக்கூடிய சிறந்த வழிமுறையாகும். தூவல் நீர்ப்பாசனமுறையில் பயிர்களுக்கு தேவையான அளவு நீரையும் அளவான உரமும் கிடைக்கின்றது. இதனால் மேலதிக நீர், மேலதிக உரம் மீதப்படுத்தப்படுகின்றது. குறைந்த அளவு நிலப் பரப்பிலும், நீரிலும் விவசாயச்செய்கையை மேற்கொள்ளலாம். ●

(சி-9609)


# தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வெற்றிடம்

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**பணிநிலை** :- அலுவலர் (பயிலுநர்)

**தகைமைகள் :-**

ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் ஏற்றுக்கொள்ளக் கூடிய பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

அல்லது

ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக்கல்லூரி ஒன்றில் உயர் தேசியக்கணக்கியல் டிப்ளோமா சான்றிதழைப் (HNDA) பெற்றிருத்தல் வேண்டும்.

**மாதாந்த ஊதிய அளவுத்திட்டம் :- 4,500+6,000**

**அகவை எல்லை :- 32வருடங்களுக்கு மேற்படாதவராக இருக்கவேண்டும்.**

வேண்டுகைகள் யாவும் உரிய படிவத்தில் நிறைவுசெய்யப்பட்டு கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை- அலுவலர் (பயிலுநர்)" எனக் குறிப்பிடப்பட்டு 2004-05-31ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைத்தல்வேண்டும். வேண்டுகைப்படிவங்களையும், மேலதிக விளக்கங்களையும் தமிழீழ வைப்பகத்தின் எல்லாக்கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

BANK OF TAMILEELAM

(சி-9467)

**மேலாளர்,**
**ஆளுகைப்பகுதி,**
**நடுவப்பணியகம்,**
**தமிழீழ வைப்பகம்.**



உலகத்தரம் வாய்ந்த யப்பானிய அதியுயர் தொழில் நுட்பத்திலான பிறீ இங் இறபர் சீல்களை இப்பொழுது யாழ்ப்பாணத்திலேயே செய்து கொள்ளலாம்.

- பல வர்ணங்களில் பிரதிகள் பெறக்கூடியதும்
- 10000 மேற்பட்ட பிதிகளுடன்
- கவர்ச்சியான கைக்கடக்கமான

**இறபர் சீல்கள் உங்கள் கைகளில்**

**யசோ ஸ்ராம்**

35, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-9541)


## இலக்கியப் படைப்பாளிகளே...

**உங்களிடமிருந்து வெள்ளிநாதம் எதிர்பார்ப்பது-**

தரமான சிறுகதை, கவிதை, உருவகம்,

இன்னும், இன்னும் உங்கள் எண்ணங்களில் தோன்றும் வண்ணங்கள்... உங்கள் படைப்பாளிகளின் பரப்புகள் போராட்டம், சமூகம் என விரிந்த பார்வையாக இருக்கட்டும்.

படைப்புக்கள் அனுப்பப்பட
வேண்டிய முகவரி-

ஆசிரியா :- வெள்ளிநாதம்,
யாழ்சாலை, கிளிநொச்சி.

# இலக்கியப் பகிர்வு




## நினைவுள் மீள்தல்

தானா விஷ்ணு என்னும் இளம் கவிஞரின் முதற்கவிதைத் தொகுதியான "நினைவுள் மீள்தல்" தோற்றத்தில் ஈர்ப்பைத் தரும் ஒரு கவிதைத் தொகுதியாகும்.

அட்டைப்படம் தொடக்கம் அதன் அச்சும் அமைப்பும் மிக கச்சிதமாக வடிவமைக்கப்பட்டு வெளியிடப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்க அம்சம். பொருண்மியத் தடையுடன் சகல தடைகளும் வன்னி மண்ணை சப்பிக்கொண்டிருந்த ஒரு சூழ்நிலையில் ஈய எழுத்துக்களில் கறுத்த மை தடவி வெளிவந்த காலத்தை இப்போது நினைத்துப்பார்க்கும் பொழுது கனவு போலதான் உள்ளது. அதைவிடுவோம்.


கவிஞர் தானா விஷ்ணு 1994 ல் கவிதைகளை எழுதத்தொடங்கினார். அவரது சில கவிதைகள் 1995 க்கு பிற்பட்ட காலப் பகுதியில் "ஈழநாடு" வார மலரில் வெளிவந்ததாக அவர் தெரிவிக்கின்றார். எனினும் அக் காலக்க விதைகள் யாவும் ஒடுங்கிய நிலை கொண்டு அமைந்த காரணத்தால் பின்வந்த நாட்களில் அவற்றை நிராகரித்ததாக கவிஞர் தெரிவிக்கின்றார்.

2001 இல் மீளவும் கவிதை எழுத ஆரம்பித்த கவிஞர் 2003ல் ஒரு தொகுப்பினைக் கொண்டு வந்துள்ளார். 2010 இல் அல்லது 2015 இல் இந்தத் தொகுப்பினை அல்லது இப்போதைய கவிதைகளை கவிஞர் நிராகரிக்கவும் கூடும்.

இது ஒரு பிழையான கருத்து அல்ல. எல்லாப் படைப்பாளிகளும் தம் ஆரம்ப காலப் படைப்புக்களை பின்நாட்களில் பார்த்து நாண முறுவதே வழக்கம். ஆனால் பத்து வயதில் இருந்த தோற்றத்தை யாரும் மறக்கவும் முடியாது. மறைக் கவும் முடியாது.

மற்றது படைப் புத் தொடர்பாகத் திருப்திப்பட்டுக் கொள்ளவும் முடியாது. படைப் பாக்கம் என்பது மலை ஏறும் முயற்சிதான். ஏற ஏற ஏறிக்கொண்டு தான் இருக்கவேண்டும். வயது போய் உடல் தளர்ந்தால் ஒழிய..

தானா விஷ்ணு "போர்" அடுப்பில் தமிழ் மக்கள் வெந்து கொண்டிருந்த காலப் பகுதியில் கவிதை பாடிய பல கவிஞர்களில் ஒருவர். இயல்பாகவே வேகம் கொண்ட கவிஞர். யுத்தம், அகதி வாழ்க்கை, பிரிவு, அலைச்சல், இழப்பு, துயரம், ஓயாத ஓட்டம் என்று தன்னுடைய இளமைக்காலத்தில் அத்தனை நாட்களையும் இந்தக்காலத்திற்கே பறி கொடுத்த கவிஞன் என கருணாகரன் குறிப்பிடுவது கவனத் திற்குரியது.



இதையே சித்தாத்தன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"தானா விஷ்ணு இன்றைய இளம் தலைமுறையினது இன்னொரு அடையாளம். போரின் மூலமாக போருக்குள் இருந்து முகிழ்ந்த கவிஞன் போரே வாழ்வாகவும் வாழ்வே போராகவும் இருந்த காலத்திலும் தனது கவிதையை போர்க்கால மனச்சாட்சியுடனும் கவிஞரின் கடப்பாட்டுடனும் எழுதிய கவிஞன் அலங்கரிக்கப்பட்ட வார்த்தைகளிலிருந்து விலகி யதார்த்தமான மொழியுடன் அவனது கவிதைகள் இயங்குகின்றன"

இருபத்தைந்து கவிதைகள் கொண்ட இந்தத் தொகுப்பில் காதல் கவிதைகளே அதிகம் ஈர்ப்புக்குள்ளாகின்றன.

"என்னையும் மீறி உனக்குள்
அடங்கித் துளிர்ப் பெய்கிறது
எந்தனது காதல்"

"ஒரு மழைக்கால இருளில்
உன் தொடுகையில் அடங்கிப்போன கூதல்,
நீ இல்லாது இருக்கும் இந்த மழைக்கால இருளில் மீண்டும் தளைத்துக் கொள்கிறது."

கவிஞரின் ஆற்றல் பின்வருமாறும் வெளிப்படுகின்றன.

"என் கூரைக்கு மேல்
எப்போதும் வந்துபோகும் நிலவு
ஒளியற்றுப் போயிருக்காது நீ பிரிந்து போயிருக்கும் காலம் நிலவின் ஒளியை அறுத்து
என் மன மலையின் அடியில் புதைந்து விட்டது."

கவிதைகளின் அடிப்படை அம்சம் அதன் சொற்கள். மீண்டும், மீண்டும் ஒரே சொற்கள் கவிதைகளில் பாவிக்கப்படுவது கவிதைக்கான வீச்சைக்குறைத்துவிடும்.

தானாவிஷ்ணுவின் கவிதைகளில் அவ்வாறான இளகல் தன்மை உண்டு. உதாரணமாக "குருதிக்கறை படிந்த நிலவின் குறிப்போடு" என்னும் தலைப்பிலான கவிதையை எடுத்துக்கொள்ளலாம்.

"வன்மமாய் வீசும் காற்றிலும்"
"வன்மம் நிறைந்த காற்று"
"சாவு சொல்லும் ஆட்காட்டி"
"சாவு சொல்லும் ஆட்காட்டியும்"

போன்ற வரிகள் ஈர்ப்பைக் குறைக்கின்றன. அவ்வாறே "கால்களின் கீழ் நெளியும் நகரம்" எனும் தலைப்பில் "சுருண்டு கிடந்த பாம்புகளுக்கு உயிர் கொடுத்தார்கள்" என்று முடிந்த வரி, "அவர்களின் உயிர் கொடுப் பில்" என மீளவும் சொல்லப் படுவதைத் தவிர்க்கலாம்.

இவ்வாறான இழுவல் தன்மைகள், அவனது திரும் பக்கூறும் தன்மைகள் கவிதையின் இறுக்கத்தை, வீரியத்தைக் குறைக்கச் செய்துவிடும்.

"இருண்ட காலத்தை நசுக்கி
உதய காலம் நிமிரு முன்பு
மெல்ல மெல்ல என்னை நோக்கி
நீண்டுவரும் மரணவெள்ளம்
என்னை மூழ்கடித்துப் போய் விடுமோ
என்பதே எனது அச்சமாக இருக்கிறது."

என்று அச்சப்பட்ட கவிஞர் அடிமைத்தனத்துக்கெதிராக பின்வருமாறு கோபப்படுகின்றார்.

"நீயும் வாள் வைத்திருப்பது நல்லது
அப்பிள வெட்டவோ
மற்றவரை ஆசீர்வதிப்பதற்காகவோ அல்ல
உன்னை ஆசீர்வதிக்க நினைப்பவனுக்கு
உன் அடையாளத்தைக் காட்டுவதற்கும்
உன் அடையாளங்களைத் தறிப்பவனின் சிரம்
நறுக்கவும் நீ ஒருவாள் வைத்திருத்தல்
அவசியம்."

தானா வஷ்ணு குறிப்பிடத்தக்க ஒரு கவிஞராக எதிர் காலத்தில் மிளிர்வார் என நம்பலாம்.

இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்

## படித்ததில் பிடித்தது

*என்றைக்கோ*
*ஒரு நாளைக்கு*
*அவர்கள்*
*துடிதுடித்து*
*விழித்தெழுவார்கள்*
*நான் யார்?*
*என்று*
*தம்மைத்தாமே*
*கேட்டுக்கொள்வார்கள்.*

**(02)**

*எங்கிருந்து நான் வந்தேன்*
*ஒரு ஆரம்பம்*
*ஒருவேர்*
*மற்றவர்க்கு உள்ளது.*

*நான்...?*
*நான் யார்..?*
*குடும்பமென்று இல்லாமல்*
*இனமென்று இல்லாமல்*
*நாடென்று இல்லாமல்*
*எனது வேர்கள்*
*புதைந்திருக்கும் மண்ணின்*
*மொழியை...*
*கலாச்சாரத்தை...*
*அறியாமல்*
*ஏன் இங்கே இருக்கிறேன்...*
*என்பதை அறியாமல்*
*எதையும் ஏற்கமுடியாமல்*
*எவராலும் ஏற்கப்படாமல்.*

**(03)**

*அன்னிய மண்ணின்*
*பசுமையான புற்றரையில்*
*நிமிர்ந்து நிற்கும்*
*உனது கல்லறையின்*
*நினைவுக்கல்*
*அவர்களது கவலைகளுக்கு*
*அவர்களது ஏக்கங்களுக்கு*
*அவர்களது தேவைகளுக்கு பதில்*
*அளிக்குமா?*

*நீ*
*வாழ்க்கையில் மௌனித்திருந்ததால்*
*உன் நினைவுக் கல்லும்*
*வாயைத் திறக்காதா?*
*உன்னுடைய வாரிசை...*
*அந்தப் பாவப்பட்டவனை...*
*அந்த*
*அடையாளமில்லா தலைமுறையை....*
*நீ விட்டுச் சென்றதால்...*

*எதையும் குழப்பி விடாதிருப்பதில்*
*நீ கொண்ட அக்கறையாலும்*
*உன்னுடையது அல்லாத ஒன்றுக்குள்*
*இரண்டறக் கலந்து விட....*
*இனவுணர்வு ஒழிக்கப்பட....*
*நீ கொண்ட விருப்பத்தாலும்*
*உன் அடையாளத்தை*
*உறுதிப்படுத்த*
*நீ கொண்ட பயத்தினாலும்*
*தன் அடையாளத்தை*
*நிலை நிறுத்த முடியாமல்*
*தவித்துக் கொண்டிருக்கிறான்.*

*தொலைந்து போனவராய்*
*பலவீனர்களாய்*
*ஆதரவற்றவராய்*
*இல்லாமை என்ற கடலில்*
*கழித்து விடப்பட்ட துளிகளாய்*

*வாழ்வுக்கும்*
*அதற்குப் பொருள் தரவும்*
*தேவைப்படுகின்ற*

*தங்கள் வேர்களை தேடும்*
*பயனில்லா முயற்சியில்*
*அவர்கள்.*

**(04)**

*எனக்கென்று*
*ஒரு சூழல் இல்லாமல்*
*அங்கே திரும்பும்*
*காலம் கடந்து போய்*
*இழந்த அடையாளத்தை உரிமை*
*கோர காலம் கடந்து போய்*
*கிட்டத்தட்ட*
*நடுவானில் விடப்பட்டது போல்*
*இங்குமில்லாமல்*
*அங்குமில்லாமல்*
*பாலை வனத்து*
*மணற் துளியாய்*
*அவதிப்படுகிறேன்.*

ஆங்கில மூலம்:- சேர்லி W.சோமநாதர்
நுகேகொட, சிறிலங்கா.
தமிழில்: வின்சென்ற் புளோரன்ஸ்,




## 'பெண்' மொழிகள் சில

* அழகிய பெண் சிரிக்கிறாள் என்றால்
பணப்பை கண்ணீர் விடுகிறது என்றே அர்த்தம்..

* பெண்கள் இருக்குமிடத்தில் பேச்சு இருக்கும்.
வாத்துக்கள் இருக்குமிடத்தில் கொக்கரிப்பு இருப்பதைப் போல....

* குழந்தை அழாவிட்டால் தாய்க்கு ஒன்றும் புரியாது.
தாயில் கெட்டவளுமில்லை, சாவில் நல்லதுமில்லை...

## இது பாரதிதாசனின் பாட்டு

ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர் உதையப்பர் ஆகிவிட்டால் ஓர் நொடிக்குள் ஓடப்பர் உதையப்பர் எல்லாம் மாறி ஒப்பப்பர் ஆகிடுவார் உணரப்பா நீ.....

## முல்லாவும்—அவனும்

இரவு நேரம்.
முல்லா விளக்கு கம்பத்தின் கீழ் எதையோ தேடிக் கொண்டிருந்தார். வழிப்போக்கன் ஒருவன் என்ன தேடுகின்றீர்கள் என்று அவரிடம் கேட்டான். 'எனது மோதிரம் தொலைந்து விட்டது அதைத்தான் தேடுகிறேன்' என்று முல்லா கூறவும் அவனும் அவருடன் சேர்ந்து தேடி னான் ஆனால் மோதிரம் கிடைக்க வில்லை.
கடைசியா அவன் கேட்டான் 'குறிப்பாக எந்த இடத்தில் தொலைந்திருக்கும் என்று கூறமுடியுமா?
உடனே முல்லா சற்றுத் தூரத்தில் இருளாக இருந்த பகுதியைக் காட்டி 'அதோ அங்கே தான்' என்றார்.
திகைத்துப் போன அவன் 'அங்கே போட்டு விட்டு இங்கே ஏன் தேடுகின்றீர்கள்'? என்றான்.
'இங்கே தான் வெளிச்சம் இருக்கிறது' என்றார் முல்லா. அவன் தலையைப் பிய்த்துக் கொண்டான்.

## ஒரு குட்டிக்கதை

**பெருமை.**

தேர்தல் நேரம்
ஒரு வேட்பாளர் ஒரு பிச்சைக்கார வாக்காளரை நோக்கி கைகூப்பி அவரது வாக்கை தனக்களிக்குமாறு கேட்டார். பிச்சைக்காரரும் பதிலுக்கு கை கூப்பினார் அந்தக்கணத்தில் இருவர்கைகளும் சந்தித்துக் கொண்டன.. பிச்சைக்காரனின் கை தனக்குள் நினைத்துக் கொண்டது.
"ஏய்த்து பிழைக்கும் அவனுக்கு கைகளாக இருப்பதைவிட ஏந்திப் பிழைக்கும் இவனுக்கு கைகளாக இருப்பது எவ்வளவோ மேல்...."

## திருடனும் எழுத்தாளரும்

அவர் பிரபல பிரெஞ்சு எழுத்தாளர் பால்சாக் ஒருநாள் இரவில் ஒரு திருடன் அவரது வீட்டிற்கு திருடவந்தான் அவரின் அலுமாரி, மேசை, லாச்சி அனைத்தையும் ஒன்றும் விடாமல் தேடினான் ஒரு சதமும் தென்பட வில்லை. களைத்துப் போனான்.

இதனை ஒளிந்திருந்து பார்த்த பால்சாத் கூறினார் "நான்பகல் முழுவதும் தேடியே எனக்கு எதுவும் கிடைக்கவில்லை இந்த இருட்டில் நீ எதனைக் கண்டுபிடிக்கப் போகிறாய் திருடனுக்கு தலை சுற்றியது.

**பொறுக்கி**

ஞானியாய் இருக்க விழைபவன், முதன் முதலில் தன்னிடமிருந்து அகற்ற வேண்டியது அச்சத்தையே. - சுவாமி விவேகானந்தர்

2ம் பக்கத் தொடர்ச்சி..

சமாதான நகர்வுகளுக்கு அவர்களின் ஆதரவு இருக்கப் போவதில்லை என்பதைச் சொல்லவேண்டியதில்லை.

அதுவும் விடுதலைப் புலிகளை தமிழ்மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டு அரசு சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் என கதிர்காமர் கூறியதைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு பார்த்தால், சமாதானப் பேச்சுக்கான புதிய முன்னெடுப்பானது 'இடியப்பச் சிக்கலுடன்' ஆரம்பமாகும் போல் தெரிகின்றது.

இந்தச் சிக்கலை அரசு மட்டுமல்ல, அனுசர ணையாளராகச் செயற்படப்போகும் நோர்வேயும் கூட எப்படிச் சமாளிக்கப்போகின்றது என்பதே இப்போதைய கேள்வியாகும்.

இந்தநிலையில்தான், சந்திரிகாவின் அழைப்பை ஏற்று நோர்வேயின் அனுசரணையாளர்களின் மீள்வருகை நிகழ்ந்துள்ளது.

விடுதலைப்புலிகள் தொடர்பான கதிர்காமரின் கருத்துக்கள் வெளியாகியுள்ளது.

இது நோர்வேக்கும், விடுதலைப்புலிகளுக்கும் கிடைத்த மற்றொரு வெற்றியாகியுள்ளது.

எந்தவகையிலும் மீண்டும் விடுதலைப்புலிகள் தமது நிலைப்பாட்டை தெளிவாகவும், உறுதியாகவும் நோர்வே ஊடாக கொழும்பிற்கும், சர்வதேச சமூகத்திற்கும் அறியத் தந்துள்ள நிலையில், ஜே.வி.பி., ஹெலஉறுமய ஆகிய கட்சிகளின் சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக தமது முந்திய நிலைப்பாடுகளில் இருந்து விட்டுக் கொடுத்து அரசுக்கு அனுசரணையாக பின்வாங்குவார்களா? அல்லது அரசுடன் மோதத் தயாராகுவார்களா?

தங்களது இனவாதக் கொள்கையை இலட்சியமாகக் கொள்வார்களா? அல்லது தேசிய நலன் கருதி சமாதான வழி முறைகளுக்கு வழிவிடுவார்களா?

அடுத்து வரும் வாரங்கள் இலங்கை அரசியலில் மிக முக்கியத்துவம் மிக்க சம்பவங்களை உள்ளடக்கியதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.


2004

நாடு பூராகவும் ஈழநாதத்தைப் பெறலாம்

## ஈழநாதம் பத்திரிகை சந்தா விபரம்

| காலம் | வெள்ளிநாதம் | தினசரி | வெள்ளிநாதமும் தினசரியும் |
|---|---|---|---|
| 1/4 ஆண்டுக்கு | 300/= | 750/= | 975/= |
| 1/2 ஆண்டுக்கு | 550/= | 1400/= | 1850/= |
| ஆண்டுக்கு | 1000/= | 2650/= | 3600/= |

தபால் மூலம் உங்களிற்கு பத்திரிகைகள் அனுப்பி வைக்கப்படும் சந்தாதாரர்கள் தொடர்புகொள்ள வேண்டியமுகவரி

பொதுமுகாமையாளர், (ஈழநாதம்)
யாழ்.சாலை, கிளிநொச்சி.



## தமிழீழப் போக்குவரவுக் கழகம்

## நடத்துநர் பணிக்கான விண்ணப்பம் கோரல்

பின்வரும் தகைமையுடைய ஆண்பாலோர் நடத்துநர் பணிக்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

*தகைமைகள் :–*

01. கல்வித்தகைமை :- க.பொ.த. (சாதாரணம்) கற்றிருத்தல்.
02. அகவை :- 23 தொடக்கம் 35 வரை.
03. உயரம் :- 05 அடி 05 அங்குலம்.

*குறிப்பு :–*

01. விண்ணப்ப முடிவுநாள் :- 20.05.2004
02. அடிப்படை மாதச் சம்பளம் :- $\frac{3600-4700}{10x110}$ +2000.00=5600.00
03. விண்ணப்பதாரருக்கான நேர்முகத் தேர்வு :- 23.05.2004 ஆகிய நாள் விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகாமையிலுள்ள தமிழீழப் போக்குவரவுக்கழகப் பணிமனையில் நடைபெறும்.
04. நேர்முகத்தேர்வுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வித்தகைமை, அகவை என்பனவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளோடு வருக.
05. விண்ணப்பப்படிவங்களை முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மல்லாவி, கிளிநொச்சி, வெள்ளாங்குளம், முகமாலை ஆகிய இடங்களில் உள்ள நேரப்பணிப்பாளர் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:-
முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப்பகுதி,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை, விசுவமடு.

(சி-9468)


## படத்திற்கு மெருகூட்டுங்கள் –67

நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.



### படத்திற்கு மெருகூட்டுங்கள் –67

.....................................................................

.....................................................................

.....................................................................

.....................................................................

பெயர் : .....................................................

முகவரி : .....................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –66



மு.சந்திரசேகரம்
அரசினர் வைத்தியசாலை
மல்லாவி.

### பரிசுக்குரிய வரிகள்

*தமிழீழக் கடலெங்கும் நாம் சென்று மீன் பிடிக்க*
*தடை போட்டவன் பகைமுடிப்பான் எம் தலைவன் என்று*
*தாம் பிடித்த மீனைப் பகிர்கின்றீரோ!*
*தளராத உறுதியோடு தமிழர் நாமென்று.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*ஆழ்கடலில் மீன்பிடிக்க அந்நியருக்கஞ்சி கரையிலே*
*அள்ளி வரும் மீன்களையே அன்றாட வாழ்க்கையாக்கி*
*அரைவயிறு கழுவ பகைவன் தந்த பரிசிதுவா தமிழர்க்கு*
*ஆனாலும் அண்ணன் காலத்தில் நம் அவலங்கள் நீங்கிடுமே.*

சந்திரிக்கா-சிவதாஸ்
குருகுலம், கிளிநொச்சி.

*கடல் நடுவில் மீன்பிடிக்க கடற்படையின் தடை*
*இடைநடுவில் இந்திய மீனவரின் கொள்ளை*
*தாயக கனவு நனவாகும் வரை, கரைவலை வீசி*
*கால் வயிரு நிரப்பலே எம்வாழ்வு.*

கா.சுஜோ
கிளிநொச்சி.

*எங்கள் கடல் அன்னையே!*
*உன்னை நம்பியோர் எத்தனை பேரம்மா*
*சிங்களமே வந்து சிதைக்காதே எம் வாழ்வை*
*எங்கள் உழைப்போஅதன் மடியில்தான்.*

வே.அகமொழி
வட்டக்கச்சி.

*ஈராண்டு அமைதியில் பாச உறவுகளுக்காக*
*வயிற்று பசி தீர்க்கவென கடலன்னை*
*மடியினிலே துணிவுடன் கையேந்திவிழுகின்றாயே*
*நிலைக்குமா இவை நிஜமாகுமா.*

கி.மகேஸ்வரன்
புதுக்குடியிருப்பு.

*கடாரம் வென்ற தமிழன் அவன்*
*சிங்களவன் தடுத்த கடலினிலே*
*இந்தியன் அத்துமீறும் கடலினிலே*
*அள்ளி வலை வீசிக்கொண்டு வந்த மீன்.*

க.ஜனார்த்தனன்
இல 29, கனகபுரம்.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகயம்** வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.




இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு ஆடி மாதம் 07 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.